உ

பரமபதி துணை,

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

கொங்கணர் அருளிச்செய்த

# நடுக்காண்டம் 500.

இஃது

மதுரை, வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பார்வையிட்டு,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,

**இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்**

குரு. இராமசாமிக் கோன்

அவர்களாற் றமது

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் தெரு

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

1934.

*Registered Copy Kight.*

விலை] [ரூபா 1

5548

உ

பரமபதி துணை.

பதினெண்சித்தர்களில் ஒருவராகிய

# கொங்கணர்

## நடுக்காண்டம் 500.

காப்பு.

ஆதியந்தமில்லாத வெளியுந்தாண்டி
அகன்றுநின்ற மூலகுரு பாதம்போற்றி
சோதியந்தத் துள்ளிருக்கும் பெரியோர்பாதந்
துரியவெளிக் குட்புகுந்த ரிஷிகள்பாதம்
நீதியென்று யெனையாண்ட போகர்பாதம்
நித்தம்நித்த மிறைஞ்சிநின்று நினைவாய்ப்பாரு
வாதியென்று பேரெடுத்தஞ் ஞானஞ்சொன்னேன்
மனோமணித்தாய் பதங்காப்பு மகிழ்ந்துபாரே. (1)

பாரப்பா வாதியென்றால் பூசைவேணும்
பரிவாகச் சிவன்வேணும் தியானம்வேணும்
நேரப்பா வாசியுட யோகம்வேணும்
நேராக லட்சயத்தை நிறுத்தவேணுஞ்
சேரப்பா மதியமுர்த முண்ணவேணுஞ்
செகமெல்லாம் வித்தையென்ற ஞானம்வேணும்
காரப்பா குருவினுட பதத்தைநித்தங்
காத்தவர்க்குக் குறைவில்லை கர்மம்போமே. (2)

கர்மமென்றுந் தர்மமென்று மிரண்டுசொல்வார்
கரையில்லாப் பிறப்பிறப்பு முண்டென்பார்கள்
மர்மமென்ற கருச்சொல்வேன் நன்றாய்க்கேளும்
மகத்தான பெரியோர்கள் சொல்லார்சொல்லார்
சென்மமென்ற செந்துக்க ளெங்கேயாச்சு
செந்துடனே திரும்பியது மெங்கேபோச்சு
தன்மமென்று சொல்லுதற்கு யுலகம்பேயாஞ்
சாற்றினேன் தெளிவாகச் சாற்றினேனே. (3)

சாற்றுறேன் சராசரங்கள் சீவராசி
    சகலபதம் புவனமொடு அண்டமெல்லாம்
எற்றுறேன் பூரணத்தி லுதித்ததப்பா
    யெவ்வாறு வுதித்ததென்றால் சொல்லக்கேளு
தோற்றுறதோ யேழுவகை யோனிநாலுஞ்
    சொற்பெரிய வித்துவதாய்த் துலங்கும்போது
முத்திறத்தோர் மேகசலங் கடல்நீர்போலே
    ஓகோகோ செகமெல்லாம் போதமாச்சே. (4)

போதமெங்கும் நிறைந்துநின்ற குருவேஅய்யா
    பூரணமே சொன்னவகைப் போக்கங்கேது
நாதமங்கே யோங்கிநிற்கப் பூரணத்தைச்சேர்ந்தால்
    நல்வினையுந் தீவினையும் பிறப்பாம்போச்சு
கீதமங்கே கெட்டிருந்து பெண்ணைக்கட்டி
    கெடுகிறதோர் மாண்பருக்குப் பிறப்பாமைந்தா
நீதமங்கே வாருதியிற் சலத்தைமேகம்
    நேராக இறைத்ததுபோல் பிறப்புண்டாமே. (5)

உண்டான பிறப்பதுவு மிரண்டதானால்
    ஓகோகோ பூரணத்தைத் தொட்டுமீளுந்
தண்டான பூரணத்தை நோக்கநோக்க
    தனிற்பிறக்க வொட்டாது தன்னிற்சேர்க்கும்
வண்டான ததுகோடி மதுவையுண்டு
    மருவியது பறந்தாற்போற் சொனனமார்க்கம்
பண்டான மதுவையுண்டு கமலத்துள்ளே
    பற்றிநின் றுறைந்தாப்போல் செனனம்போச்சே. (6)

போச்சென்று வொளிவென்றால் பூரணத்தைச்சேரு
    புகழாக யிறக்கவென்று லுலகத்திற்சேரு
வாச்சென்று ரெண்டையுந்தான் காணவென்றால்
    மக்களே காயசித்தி மகிழ்ந்துபண்ணு
நீச்சென்ற பூரணத்தைக் குளிகையிட்டுப்பாரு
    நேராகச் செகமெல்லாம் நிலைத்துப்பாரு
பூச்சென்ற பூச்செல்லாம் வெளியாய்ப்போகும்
    புகழாகப் பூரணத்தில் வாழ்வாங்காணே. (7)

வழலைச் சுண்ணம்.

காணப்பா முந்திமுந்தி வழலைச்சுண்ணம்
கைமுறையாய்ப் பண்ணறிந்தா லுப்புக்கட்டும்
விணப்பா யில்லாட்டா லுப்பில்வேதை
வெரும்பாட்டோ யெண்ணாதே விரைந்துகேளு
பூணப்பா பொருளுக்கு யுப்பேயென்று
புகழாகக் கைகொடுத்தார் போகநாதர்
பூணப்பா பூணியதை யுப்பைப்பார்த்தே
னோகோகோ யுலைத்தமுறை யுறைசெப்வேனே. (8)

உப்புக்கட்டு.

உலைத்ததப்பா வலியுப்புக் கட்டக்கட்ட
ஓகோகோ கரிக்குடிக்கித் தெரிந்துபோகும்
மலைத்ததப்பா மனமென்றும் பின்னும்பார்க்க
மக்களே யென்னசொல்வேன் மங்கமாச்சு
நிலைத்ததப்பா யென்றிருந்தேன் சரக்குண்ணாது
நோக்குறை யேதென்றே யெண்ணியெண்ணி
அலைத்ததப்பா வுப்பென்றுங் குருவைத்தேட
அரகரா அப்பலத்தி லறைந்திட்டாரே. (9)

அறைந்திட்டார் குருவென்று ஆட்டியைத்தானோக்கி
ஆறுதிங்கள் அர்ச்சித்து மாயிசொல்லாள்
இறந்திட்டுப் போவாயோ வென்றுயுன்னி
யிருந்துறைத்தேன் சமாதியிலே திங்களொன்று
உறந்திட்ட மனங்கண்டு ஆட்டிவந்து
உத்தமனே சிவன்சொல்வார் கேளுமென்றாள்
முறைந்திட்டு அண்டரண்டப் பதங்களெல்லாம்
மூவருக்கு மேலான முடிதிசொல்லே. (10)

சொல்லென்று யான்கேட்க யானறியேனென்று
துணையான பதமது விடுக்கேனையா
மையென்று யிடித்தென்னை மைந்தாமைந்தா
மயங்காதே யாதியுப்பை வளமாய்ப்பண்ணு
சொல்லென்று வுப்பேது யென்றுகேட்க
செப்பரிது செப்பரிது ஆயினுதம்
வல்லென்று பெரியோர்க்கு யீசன்சொன்னார்
வார்த்தையன்று கேட்டிருப்பேன் மறந்திட்டேனே. (11)

மறைத்திட்டாய் மறைத்திட்டாய் பாதகர்க்கு
மெய்பான மைந்தனுக்கு மகிழ்ந்து சொன்னீர்
கறைத்திட்ட கண்டான்று சொல்லக்கேட்டு
கைமுறையாய் யேழுலட்சங் காப்புச்செய்தாய்
குறைத்திட்டுப் போகாது பார்த்தேசொல்லு
குறைபாமோ பிள்ளைகட்குச் சொன்னாலம்மா
நிறைந்திட்ட யுப்பதுவும் வழலைமைந்தா
நோக யெண்ணெயைத்தா னீக்கிப்போடே. (12)

நீக்குவது யெவ்வாறு அம்மாசொல்லு
நிலையான கல்லுப்பைச் சுண்ணம்பண்ணி
வாக்குவது பழச்சாற்று லரைத்துக்கொண்டு
மைந்தனே வழலையின்மே லப்பிப்போடு
தாக்குவது ரவியி லெண்ணெகக்குந்
தனைப்பிறகு கவசத்தைத் தள்ளிப்போட்டு
ஆக்குவது கற்சுண்ணம் சினச்சுண்ணம்
அப்பனே பழச்சாற்று லப்பிப்போடே. (13)

போடப்பா வுலர்ந்தபின்பு சுண்ணத்துள்ளே
பொதிந்து வைத்துநீட்டு போகுமெண்ணெ
நீடப்பா யிதைவாங்கிக் காரமேற்ற
நிலையில்லை கரையில்லை யிந்தப்போக்கு
ஆடப்பா யிதைத்தொட்டு உப்பைக்கட்டு
ஆடுமிது யண்டரண்டப் பத்துமட்டும்
மூடப்பா பாழும் மனையுந்தாண்டி
ஓகோகோ நிற்குணத்தி லொட்டிப்பாரே. (14)

ஓடுமிந்த வழலையுட வுப்பில்வேதை
உத்தமனே வழலைவிட்டா லொன்றுமில்லை
ஆடுமிந்த வழலைபட்டால் சுண்ணமெல்லாம்
ஆகாகா குளிகையுமாங் கவனமாகுஞ்
சாடுமிந்த வழலையதால் சரக்குச்சாகும்
சார்வறிந்தால் சங்கமுதல் பத்துமேறு
யோடுமிந்த வழலைதொட்டு யூடயூட
யோகோ கரையில்லா வோட்டந்தானே. (15)

ஓட்டமென்றால் சித்தோட்டம் நெட்டோட்டமல்ல
　　உத்தமனே யுகாந்தவெளி கடந்தேயோட்ட
மாட்டமென்று லறிந்தமட்டு மாட்டோவல்ல
　　வகன்றவெளி பூரணத்தை யானந்தியாட்டு
காட்டமென்று லொன்றிரண்டு கட்டமல்ல
　　கோடான கோடியினங் கட்டியாடும்
நீட்டமென்றால் கண்மட்டும் நீட்டமல்ல
　　நிலையில்லை வழலையிட்டு நேர்மைதானே. (16)

தானென்ற வழலைபட்டால் சுண்ணமெல்லாஞ்
　　சதகோடி நவகோடி சங்கவேதை
வானென்ற வலுகடங்குங் குளிகைவேகம்
　　மக்களே பரிசமுதல் தூமமாகு
மூனென்ற வலுவுக்கு மிதுதான்வேணும்
　　வோகோகோ வழலையடா உயர்ந்தவேதை
கோனென்ற போகர்சொல்ல யானுங்கண்டேன்
　　குறிப்பாகத் தேவிசொல்லக் கூடினேனே. (17)

கூடினதோர் வழலைவிட்ட கட்டுமூன்று
　　குறிப்பாகச் சொல்லுகிறேன் விந்துகேளு
ஓடிமன மலையாதே உகந்துனக்கு
　　உண்மையா யுரைக்குகிறேன் வழலைமார்க்கம்
நாட்டியதோர் சாரத்தா லுப்புக்கட்டும்
　　நலம்பெரிய சீனத்தி லுப்புக்கட்டும்
மாட்டினதோர் சூடனுக்கு மூப்புச்சாகு (18)
　　மாதியென்ற கண்டருக்கு மூப்புச்சாமோ

சாகுமிந்தக் கருவாறில் சரக்குக்கெல்லாஞ்
　　சாதகமாய்ச் சரக்குகளைச் சத்தேகொல்லு
மாகுமிந்தச் சரக்குவிடக் கொஞ்சம்சமவேதை
　　அப்பனே குளிகைக்கு யாகாயாகா
வாகுமிந்த மலராது பூத்தசுண்ண
　　மல்லிகைப்பூப் போலாகாத் தண்ணீயுண்ணு
போகுமிந்த பரியாசங் கொஞ்சம்வேதை
　　புகழாகக் கையறியான் பூட்டும்வாறே. (19)

வாரான புடத்துக்கும் வழலைவேணும்
வரிசையுற்ற லவணத்தில் வழலைவேணும்
தாரான மெழுகுக்கும் வழலைவேணும்
சார்வான செயநீர்க்கும் வழலைவேணும்
கூரான குருவுக்கும் வழலைவேணும்
கொடியதொரு திராவகத்தில் வழலைவேணும்
நீரான நீருக்கும் வழலைவேணும்
நிலைத்துநிற்கும் புடத்துக்கும் வழலைதானே. (20)

தானென்ற வழலையுட மகிமைசொல்ல
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கிப்போனார்
கோனென்ற வருட்டியனுங் குறிப்புக்காணார்
கொக்கிறகு சூடிநின்றோன் கூறுங்காணார்
சேமனென்ற மனோன்மணியா ளீன்றநாதஞ்
செயலறியார் நாதாக்கள் யானுங்காணேன்
பானமன்று பூண்டிருந்த மவுனத்தாய்சொல்லப்
பலபலவாந் துறையாடி பறிந்திட்டேனே. (21)

பரிந்திட்டுப் பரிந்திட்டு விரித்துப்பாடி
பார்த்தவரை விரைத்தேயா னின்னங்காணேன்
சொரிந்திட்ட மேகத்தின் திவலைபோலத்
துறைகோடி கலாகோடி காமங்கோடி
புரிந்திட்ட புரியஷ்ட குருப்போலாக
போகத்திலே வரவதிலே புகழோகோடி
சரிந்திட்ட பூரணத்தின் விசாலம்போல
தடையதுவே நின்றாடு வழலைகாணே. (22)

காணப்பா முன்சொன்ன தொத்ததொக்கு
கதிர்கோடி யாதியென்ற வழலையாட்டு
ஊணப்பா ஊணப்பா மூலத்துள்ளே
உத்தமனே நந்திவந்து வுபதேசிப்பார்
பூணப்பா பூணப்பா வாசியூதி
புருவமய்யத் தேநின்று புகழ்ந்துகொண்டு
யாணப்பா யாணப்பா வருட்டியனைத் தாண்டி
யதுக்கடுக்கச் சென்றேறி மனோன்மணியைக்காணே. (23)

மணியான மனோன்மணியைப் பணிந்துபோற்றி
மாதாவென் வரையிலிரு வினையைநாட்டு
அணியாகப் பிறப்பிறப்பு ரெண்டினாலே
ஆசையென்ற வலைவிசிறிப் பெண்பொன்காட்டி
பிணியோடு வறுமைரெண்டாய் பெண்ணாண்ரெண்டாய்
பேரின்பஞ் சிற்றின்பம் பிறவிரெண்டாய்
கனியான சீவசெந்து மிவையொவ்வாகி
கரையற்ற யேழுவகைத் தோற்றம்நீயே. (24)

நீயென்று தானுணர்ந்தால் பிறவிபோச்சு
நிலையாத சிற்றின்பம் நிலைத்துப்போச்சு
தாயென்று யறியப்பூ ரணப்பாலூட்டி
சதாநந்த வெள்ளமதிற் றனிலேதோய்ந்து
ஓயென்று நின்றலைந்த பிறவிமாற்றி
ஒப்பில்லாப் பூரணத்தி லுயரயேற்றி
பாயென்று தடங்காட்டித் தமரினுள்ளே
பாச்சிவிக்கு மனோன்மணியைப் பரிந்துபோற்றே. (25)

போற்றுவது தெட்சணத்தால் போற்றவேண்டாம்
புகழான வாமற்றுற் போற்றிப்பூசி
ஆற்றுவது வினைப்பாற்று மெங்கேயென்றால்
அப்பனே பூரணத்தி லிருந்துபார்த்து
மாற்றுவது வொன்றுமில்லை யெல்லாம்போச்சு
மனம்போச்சு சினம்போச்சு மயக்கம்போச்சு
கூற்றுவது மூலமுத லாறும்போச்சு
குவிந்துநின்று ஒன்றுக்கு ளொன்றுமாச்சே, (26)

ஒன்றாச்சு இரண்டாச்சு அஞ்சுமாச்சு
ஓகோகோ யெட்டாச்சு பணிரெண்டாச்சு
பண்டாச்சு பழங்கதைபோல் கோடாகோடி
பலநினைவாய் பலகலையாய் பரப்புமாகி
குன்றாகி மலையாகி மேருவாகி
கொடுமுடியாய் சிறுகல்லாய்ப் பாறையாகி
தண்டாச்சு மரமாச்சு சராசரங்களாச்சு
சதகோடி சீவசெந்து செனித்தவாறே. (27)

வாறான யிக்கூத்துக் கொக்குமொக்கும்
மைந்தனே வழலையுட மார்க்கத்தாட்டு
கூறான தென்சொல்வேன் தொகையோகோடி
குவிந்துயிடங் கண்டேனு னென்பாரில்லை
தாறான வழலையுட கருவைக்கண்டால்
சாதகமாய் ஞானத்தின் கருவுங்காண்பான்
வீறான வார்த்தையென்ன வேடமென்ன
விரித்தபுலித் தோலென்ன வெறுமையோர்க்கே. (28)

வெறுமைவந்து மீண்டுதென்றால் ஞானம்போச்சு
வேதாந்த சித்தாந்த மிரண்டும்போச்சு
வெறுமைவந்து மீண்டுதென்றால் மனம்பேயாச்சு
மேகம்போல் கருவிவந்து விரவிப்போச்சு
வெறுமைவந்து மீண்டுதென்றால் அறிவும்போச்சு
மேன்மேலு மாசைவந்து மேலேயாச்சு
வெறுமைவந்தா லென்னநிஷ்டை யென்னஞானம்
வேரற்ற மரம்போல்தான் வீழ்வார்தானே. (29)

தாளகச்சுண்ணத்தால் வங்கச்சுண்ணம்.

தானென்ற வழலையிலே வீரங்கூட்டிச்
சமரசமாய் மத்தித்துத் தாளகத்தில்பூசி
தானென்று சுண்ணத்தில் வைத்தேயாட்டு
தனிற்றமஞ்ச ளற்றதுவுஞ் சலவையாகுந்
தானென்ற தாளகத்தை வங்கத்தப்பிச்
சமரசமாய்ப் புடம்போடச் சுண்ணமாகுந்
தானென்று வங்கத்தை நிமிளைக்கப்பித்
தாக்கியொரு புடம்போடச் சுண்ணமாமே. (30)

ஆமப்பா நிமிளையைத்தான் சாரத்தப்பி
ஆகாகா நீர்பறித்துச் சுண்ணமாகும்
வேமப்பா புடம்போட்டு ஊதிப்போடு
வெளியிலே பார்க்கத்தா ளகக்கொம்பாகும்
ஓமப்பா யிச்சாரங் கலலுப்புக்கட்டும்
உத்தமனே கடுஞ்சுண்ணம் பூப்போலாகும்
சாமப்பா பூரத்தில் சாத்தியூதித்
தனிப்பூரங் கண்டருக்குத் தாக்கியூதே. (31)

ஊதியதோர் கண்டர்சுண்ணஞ் சிங்கிக்காகும்
 உத்தமனே பொன்னீறுங் குளிகைக்காகும்
ஊதியதோர் குளிகையைச்சா ரணையைத்தீர்க்க
 ஓகோகோ பூரணத்தைத் தொட்டுக்காட்டும்
ஊதியதோர் வாசிகொழு மூலமூது
 உயரநின்ற பூரணத்தை யுற்றுப்பாரு
ஊதியதோ ரிவையறிந்தால் அவனேயோகி
 உற்றுணர்ந்து பார்த்தாக்கால் வாதமாமே. (32)

வாதமென்ற தொழிலுக்குச் சூதமூலம்
 வகைவகையாங் குருவுக்கு முப்பேமூலம்
நீதமென்ற பொருளதுகா ணிதுதான்மூலம்
 நிகழ்கோண நடுமூலங் கண்டமாகும்
வேதமென்ற புருவமய்யம் மேலாமூலம்
 வேரொன்று மரமொன்று துளிர்தானென்று
போதமென்ற பொருள்காணு மூன்றினாலே
 புகழான அடிமூலம் போக்குகன்றே. (33)

நன்றான போகத்தில் மனந்தான்சேரும்
 நலங்கியமா யத்தில்வா தனைவங்தோர்க்கு
கன்றான வாருதிக்குள் ரெண்டுகேளுங்
 கலந்துநின்ற ரவியொன்று மதிதானென்று
விண்டான ரெண்டுவினி லுப்புவுப்பு
 வேரொன்று மரமொன்று விளங்கப்பாரு
பண்டாக யதையடக்கி யிதைத்தான்கட்டும்
 பரிவாக மனமடங்கப் போதமாமே. (34)

போதமுற்று நின்றவனே ஞானியோகி
 புகழ்பெரிய உப்பறிந்தோன் வாதயோகி
நீதமுற்ற வுப்புக்குக் கருத்தானென்று
 நேராக நின்றதெனில் வழலைச்சுண்ணம்
காதமுற்றுத் தூரமல்ல ஞானக்கூறு
 கண்ணுக்கு ளடுக்கவது கருதிப்பாரு
வாதமுற்று நின்றதெல்லா முப்புக்குள்ளே
 வாய்திறந்து பேசாதே மவுனமாமே. (35)

மவுனமுற்று முனிவரன்று வாருதியையுண்டு
மகத்தான குண்டலியாற் கீழேவிட்டார்
மவுனமுற்று வாருதியு முப்போயாச்சு
வாகான சத்தியுட தாதுமுப்பு
மவுனமுற்று யிதையிடவே யெல்லாஞ்சாகும்
மறுத்தொன்று சொல்லுதற்கு வழக்கங்காணேன்
மவுனமுற்று மனமொடுங்கிப் போதமாடு
மாயமெல்லாம் நீங்கியந்த வரையிலேறே. (36)

ஏறுதற்கு வகைசொல்வேன் நன்றாய்க்கேளு
எளிதாக மூலத்தே யிருத்தியூது
கூறுதற்கு நெடுமூலங் கண்டத்தாது
குறையாமல் நாலுமந்த யெட்டிற்சேருந்
தேறுதற்கு மேல்மூலம் புருவமையத்தாது
செகசால மல்லவிது கண்டபேர்க்கு
மாறுதற்கு யிதைவிட்டால் ஞானமில்லை
வாதத்தி லுருபைவிட்டால் மருட்டிப்போச்சே. (37)

போச்சப்பா ஞானமெல்லாம் மாய்கையாலே
புகழுஞ்சிற் றின்பம்பே ரின்பமாச்சு
ஆச்சப்பா வுலகத்தி லென்னஞானம்
அறிந்துணர வேணுமென்றால் வாசியேறு
நீச்சப்பா பொறியாசை நிலையாமற்கொல்லும்
நேரான பதியைவிட்டுப் பாசமூடும்
கூச்சப்பா லவணமென்றால் சுண்ணத்துக்கு
குறையாது சாக்கெல்லாங் குத்திக்கொல்லே. (38)

இந்தோன்று—ரவியோன்று.

கொல்லுகிற உப்பெங்கே யிருக்குதென்றால்
குலாவிநின்ற வாருதியி லண்டஞ்சூழ்ந்து
வெல்லுகிற யிந்தொன்று ரவிதானென்று
வெவ்வேறாய் மேகத்தி னீராலாச்சு
சொல்லுகிறே னிந்தாலே ரவிதான்கட்டுஞ்
சூட்சமதை யறிந்தவனே வாதயோகி
மல்லுகிற மனத்தைமெள்ள பூரணத்திற்சேர்க்க
வாக்கடங்காப் பூரணத்தில் வாழுவாரே. (39)

பூரணத்தில் வாழுகிறே மென்றுநாடி
புகழாகச் சடம்விட்டு வேருய்நின்று
காரணத்தே நாமிருந்தோம் நாமேயென்று
கலந்துநின்ற பிரபஞ்ச மெல்லாம்நாடி
கூரணத்தே நின்றுபொருள் விரிந்தாப்போலே
கோடான கோடிதொழி லுப்பிலாச்சு
வாரணத்தே நின்றிலங்கு மாயிவந்து
வாசலிலே காத்திருப்பா லுப்பைக்கட்டே. 40)

கட்டென்று சொல்லுவது வெளிதோமைந்தா
கைகலந்து கட்டுவது கட்டின்மெத்த
மட்டென்ற கட்டுக்கு விபரங்கேளு
மணிபோலே நின்றுடுங் கரியினுள்ளே
தெட்டென்ற கட்டானல் கரிக்குடித்துப்போகும்
திறமான தொழில்களெல்லாஞ் சிதறிப்போகும்
ஓட்டென்று மனங்கட்டில் பூரணத்தையொட்டு
ஓகோகோ கட்டாட்டா லுலக்கும்பாரே. (41)

பாரப்பா தெருத்தெருவே கூறுமுப்புப்
பரிவாகக் கட்டறியாப் பசாசுவாதி
ஆரப்பா வெனக்கீடு சூதங்கட்ட
அறிவேனு னென்றுசொன்ன வாரதொக்கும்
நேரப்பா வெதினுலே வாதமாச்சு
நிலையாகப் புடமதிலே நின்றுபோச்சு
வேரப்பா வாதத்துக் குப்பேசொன்னேன்
வெளியோடே மனங்கலக்க வெளியுமாச்சே. (42)

வெளியான பூரணத்தி லுப்பைக்கட்டி
வேதிச்சுப் புடம்போடச் சுண்ணமாகுங்
களியான சுண்ணத்திற் சூதந்தொட்டு
கைமுறையாய்ச் சரக்கெல்லாஞ் சாகுஞ்சாகும்
அளியான சரக்கினுட வரிசைகண்டு
ஆடலாஞ் செகசால மற்றதெல்லாந்
தெளிவான யிந்திரிய மஞ்சுந்தள்ளி
சேர்மனத்தைப் பூரணத்திற் சித்தியாமே. (43)

சித்தியுள்ள பெரியோர்க்கு வாதஞ்சொன்னேன்
செகத்திலுள்ள காமுகற்குத் தொழிலைச்சொன்னேன்
நித்தியமாம் யோகியற்கு யோகஞ்சொன்னேன்
நிலையான ஞானிகட்கு ஞானஞ்சொன்னேன்
பத்தியுள்ள சிஷனுக்குப் பலிக்கச்சொன்னேன்
பரமறியா மூடருக்குப் பாமுஞ்சொன்னேன்
முத்தியுள்ளோ ரலையாமல் சிவத்தைப்பண்ண
மோட்சத்தை யேறுதற்கு யேணியாமே. (44)

ஏணியிட்டு ஞானத்தி லேறவென்றால்
யென்செய்வே னெறித்தேறும் பசித்தேளாளே
கோணிவிட்டு மனம்நோகும் பசியில்கூடி
கூப்பிட்டால் வாராது ஞானக்கூறில்
தோணிவிட்டுக் கருவிவந்து சூழ்ந்துகொண்டு
சுற்றியந்தப் பசியினுள்ளே சுழத்திப்போடும்
ஆணியிட்ட யென்வித்தை வந்துதானு
லாகார வந்தவழி யடுத்தவாறே. (45)

அடுத்தசெக வரிசைசொல்வேன் லவணக்கூறு
அப்பனே வழலையுப்பை முன்னேபண்ணு
முடுக்கமுற்ற வழலையினு லுப்பைக்கட்டு
மூதிண்ட வுப்பாலே பூரங்கட்டு
தடுத்தமூத்த பூரத்தால் தாளகத்தைக்கட்டு
தாளகத்தால் வங்கத்தைச் சாற்றிநீறு
ஒடுக்கமுற்ற வங்கத்தால் நிமிளைதனைக்கொல்லு
ஒருங்குகின்ற நிமிளையால் சாரம்நீற்றே. (46)

நீற்றிநின்ற சாரத்தை தொட்டேயாட்டு
நேரான வாருதி யுமக்குப்பத்தா
ஆற்றிநின்ற சாரத்தைக் கண்டர்க்கப்பி
அனல்மேலே போட்டிடவே சுண்ணமாகும்
போற்றிநின்ற துறைக்கெல்லாம் வீரங்கட்டி
புகழாகப் போட்டுவரச் சுண்ணமாகும்
தோற்றிநின்ற கண்டர்தமைச் சூதத்தாட்டு
துடியான சரக்குமது சிங்கிக்காகும். (47)

ஆமப்பா யிச்சூதந் தங்கத்தூட்டு
அணைத்துமெள்ளப் புடம்போடச் சுண்ணமாமே
வேமப்பா அண்டரண்டந் தொட்டதெல்லாம்
வெகுவேதை பார்த்தாக்கால் வாதமாமோ
ஓமப்பா உப்பாலித் தனையுமாச்சு
யொருதுளி சுக்கிலத்தால் பிள்ளையாச்சு
நாமப்பா கண்டபடி அஞ்ஞூற்றிற் சொன்னேன்
நலமான வெள்ளிக்கி மிதுதான்போக்கே. (48)

போக்கோடே யேறுதற்கு மிதுவேபோக்கு
புகழாக வாதசித்தி ஞானசித்தி
வாக்கோடே யெனையாண்ட போகர்சொன்னார்
மருவியந்தக் கருவோடி விரித்துப்பார்த்தேன்
தாக்கோடே குருசொல்லக் காணவேணும்
தனித்தனியே சுட்டாறுங் காணார்காணார்
துக்கோடே பால்குடித்த நாயைப்போலே
சுழன்றலைவார் வகையறிபார் துறையிதாமே. (49)

துறைவிட்டுச் சுடுகிறதோர் வாதிகோடி
சுழன்றலைந்து காணாத வாதிகோடி
அறையாடிப் பொறியறியா யோகிகோடி
அம்மாவின் பூசையில்லாக் கசடர்கோடி
மறையொட்டி யெட்டாத ஞானத்தோர்க்கு
மகத்தான சூதவித்தை மைந்தாகேளும்
குறையொட்டி விட்டகுறை வந்துதானால்
கூரான ரெண்டினமுங் கூடுங்காணே. (50)

காணப்பா குளிகையிற்சா ரணையைச்செய்ய
கவனமது கொடுபோகுங் கலருஞ்சித்தி
ஊணப்பா குளிகையிட்டு வாசியேற
ஓகோகோ யறுதலமு முறவாய்க்காணும்
வீணப்பா சமாதிகொண்டு பார்க்கப்பார்க்க
வெறுமனது பேயாக விரைந்துதள்ளும்
பூணப்பா குளிகையிட்ட யோகம்நேரு
பொற்பூவும் வாசனையும் போலதாச்சே. (51)

ஆச்சிந்தக் கூத்தெல்லா முப்பினாலே
　　அப்பனே முப்பதுவும் பூரத்தாலே
வாச்சிந்த யுப்பறிந்தா லவனேவாதி
　　வகையறிய மாட்டாதா னவனேமாடு
மூச்சிந்த விடங்காட்டு முப்புத்தாக்கு
　　முதண்டங் திரும்பிவிக்கும் முயன்றபூரம்
நீச்சென்ற நீச்செல்லாம் உப்புஉப்பு
　　நிலைத்தவனே நிசவாதி நினைவாய்க்காணே. 52)

காணப்பா கல்லுப்பை மணியாய்வாங்கி
　　கானகத்திற் புங்கம்வேர்ப் பாலையூட்டி
ஊணப்பா வுயர்ந்தபின்பு சாரத்தோடு
　　உத்தமனே வழலையிட்டு ஆட்டிப்பூசு
நீணப்பா யிதையுணர்த்திச் சினஞ்சூடன்
　　நேரான வெண்கருவா லரைத்துப்பூசி
ஆணப்பா புடம்போட வுப்புக்கட்டும்
　　ஆச்சரிய மாச்சரிய மறிந்துபாரே. (53)

அறிந்தயிந்த வுப்பெடுத்துச் சுண்ணமூது
　　அப்பனே யிந்தவுப்பை மெழுகுபண்ணு
அறிந்திந்த வுப்பாலே செயநீர்பண்ணு
　　யடங்கிநின்று உருகையிலே சாரமூட்டு
அறிந்திந்த சாரத்தால் பூரங்கொல்லும்
　　அப்பூரஞ் சினத்தை யதட்டிக்கொல்லும்
அறிந்தந்த சினத்தால் காரஞ்சாகும்
　　அக்காரம் விரைவிலிடு வேதையாமே. (54)

வேதையிடு மென்முறையைச் சொல்லக்கேளும்
　　வெவ்வேறுஞ் சுண்ணத்தில் வேதைகோடி
பாதையிது முந்திமுந்தி யுப்பேபாதை
　　பாங்குநப்பில் உப்பினுட பாதைகாணேன்
காலதப்பா யுப்படக்கிக் கட்டவென்றால்
　　கண்டவர்க்கு வெகுசுருக்கு கருத்தானென்று
சதைவிட்டால் வேதையெல்லாம் விழலாய்ப்போகும்
　　என்மகனே உப்பறிந்தால் பொருளதாமே. (55)

பொருளாலே சென்றேத்த அருளுங்காணும்
 போக்கேது வென்றாக்கால் சொல்லக்கேளு
பொருளாலே சிவனத்தைப் புகழ்ந்துகொண்டு
 போக்கான மூலத்தைச் சித்திபண்ணும்
பொருளான ஆறுதலம் நன்றாய்த்தேறி
 பொருமிநின்ற மதியினுள்ளே பானம்பண்ணி
பொருளான குருபதத்தில் நின்றுகூடி
 புகழ்பெரிய சமாதியுன் மனோயோடேறே. (56)

ஏறப்பா நாதவிந்து விராட்டியனுந்தாண்டி
 யெளிதான சத்திபதி னென்றுந்தாண்டி
ஏறப்பா யுன்மனேக்கி அடுக்கச்சென்றால்
 யெளிதல்ல வெளியொளியாங் காந்திமூன்று
ஏறப்பா யதுக்கடுக்க அத்தப்போதம்
 யேறிமெள்ளப் பூரணத்தை யேறிச்சேரு
ஏறப்பா வென்றுசொன்ன பேச்சுக்கொஞ்சம்
 யேறரிது மனக்குரங்கு யேமுேட்டாதே. (57)

ஓட்டாத குரங்கதுபோ லுலகவாதி
 உப்பறிந்து கொண்டவனே ஞானவாதி
மட்டாத கருக்கண்டான் மகத்தாம்வாதி
 வாய்திறந்து பேசாதே வழலையுப்பை
கொட்டாத தேளதுவும் பிள்ளைப்பூச்சி
 கொட்டுகிற தேளதுவே உப்புச்சுண்ணம்
தட்டாத தலத்திருக்குந் தட்டான்காண்பான்
 தனித்திருந்த உப்பசற்கு மருளுய்நேரே. (58)

நேரான வருளாலே பதங்களாச்சு
 நிலையான புவனமுத லண்டமாச்சு
வாரான வாருதியும் பூதமாச்சு
 மகத்தான சிவசரா சென்துவாச்சு
ஆறான யினங்தோறு மாண்பெண்ணாச்சு
 யங்கங்கே வுற்பனமு மயமுமாச்சு
சீரான தீதொக்கும் பொருளினுட்டுச்
 செப்புகிறே னுப்பாலே சிறந்தகூத்தே (59)

கூத்தனிங்கே யுண்டென்பா ருலகமாண்பர்
    கூகூகூ கொல்லுகிற யெமன்தானென்பார்
கூத்தனெங்கே யிருந்தயிட மென்றுங்காணார்
    கொடிதான மூலத்தே நின்றான்காண்பான்
கூத்தனுட யிடங்கண்டால் கூத்தைக்காண்பார்
    கூறியதோர் மெஞ்ஞானக் கூறுங்காணும்
கூத்தனுட கூத்தொக்கு முப்புக்கூத்து
    கூறினேன் சமனுகக் குழைந்துபாரே. (60)

குழையவில்லை யென்றுசொல்லி யென்னைப்பெற்ற
    கூறுன போகான்று கூறினார்கேள்
விழையவில்லை மெஞ்ஞான மென்றிருந்தேன்
    மெர்சமெனக் கதிகம்சா பத்தாலாச்சு
மழையுவில்லை பெண்ணான சிலைதான்மைந்தா
    மகத்தான சாபத்தால் பெண்ணுமாச்சு
தழையவில்லை யிருவரன்று புல்கிவந்த
    சாதகமாய்ப் பொருளுக்கு உப்பென்றாரே. (61)

உப்பாலே பொருளாச்சு கேளுகேளு
    உத்தமனே மனத்தாலே போதமாச்சு
அப்பாலே சீவனுக்கு ஆதியாச்சு
    அப்பனே மாயத்தால் ஞானமாச்சு
கொப்பாலே யஞ்சமனக் குரங்குந்தாண்டி
    குறியிலே சேரவொட்டாக் குணத்தைப்போல
உப்பாலே பொருளோடு அருளுஞ்சொன்னேன்
    உணர்ந்துநன்றாய்ப் பார்த்துமைந்தா யுரைத்திடாயே. (62)

உரைத்திட்ட வுப்பாலே சித்தர்கோடி
    ஓகோகோ ரிஷிகோடி வாதிகோடி
இறைத்திட்ட கேணியைப்போ லூற்றுமாகும்
    எடுத்தெடுத்து ஆடுகிறு ரின்னங்காணே
முறைத்திட்ட படியல்லோ பிரட்டுவாதி
    மூன்றென்பார் நாலென்பா ரோடிப்போகும்
மறைத்திட்டார் உப்பினுட வித்தையெல்லாம்
    மகத்தான குருசொல்லக் கண்டிட்டேனே (63)

கண்டிட்டேன் கண்டேனா னுப்பினாட்டு
கடையில்லை நிலையில்லை கவரோசங்கம்
ஒண்டிட்டே னிதனுடைய தொழிலைக்கண்டு
ஓடுதப்பா ஓடுதப்பா யுரைப்புக்காணேன்
பண்டிட்ட வுப்பாலே பத்திவிதவித்தை
பராபரைக்கு யீசனார் பகர்ந்தார்கேளு
மன்றிட்ட தாபமுதல் பதினாறுவேதை
மக்களே யிதனுடைய வரைகாணேனே. (64)

காணப்பா உப்பைவிட்ட வாதிகெட்டான்
காலத்தில் மனத்தைவிட்டு ஞானங்கெட்டான்
வீணப்பா வாசிவிட்ட யோகிகெட்டான்
வேதாந்தம் பார்த்துவிட்ட ரிஷியோகெட்டான்
பேணப்பா பூசைவிட்ட கிரியோன்கெட்டான்
பெண்ணாசை கொண்டிருந்த தவசிகெட்டான்
ஊணப்பா ஊணப்பா வுற்றுணர்ந்துபாரு
உப்பினாட வரையடங்கா முற்றுங்காணே. (65)

மூத்தான பூரணத்தின் பிறவிகேளு
மூதண்டக் கதலியுட பூவினுள்ளே
வித்தார மாயடுக் கடுக்காய்நின்று
விரிந்துடனே பொலுபொலென வீழுங்கீழே
பத்தாக வெடுத்தடுக்கப் பரிமளமோவீசும்
பாங்கான நாதத்தின் காதமைந்தா
அத்தான ரவிபடவே மாட்டிமாரும்
அப்பனே காற்றடிக்க அகன்றுபோமே. (66)

போமப்பா தீப்படவே நிர்மலமாய்நீக்கும்
புகழான அதன்பெருமை பூரணத்துக்கொக்கும்
ஆமப்பா யிதைக்கட்ட யாராலாகும்
ஆதியென்ற இந்தாலாம் உப்பாலாகும்
ஓமப்பா யித்தாலே கட்டிப்பின்பு
ஊநிகன்றாய்ச் சுண்ணம்போ லுரைக்கப்பண்ணு
சாமப்பா யிதினோடே சூதஞ்சேர்த்து
தாக்கியதை வில்லைதட்டித் தணலிலாட்டே. (67)

ஆட்டையிலே சேர்ந்துகொள்ளும் பிறகுவூது
அப்பனே கடுஞ்சுண்ணம் பூரமாச்சு
மூட்டையிலே வீரத்தி லருணம்போலாம்
முன்னேது பின்னேது அண்டநீறும்
காட்டையிலே தங்கமப்பா நீறிப்போகும்
கைமுறையாய்த் தாளகமோ சலவையாகும்
நீட்டையிலே கெந்தியுட மஞ்சட்போகும்
நிமிஷத்தில் கண்டருமோ வெள்ளையாமே. (68)

வெள்ளையென்ற சுண்ணமெல்லாம் பூரத்தாலே
வேரிதுக்கு யேதென்றால் வழலையுப்பு
கொள்ளையென்ற கொள்ளையெல்லாம் பூரந்தொட்டால்
கூறுகிறேன் சித்திரத்தை குறிப்பாய்க்கேளு
தள்ளையென்ற பூரத்தில் தாளகத்தைச்சேர்த்து
தனிவங்கத் தைப்பூசிப் புடத்தைப்போடு
உள்ளையொன்றி சுண்ணும்பாம் வங்கச்சுண்ணம்
உத்தமனே நிமிளைக்குப் பூசியூதே. (69)

ஊதிநின்ற நிமிளைநீர்ச் சாரத்திலப்பு
ஒகோகோ லெகுவாகப் புடத்தைப்போடு
ஆதிநின்ற சாரத்தைக் கெந்தகத்திலப்பி
அடைவாக யெரித்துயெடு சுண்ணமாகும்
வாதிநின்ற புடமிதுதான் மைந்தாகேளு
மயங்காதே கெந்தியைத்தான் கண்டர்க்கிட்டு
ஓதிநின்ற கண்டரைத்தா னதிலேபோடு
ஒப்பில்லாத் துரியத்துக் கொக்குங்கேளே. (70)

கேளப்பா கண்டருடன் வீரங்கூட்டி
கெடியாகச் சிவப்பாகும் பரிமேலப்பி
நீளப்பா புடம்போடத் தங்கச்சுண்ணம்
நேரான தங்கத்தில் வேதைகோடி
சூளப்பா யிச்சுண்ணம் சூதத்தூட்ட
துடியாது மணிபோலே கரியிலாடும்
விளப்பா யிச்சூதஞ் சுண்ணம்பண்ண
வெகுவேதை வெகுவேதை கரைகாணேனே. (71)

கரையில்லை சூதமென்ற சுண்ணமொன்று
கைமுறையாய் நாலிடையாங் தங்கத்தூட்டு
நிறையில்லா யஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நேராகப் புடம்போடச் சுண்ணமாகும்
நரைதிரையில் லாக்காய சித்திபண்ணும்
நடனவொளி யடுக்கநன்றாய் வழியுங்காட்டுந்
துரையில்லாச் சேனையுண்டோ வென்றாயானால்
துரைச்சூதஞ் சரக்கெல்லாந் தூதாளாச்சே. (72)

தூதாளை யேவிநின்ற துரையைப்போல
துடியான பரிச்சூதஞ் சுண்ணந்தொட்டு
வாதாள சரக்கோடு வேதைபோட
மண்ணென்ன கல்லென்ன மச்சமாச்சு
பாதாள பேதியிது கபனபேதி
படுமுன்னே கண்பேதி சத்தபேதி
ஏதாள வேணுமென்றா லதிலேவைக்கும்
மெடுத்தாடுந் துரைகோடி யெனச்சொல்வேனே. (73)

சொல்லறியார் சொல்லறியார் சூதப்போக்கை
சுகமாக மனங்கொண்ட மட்டுமாடும்
சொல்லறியார் பரிச்சுண்ணப் போக்கைப்போலே
சுகமாக ரசிதத்தைச் சுண்ணம்பண்ணுஞ்
சொல்லறியார் சிதவித்தை கோடாகோடி
துரைகோடி கரைகோடி சூட்சங்கோடி
சொல்லறியா ரெண்டினத்தால் கூட்டுதற்கு
சூட்சமொரு கருவுண்டு சொல்லக்கேளே. (74)

கேளப்பா அண்டம்போல் சாரஞ்சீவி
கெடியான மிளகோடு அபினிபூரம்
நீளப்பா மேனியிலைச் சாற்றாலாட்டி
நேராகப் பூசியதை ரவியிற்போடு
வாளப்பா யுலர்ந்தபின்பு வரிசைகேளும்
வர்கான சேங்கொட்டைத் தைலமூட்டு
தாளப்பா யிளங்கன்றின் சாணியப்பி
தனிச்சுண்ணச் சிலைசுத்தி ரவியிற்போடே. (75)

போட்டுலர்ந்த பின்பதனை யெடுத்துக்கொண்டு
புகழான் வங்கமது வுருக்கும்போது
நீட்டுவங்க மதிலழுத்தி யாறவைத்து
நேராகப் பிளந்தெடுக்கச் சாரஞ்சுத்தி
பாட்டுலர்ந்த வெங்காரம் பல்லுப்போல்வெட்டி
பருவமுட னாயுருவிச் சாற்றிற்கேளு
ஆட்டுமிந்த வீரமொடு பூரம்போட்டு
அதில்கலக்கிச் சாரத்தைத் தோய்த்துப்போடே. (76)

தோச்சதிலே போட்டுவரத் தினந்தான்மூன்று
தோயாமல் நாலுநாள் உலரப்போட்டு
ஆச்சதிலே காரசுத்தி சாரசுத்தி
யதுக்குளரை யிதுக்குளரைப் பலந்தான் றூக்கி
பாச்சதிலே பரிச்சூதச் சுண்ணமைந்தா
பாங்காக அரைப்பலந்தான் கூடப்போட்டு
மாச்சதிலே மத்தித்துக் கட்டிவைத்தால்
மகத்தான குருவாகு மாட்டியாடே. (77)

ஆடலாம் வாதமென்ற அங்கமெல்லாம்
அறிவுகொண்டு யிழுத்ததெல்லா மாகுமாகும்
நீடலா மப்படியே ரசிதச்சூதம்
நேரான காரமொடு சாரமூட்டி
ஊடநவ லோகமுப ரசமும்பண்ணு
உத்தமனே பத்திமுதல் வெள்ளியாகும்
காடெல்லாந் திரிந்தலைந்து சுட்டாலென்ன
காரத்தின் கடைமயிருக் கொவ்வாவாறே. (78)

ஒவ்வாது ஒவ்வாது வொன்றுமைந்தா
ஓகோகோ சுண்ணமென்ற சூதத்திற்கு
கவ்வாது கவ்வாது மற்றவித்தை
கரையற்று ஆடாது யெந்தப்போக்கும்
சவ்வாது சவ்வாது குருவிலூட்டி
சகலமுமே மணிபோலே நின்றேயாடுச்
தவ்வாது புழுகோடு குருவைக்கூட்டித்
தாக்கியெல்லா முநிடவே சுண்ணமாமே. (79)

ஆமப்பா யிக்குருவா லுப்பைக்கட்டி
அப்பனே சுண்ணும்பா யாகவூது
ஓமப்பா யிதனோடே வீரங்கூட்டி
ஒன்றாக மத்தித்து அண்டத்தப்ப
வேமப்பா அண்டமது மெழுகுமாகும்
விளங்கினதோர் பரிசனத்தில் வேதையாகுஞ்
சாமப்பா சரக்குயிந்த மெழுகைக்கண்டால்
சதகோடி வேதையென்ன அண்டந்தானே. (80)

தானென்று நின்றதொரு வுப்புச்சுண்ணஞ்
சம்பழச்சார் வழலையின்மேல் சாற்றிப்போட
கானென்ற யெண்ணெயெல்லாங் கக்கிப்போடும்
கழற்சியந்தக் கவசத்தை மருக்கால்கேளும்
வேனென்ற வெண்கண்டர் வீரம்பூசி
விளங்கின் றுலர்ந்தபின்சுண் ணத்தில்வைத்து
யானென்ற தீயெறிக்க யெண்ணெயெல்லாங்கக்கி
யம்மம்மா கடுங்காரம் யேறும்பாரே. (81)

ப்பாரப்பா வழலையுட சாரத்தாட்டிப்
பார்க்கையிலே சலமாகுஞ் சலத்திலுள்ளே
கேரப்பா கற்பூரப் பலகைபோட்டு
கோரக வாரியிட்டு லவதச்சுண்ணஞ்
சேரப்பா சவளையாமிச் சுண்ணத்துள்ளே
சிவப்பாகும் பரிசமுதல் தாமவேதி
ஆரப்பா யிதினுட்டைக் காணப்போறார்
அறுபத்து நாலுவித்தை யாடுங்காணே. (82)

காணப்பா யிச்சுண்ண முபாசங்கள்நீறுங்
கைமுறையா யின்னீறும் அண்டநீறும்
ஊணப்பா சரக்குமுத லோகநீறும்
உத்தமனே கரையில்லை சுண்ணப்போக்கு
தூணப்பா துரும்பாகுந் இரும்புந்தூளாந்
தூலத்தில் கலக்கமது சொர்ணமாகும்
பூணப்பா வாதத்தில் வாதுவந்தால்
பொன்னிரும்பா மிரும்புபொன்னும் பூட்டியாடே. (83)

ஆடலாம் வெகுகோடி யாட்டுமைந்தா
அறிந்ததுவு மறியாது மொக்கஆடும்
கூடலாங் குளிகையதில் நூற்றிப்பத்து
கொடுங்குளிகை யெட்டுமிதிற் கூட்டலாகும்
ஊடலாம் பூரணத்தில் சென்றுஆடி
உயர்ந்துநின்ற நிற்குணத்தி லுன்னியாடி
நாடெலாந் திரிந்துநால் திசையுங்கண்டு
நந்திமுதல் நால்வரைப்போ லிருக்கலாமே. (84)

இருக்கிறதோர் நந்திமுதல் நாலாம்பாட்டன்
எவ்வாறு யிருப்பார்க ளென்றுபார்த்தேன்
செருக்கிறதோர் பூரணத்தி னுள்ளேசொக்கி
துரியத்தின் சுடர்போலத் தேகமாகி
திருக்கிறதோர் மனத்தையந்த பூரணத்தில்வைத்து
செகத்தையெல்லா மித்தையென்று தெளிந்தார்நால்வர்
அருக்கிறதோர் அருக்கமெல்லா மனந்தான்மைந்தா
அந்தருக்கைத் தீர்த்தவனே ஞானியாமே. (85)

ஆமிந்த யுலகத்தி லிருந்தபேர்கள்
அம்மம்மா ஞானமெல்லா மறிந்தேனென்று
ஓமிந்தப் பெண்டுவிட்டேன் பிள்ளைவிட்டேன்
உடுத்திருந்த சீலைவிட்டேன் வீடுவிட்டேன்
தாமிந்தச் சங்கைவிட்டேன் தளங்கள்விட்டேன்
சகலமெல்லாம் விட்டகன்ற தியாகியானேன்
போமிந்தப் படியிட்டும் ஞானியல்ல
போக்கறியான் சொல்லுகிற புதுமைதானே. (86)

தானென்ற கருவறிந்தோன் விட்டாலென்ன
சமுசார மாயைதொட் டிருந்தாலென்ன
ஊனென்ற வுடம்பெடுத்தா லெல்லாமுண்டு
ஒகோகோ கோபமென்ற முனையைப்போக்கு
ஆனென்ற அகங்காரம் சித்தம்போக்கி
அப்பனே சஞ்சலத்தை யகலவிட்டு
வானென்ற மனங்கூட்ட அதுவேஞானம்
வாய்ஞானந் தானொன்றும் வாருவாறே. (87)

வாராது வாராது யெண்ணப்பட்டும்
வருகிறது போகாது யென்னைவிட்டும்
நேராது நேராது யென்னதொட்டும்
நேரிலது குருசொல்லில் நேர்ந்துபோனும்
தீராது தீராது பிறவிவாசம்
தேனுக்கு ளரிசியைப்போல் தெளிக்தோன்வாசம்
சாராது சாராது யெந்தநூலின்
சாஸ்திரந்தா னேதுசெய்யுஞ் சண்டாளர்க்கே. (88)

தீயோர் செய்கை.

சண்டாள னிக்தநூ லாகாதென்பான்
சாதகமா யமைத்தநூல் நல்லதென்பான்
சண்டாள னுவதென்ன பெரியோர்சொன்ன
சாஸ்திரத்தை யேதென்ற சண்டிமாடு
சண்டாளன் பொருளாலே அருளேதென்பான்
சாஸ்திரத்தைப் பாராத சவுங்கச்சென்மம்
சண்டாளன் பொருள்விட்டுத் துறவியாகி
சண்டனுள் நாய்போலே சுழலுவானே. (89)

சுழலாமல் கரையேற வென்னவென்று
சூஸ்திரத்திற் பார்ப்பார்கள் பெரியோர்வல்லோர்
அழலாமல் வறுமையிலே யென்னபாவம்
அதனாலே யெமவித்தை யடுத்துப்பார்பார்
விழலாமோ பிறவியிலே யென்னபுத்தி
வேதாந்தம் பார்த்துணர வேணுமென்பார்
விழலாமோ நரசென்மம் யெடுத்ததய்யோ
வெளியோடே மனமுறைத்து மேவுவாரே. (90)

பூரணப் பெருமை.

மேவுவதுக் கெப்படித்தா னென்றால்கேளும்
விரைந்துண்ண லுறங்குவது சஞ்சாரத்தில்
தாவுவது மேல்மூலத் திருந்துகொண்டு
சத்திநிறம் பூரணத்தைப் பாருபாரு
கூவுவதோர் சாவலுக்கு யிரவிவார
குறிகண்ட வாறுபோ லுனக்குங்காணும்
பாவுவது மனமர்தப் பூரணத்தைப்பரவும்
பறந்தூறுங் குழவிவைத்த புழுப்போலாமே. (91)

ஆமப்பா மனமொன்றாய் நோக்கநோக்க
அடுத்துவந்து போதமுன்னை யழைத்துக்கொள்ளும்
வேமப்பா நல்வினையாந் தீவினைகளெல்லாம்
வேறும்பேச்சுச் சொன்னதினால் போதமாச்சு
நாமப்பா யிப்படியே நிலைத்துக்கண்டோம்
நாதாந்தப் போக்கினுட பதத்தைப்போற்றி
காமப்பூ லாசைகொண்டு வாதிகெட்டு
கரையேற்ற மில்லாமல் கவிழ்ந்திட்டானே. (92)

குண்டலி யோகம்.

கவிழ்ந்திட்ட குண்டலியைக் காலாலாட்டி
கனலோடே யாறுவரை கலந்துயேறி
கவிழ்ந்திட்ட யசபையிலே சென்றுகூடி
களங்கமற்ற அதனுடைய யமுர்தமுண்டு
கவிழ்ந்திட்ட யசபையிலே யேட்டைத்தள்ளி
கடைநாளைப் பார்பாரு மைந்தாமைந்தா
கவிழ்ந்திட்ட மனங்கூட யெல்லாங்காணும்
கவியாட்டால் பொரியோடே கலந்துபோமே. (93)

யோகியின் தன்மை.

போமப்பா பொரிவந்து புகுந்துதானால்
பூட்டுகிற லெட்சயமும் போகும்பொய்யாய்
சாமப்பா சடமலைந்து யிரணங்கெட்டு
சாராதே பொருளுமென்று தயங்கியேங்கி
நோமப்பா மனம்புண்ணாய் நொந்தாலென்ன
நுணுக்கத்தில் நுணுக்கமென்ன பிர்மவித்தை
ஓமப்பா யிதுக்கொக்கும் பூரத்தாட்டு
உற்றுணர்ந்து பார்த்தவனே யோகியாமே. (94)

யோகியென்றால் சையோக மல்லஅல்ல
உத்தமனே சிவயோகி ராஜயோகி
யோகியென்று லடையோகி யோகியல்ல
யொன்றாகக் கண்டிருந்த ஞானயோகி
யோகியென்று லாசையுள்ளோன் யோகியல்ல
யுருப்பெற்ற ரசயோகி சித்தயோகி
யோகியென்றால் கர்மமுற்றோன் யோகியல்ல
ஒருநொடிக்குள் பூமிசுற்றுங் குளிகையோகே. (95)

குளிகையின் போக்கு.

குளிகைதனைக் கண்டறியா ருலகவாதி
கூறுன சாரணையைப் பண்ணமாட்டார்
குளிகைதனைப் பண்ணிநல்ல பெண்களோடே
கூடுதற்குத் தம்பனமாய்க் குலாவிச்செய்வான்
குளிகைதனில் சத்திட்டு யுபசரங்களூட்டி
குணத்தோடே வாயில்வைத்து ஞானம்பாரார்
குளிகைதன்னிற் கலையறிந்து கோபந்தீர்த்து
கொடுகவனத் தோடறியார் குலாமர்தானே. (96)

தானென்ற குளிகையிலே வேதைசொல்ல
சதகோடி சிவகோடி சங்கந்தாண்டும்
கோனென்ற மூலகுரு வாடியாடிக்
குறிப்பறிய மாட்டாமற் கூறிப்போனர்
வானென்று யாடுதென்றல் சேலத்தைத்தூக்கு
மருமத்தைச் சொல்லுதற்கு வாய்தானுண்டோ
பானமன்று உண்றிருந்த யெந்தாய்சொன்னள்
பராபரமும் சூதமும்நேர் பாரென்றுளே. (97)

வேங்காரக் கட்டு.

பாரப்பா வெண்கார மாடுமாட்டு
பணபேதி சதபேதி சத்தபேதி
தூரப்பா வாதமென்ற விருட்சத்துக்குத்
தொடுமுன்னே யுருக்கினமாஞ் சுண்ணமாகுஞ்
சீரப்பா கண்டிதனில் நீரைக்கொல்லச்
செகசாலத் தொழிலெல்லாந் திறமாயாடும்
ஆரப்பா யிதன்பெருமை யறியவல்லார்
அரனறிவா ராத்தாதா னறிவாள்தானே. (98)

அறியாத வெடியுப்புக் கல்வத்திட்டு
யந்திடைக்கி நாவிலொன்று கல்லுப்பிட்டு
மறிவாகப் பழச்சாற்று லாட்டுஆட்டு
மைந்தனே யதுமெழுகா யானபின்பு
பிறிவாக யிருபதுக்கு வொன்றுகேளும்
பேரான வழலையுடச் சுண்ணம்போட்டு
நெறியாக வழித்துவைத்துப் புடத்தைப்போடு
நேராகச் சுண்ணம்பு முப்புப்பாரே. (99)

வாரப்பா சுண்ணும்பைப் பனியில்வைக்க
பனிச்சென்று சலமாகுந் தெளிவைவாங்கி
சேரப்பா யிதினுள்ளே வீரம்பூரம்
சேர்த்தரைத்து வெங்காரப் பலகைக்கப்பு
நேரப்பா ரவிபடவே காரங்கட்டும்
நேர்பாகச் சூடனுட புகையில்வாட்டி
நீரப்பா முன்னீரால் சூடனூட்டி
நினைவாகப் பலகையின்மேல் பூசிப்போடே. (100)

போட்டுவைக்க வேபட்ச முழுக்கட்டாகும்
புகழ்பெரிய காரத்திற் காரமேற்றி
மூட்டிவைக்கச் சிப்பிநீர்க் குள்ளேவைத்து
முனையாகத் தீமூட்டிற் சுண்ணமாகும்
ஊட்டுவைக்கக் காரமதில் ரெட்டிப்பூட்டி
உற்றரைக்கச் செயநீராங் காரவேகம்
பூட்டுவைக்க யிதுக்குள்ளே வீரம்போடு
புகழாகச் சிவப்பேறும் போக்கைக்கேளே. (101)

கேளப்பா வெண்காரந் துவைத்துக்கட்டுங்
கெடியாகச் சரக்கெல்லாந் துவைக்கக்கட்டும்
நீளப்பா பூரமதிற் காரசாரம்
நிறைநிறையாய்த் துவைத்துடனே கட்டும்வாட்டத்
தாளப்பா காரவித்தை சரக்கைக்கொல்லச்
சவ்வாது பட்டதெல்லா மணிபோலாடும்
ஆளப்பா புனுகுபட்டா லெல்லாஞ்சுண்ணம்
அதுக்கதுக்கு முறைசொல்லத் தடங்காதேடே. (102)

எட்டிலே யெழுதவென்றால் காரவித்தை
யென்னாலே கூடாது யென்னசொல்வேன்
மூட்டிலே முட்டவென்றால் சுண்ணும்பாட்டு
பூவுலகுங் கொள்ளாது முன்பின்தோணு
ஆட்டிலே யுருக்கினத்தை யாடவென்றால்
அகாரசிவ உகாரநம சிவத்தாலாகும்
நாட்டிலே யிருந்தவனோ யித்தைக்காண்பான்
நாதாக்க ளறிவார்கள் காரந்தானே. (103)

வேதைப்போக்கு.

காரமென்று யேதுக்குப் பேரதாச்சு
கடுங்கார மதுமேலே யெரிந்ததானல்
வீரமென்ற வீரமது குதிரையாச்சு
மேல்வைக்குங் கல்லணைதான் வங்கமாச்சு
பூரமென்ற கடுவாளம் வாய்க்குமாச்சு
புகழாக முகவட்டுத் திருசுமாச்சு
வாரமென்ற அரிதாரம் அங்கவடியாச்சு
அக்குதிக் கடிவாறும் சாரமாச்சே. (104)

ஆச்சப்பா சவுக்கதுவுங் கெந்தியாச்சு
அதுமேலே ராவுத்தன் சூதமாச்சு
வீச்சப்பா லாடமது நிமிளையாச்சு
வீதியெங்கே யென்றக்கா லகண்டவீதி
மூச்சப்பா பறித்துதென்றல் மலைபொன்னாகும்
மூதண்டஞ் சுற்றிவருங் குதிரைவேகம்
ஒச்சப்பா சதகோடி யிவ்வேதைக்குள்
உத்தமனே காரத்தி னுண்மைகேளே. (105)

உண்மையின்னஞ் சொல்லுகிறேன் காரத்தோடே
உத்தமனே வீரமிட்டு ஆட்டிநன்றாய்
வண்மையென்ற வழலையின்மே லப்பிப்போட
வாருதிபோ லெண்ணைவரு மைந்தாபாரு
தன்மையென்ற சவுக்காரங் கடுங்காரமேற்ற
சகலசரக் கிதைக்கண்டால் தயங்கிச்சாகும்
அன்மையென்ற சவுக்கார மாடுமாட்டு
அதன்காரம் யாரோடு சொல்லுவேனே. (106)

சுண்ணப் போக்கு.

சொல்லரிது சொல்லரிது சுண்ணமார்க்கம்
தொட்டதெல்லாம் பட்டுடனே வேதையாகு
மல்லரிது மல்லரிது சகலவஸ்துதும்
மணிபோலே நின்றுடும் வழலைவேகம்
வெல்லரிது வெல்லரிது சகலம்நீறும்
வெறுநீரோ வல்லவது வேதைகோடி
கொல்லரிது கொல்லரிது வழலைப்பாம்பை
கொன்றவனே முழுவாதி குறிப்பைக்கேளே. (107)

குறிப்பான வழலையில்சா ரத்தையாட்டி
    கொப்பளிக்குஞ் செயநீரு மைந்தாபாரு
நெறிப்பான யிந்நீரிற் பூரம்போட்டு
    நேராக வாரியிட்டு ஊதச்சுண்ணம்
பொறிப்பான பூரத்தில் வீரமாட்டி
    புகழுங்கல் லுப்பிலப் படியேபோட்டு
மறிப்பானே வாதிமகன் வாதிவுப்பை
    மைந்தனே யிந்தவுப்பைச் சுண்ணமூதே. (108)

ஊதியதோர் கல்லுப்புச் சுண்ணத்தோடே
    உத்தமனே வீரமிட்டுத் தாளகத்துக்கப்பி
ஆதியதோர் தாளகத்தை வைத்துஆடி
    அப்பனே சுண்ணமாம் வங்கத்தப்பு
கோதியதோர் புடம்போட வங்கச்சுண்ணம்
    குறிப்பாக யிச்சுண்ணஞ் சாரத்தப்ப
வேதியதோ ரிச்சுண்ணம் வைத்துஆட்ட
    வெள்ளெலும்பு போலிருக்குஞ் சுண்ணமாச்சே. (109)

சுண்ணமென்ற சாரத்தை வீரத்தப்பித்
    துடிப்படவே வைத்தாட்டி யூதிப்போடு
சுண்ணமென்ற சுண்ணமல்ல வீரச்சுண்ணஞ்
    சூட்டியதில் வீரமிட்டு துருசுக்கப்பு
சுண்ணமென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
    துப்பரவாய்க் கண்டருமே சுண்ணமாகுஞ்
சுண்ணமென்ற கண்டரைத்தான் சூதத்தாட்டு
    துடியாது சூதமென்ற யானைசாமே. (110)

ஆனையென்ற சூதமிதில் செத்துதானல்
    அப்பனே மற்றதுக்கிங் கேதுசொல்வேன்
ஆனையுடன் போராடிக் குத்திக்கொண்டால்
    அவனல்லோ முழுவாதி யவனேவீரன்
ஆனையுடன் போராடி யறியார்மாண்பர்
    அரகரா வாதமெல்லாம் பீவேனென்பார்
ஆனையுடன் ஆட்டல்லோ வாதமாட்டு
    அறிந்தவனே சிவயோகி யறியானையே. (111)

அறியாமூடர்.

காயென்று லோகத்துக் காகுமாகும்
    நல்லசென்மம் நல்லசென்ம மறிவுமெத்த
சீயென்ற சென்மமென்ன திருட்டுவாதி
    செகத்திலுள்ளார் தூசித்தால்; வாதம்போச்சு
வாயென்றால் கிழிச்சதனில் மண்ணைப்போட்டு
    வாதமூன்று யென்றுசொல்லி யாடுமக்காள்
பாயென்ற குளிகையிட்டுப் பாய்வாயென்று
    பரிவாக மயிர்பிடித்துப் பரித்துச்சன்னே. (112)

சன்னப்பா வாதமில்லை யென்றானால்
    தருதுரும்பு ருண்டென்பா ரில்லையென்பார்
கண்ணப்பா கண்டாக்கால் மெய்தானென்பார்
    காட்டுகிற தொழிலாளி யார்போவென்பான்
மண்ணப்பா மூர்க்கிமூர்க்தி யவன்வாயிற்போட்டு
    மயிர்பிடித்துக் கொண்டங்கே வேதைகாட்டு
பொன்னப்பா வுலகத்தில் நாலாசாதி
    உலுத்தருஞ் சண்டாள ருண்டேபாரே. (113)

வீரமணி.

பாரப்பா துருசிகொண்டு கட்டிவீரம்
    பணிவாக மணிபோலே யெடுத்துக்கொண்டு
நேரப்பா யிதிலொன்று தங்கம்நாலு
    நேர்துருக்கி யிதையிட்டு மணிபோலாக்கி
நேரப்பா யிதன்மேலே துருசிவீரம்
    நிறமான புழுகோடு வழலைச்சுண்ணம்
ஓமப்பா பூசியதை யுலர்த்திப்பின்பு
    உத்தமனே அஞ்சுசுண்ணக் குகையாலூட்டே. (114)

குகையோடே புடம்போடத் தங்கம்நீறுங்
    கொடியநீர்க் கொள்ளிதனைக் கொக்குமொக்கும்
வகையோடே வாங்கியிதை யரைத்துக்கொண்டு
    மக்களே முன்சார காரங்கூட்டி
துகையோடே வில்லைகட்டி சுண்ணம்பப்பி
    சூட்டியொரு புடம்போடச் சுருக்குமெத்த
பகையோடே கொன்றுதின்னுஞ் சரக்கையெல்லாம்
    படுமுன்னே மலைமுதலாய்ப் பழுக்கும்பாரே. (115)

பழுக்குமப்பா பழுக்குமப்பா ஒடுங்கல்லும்
பணபேதி சனபேதி சத்தபேதி
இருக்குமப்பா தொட்டதெல்லாங் கோடாகோடி
யெம்மட்டோ யெம்மட்டோ யாணுங்காணேன்
முழுக்குமப்பா முழுக்குமப்பா வாதமெல்லா
மூதண்டம் பேதிக்கு முன்பின்னில்லை
அழுக்குமப்பா அழுக்குமப்பா ரசங்களெல்லாம்
அரகரா சிவசிவா யறியிலேனே. (116)

போற்குரு வேதை.

அறியாத பொற்குருப்போல் வெள்ளிபண்ணில்
அம்மம்மா சிலையேது மனந்தானேது
மறியாது மரமேது அஸ்திதானேது
மண்ணேது கல்லேது மலைதான்வெள்ளி
குறியாது குறிப்பதிலே கோடாகோடி
கூப்பிட்டால் கேட்காது வாதக்காடு
பிறியாத சிஷனுக்கு யிக்குருவைச்சொல்லி
பேரின்ப மார்க்கமெல்லாம் பிலக்கப்பண்ணே. (117)

பண்ணப்பா பொற்குருவா லுப்பைக்கட்ட
பறக்குமப்பா பறக்குமப்பா தாண்டியாடி
பண்ணப்பா பொற்குருவால் வழலைநீற்று
பார்க்கரிது பார்க்கரிது பாடமாட்டேன்
பண்ணப்பா பொற்குருவால் துருசுச்சுண்ணம்
பாருலகும் கொள்ளாது விண்கொள்ளாது
பண்ணப்பா பொற்குருவால் சாரச்சுண்ணம்
பறந்துஒரு பொட்டிடவே மலைபொன்னுமே. (118)

புத்திகூறல்.

பொன்னுமோ பொன்னுமோ வென்றுசொல்லி
போக்கறியா வாதிநின்று புலம்பினார்கள்
பன்னுமோ பன்னுமோ சாஸ்திரத்தையென்று
பலபலவாம் நினைவாலே கெடுக்கிறார்கள்
தின்னுமோ தின்னுமோ கல்லுப்பென்று
தேறாமல் வெகுவாதி செத்துப்போனார்
முன்னுமோ பின்னுமோ வென்றுசொன்ன
மூடர்க்கு வாதமென்னு மோசந்தானே. (119)

மோசமையா சூதத்தைக் கட்டாவிட்டால்
முன்னுமில்லை பின்னுமில்லை முடக்குமில்லை
ஆசமையா படர்ந்தகண்ணால் நோட்டம்பார்த்த
கதையொக்கும் வாதியிட்ட கருவதெல்லாம்
பாசமையா சூழ்ந்துகொண்டா லென்னஞானம்
பரியாச மோகெடுவாய் ஞானம்போச்சு
வீசமையா சுக்கிலந்தான் பிள்ளையாச்சு
வேதைக்கு மவ்வளவு பீசங்கூட்டே. (120)

கூட்டுவது பரிச்சூத முண்டுதானால்
குலாவியொரு பொட்டாலே மேருபொன்னும்
ஆட்டுவது யென்னயின்னம் வாதஆட்டு
அறிந்தமட்டு மாடலா மறியார்கோடி
மூட்டுவது யென்னயினி யெங்கேவேண்டாம்
முறைமுறையாய்த் தொட்டதெல்லாம் வேதையாகும்
பூட்டுவது முந்திமுந்தி யொன்றேபூட்டு
புகழறிந்தால் வெகுபூட்டு ஆடலாமே. (121)

ஜெனன மார்க்கம்.

ஆமப்பா செனித்தவுடல் மறிக்கும்போது
அவரவர்தா வினைவழிலே சென்றுபுக்கும்
ஓமப்பா செந்துவிலே நோக்கமானால்
உத்தமனே செந்துவென்ற வுடலைக்கொள்ளும்
காமப்பா பூரணத்தில் நின்றுயென்ன
நலமான பூரணத்தை நாடிப்போகும்
காமப்பால் மோகத்தை நினைத்தோராகில்
கைமுறையாய்க் கோழியென்ற செனனமாமே. (122)

செனனமில்லை மரணமில்லை ஞானிக்கப்பா
சிவதீட்சை யானதினால் செப்பக்கேளு
செனனமில்லை மரணமில்லை யோகியோர்க்கு
செகமெல்லா மித்தையென்று யிருந்ததாலே
செனனமில்லை மரணமில்லை செகத்திலப்பா
சிவராஜ யோகரிஷி முனிவர்க்கெல்லாம்
செனனமில்லை மரணமில்லை காயசித்தி
செய்துகொண்ட பெரியோர்க்குச் செப்பக்கேளே. (123)

## பூரணம்.

கேளப்பா பூரணந்தா னெவ்வாறென்றால்
கெடியான கருப்புமல்ல சிவப்புமல்ல
வாளப்பா மஞ்சளல்ல பச்சையல்ல
மாவெளுப்பு தானுமல்ல மஞ்சுமல்ல
நீளப்பா நீலவேதோ நோக்கங்காணும்
நேரான வெட்டவெளி நேர்ந்தோன்காண்பான்
தாளப்பா யிதுக்குமனந் தன்னைக்கட்ட
சச்சிதா னந்தத்திற் சாரும்பாரே. (124)

சாருவது யெங்கேயென்றால் மூக்கிற்சாருஞ்
சமத்தோடு யிருந்தால்தத் துவத்தைச்சாரும்
சாருவது யெங்கென்றால் பிடரியிலுஞ்சாரும்
சாதகமாய் நெஞ்சினுள்ளே தாக்கச்சாரும்
சாருவது மூலத்தில் நோக்கச்சாரும்
சகலசித்து மஷ்டாங்கந் தன்னைச்சாருஞ்
சாருவது மஞ்சுதலஞ் சாருமப்பா
தப்பாம லட்சயத்தைத் தாக்கிச்சாரே. (125)

தாக்கியஞ்சு தலங்கண்டோன் மகத்தாம்யோகி
தப்பாது தப்பாது யிதுவேபோக்கு
தாக்கியஞ்சு தலங்கடந்தோன் ஞானயோகி
தவசியென்றால் வனதவசி சத்தில்சேர்வான்
தாக்கியஞ்சு பதமறிந்து அகாரத்தில்புக்க,
சச்சிதா னந்தமென்ற நாமமானார்
தாக்கியஞ்சு லட்சயமே சாதுக்கப்பா
தாயான குருசொல்லச் சார்ந்துயேறே. (126)

ஏறுவது கடினத்துக் கொக்குமொக்கு
மென்மகனே வாதமென்ற யேற்றமேத்த
தேறுவதோர் மனயேற்றம் போலேமைந்தா
செயலான சூரக்கெல்லாஞ் சுண்ணாம்பாகு
மூறுவதோ ருத்தமேல் கோடாகோடி
உத்தமனே வாதமுறை யுரைக்கமாட்டேன்
மாறுவதோர் மனந்திரும்பி விரிந்ததானால்
மட்டுண்டோ லெக்குண்டோ மைந்தாசொல்லே. (127)

சொல்லறியோஞ் சொல்லறியோங் கண்டத்துள்ளே
　　சொக்கிநின்று வந்தசுங் தாமேஐயா
மல்லறியோ மல்லறியோ மேறமாட்டோம்
　　மனங்கட்ட வகையறியோம் வழியுங்காணேம்
நில்லறியோம் நில்லறியோம் நெறியினுள்ளே
　　நேராகச் சாஸ்திரத்தில் நிலைக்கமாட்டோம்
புல்லறியோம் புல்லறியோம் பிள்ளைகளைப்பெற்ற
　　புகழ்பெரிய நிற்குணமே போக்கைச்சொல்லே. (128)

போக்குமினி யென்னசொல்வேன் மக்காள்மக்காள்
　　புகழாகப் பொருளைமுந்திப் பண்ணிப்பார்த்து
தாக்குமிந்த மூலத்தை மனத்தைக்கட்டி
　　சாதகமா யாறுதலந் தாண்டியேறி
தேக்குநல்ல மதியினுள்ளே பானம்பண்ணி
　　செயலான மனோன்மணியைக் கண்டுபோற்றி
தூக்குமந்தத் தமரோடே மனத்தைக்கட்டி
　　சுகமாகப் பூரணத்தில் சொக்கியாடே. (129)

சீனச் சுண்ணம்.

ஆடுதற்குச் சீனமொன்று சொல்லக்கேளு
　　அம்மம்மா கடுங்கார மாட்டிப்பாரு
வூடுதற்கு யிதைக்கட்ட யறிந்தானானால்
　　உலகமெல்லாம் பொன்னாகு மோடுந்தாரம்
மூடுதற்கு மூட்டவென்றால் மூட்டப்போகா
　　மூதண்டந் தொட்டாடக் குளிகையாகும்
நீடுதற்கு யிதைக்கொண்டு ஆடக்கேளு
　　நேராகச் சொல்லுக்குள் நினைவாய்ப்பாரு. (130)

பாரப்பா புளியெட்டு வெடியுப்பெட்டு
　　பரிவான சாரமரைக் கல்லுப்பொன்று
நேரப்பா சூடனரை யிந்துப்பொன்று
　　நேராக யிடித்துநன்றாய்த் தீயைமூட்டி
கூரப்பா கொடியசுண்ண மாக்குமாகுங்
　　குறையாமல் பனியில்வைக்கச் செயநீராகுஞ்
சீரப்பா யிந்நீரில் வீரம்பூரந்
　　திறமாக வழலையுட சுண்ணம்போடே. (131)

சுண்ணப்போக்கு

போட்டரைத்துச் செயநீரில் படிகைக்கப்பு
புகழான ரவியிலிடச் சுண்ணமாகும்
கூட்டரைத்துக் கடுக்கார மிதற்குயேற்ற
கொடியதொரு வேகமுறும் நன்றாய்க்கேளு
மாட்டரைத்து யிந்திடைக்குச் சாரங்கூட்டி
மைந்தனே செயநீராம் வாய்பேசாதே
பூட்டரைத்து யிந்நீரில் பூரம்போட்டு
புகழாக வாரியிட்டுப் பொசிவாயூதே. (132)

பொசிவாகக் கற்பூரச் சுண்ணமாகும்
போக்கிலே வெதுகோடி சொல்லமாட்டேன்
கெசிவாக வழலைக்குச் சீனஞ்சுண்ணங்
கெட்டியாக வீரமிட்டு அப்பிப்போடு
வசிவாக வெண்ணெயெல்லாங் கக்குங்கக்கும்
வாங்கியந்தக் கவசத்தை யெறிந்துபோட்டு
மசிவாக வீரமொடு பூரச்சுண்ணம்
மாட்டியதை ரவியினுள்ளே மயங்கப்போடே. (133)

போட்டெடுத்த கவசமுடன் கிழிஞ்சிநீரில்
புகழாகத் தீயெரிக்கச் சுண்ணமாகும்
மூட்டெடுத்துக் கடுங்கார மிதின்மேலேற்று
மூதண்டங் கிழிந்தாடும் வழலைச்சுண்ணம்
ஆட்டெடுத்த யம்பலவர்க் கொக்குமொக்கும்
அதிகார வழலையுட அதிகவேகம்
நீட்டெடுத்த விடமெல்லாம் நீறாய்வேகும்
நிலையில்லை களரயில்லை நினைவாயாடே. (134)

ஆடவென்றால் வழலையிலே வீரஞ்சேர்த்து
அப்பனே தாளகத்துக் கப்பியூது
நீடவென்றால் சுண்ணாம்பா மாலின்தேவி
நேரான கெந்தகத்துக் கிதைத்தான்பூசு
சூடவென்றால் தீமூட்டச் சுண்ணமாகும்
துடியான கெந்தகத்தை வீரத்தப்பி
[illegible]டவென்று ஊதுமெள்ள வீரச்சுண்ணம்
உத்தமனே வீரத்தை வங்கத்தப்பே. (135)

அப்பியந்த வங்கத்தைப் புடந்தான்போடு
ஆகாகா பூப்போலே சுண்ணமாகும்
ஒப்பியந்த வங்கத்தைத் துருசுக்கப்பி
ஓகோகோ யூதிடவே சுண்ணமாகுஞ்
செப்பியந்தத் துருசைத்தான் சாரத்துக்கப்பி
சேர்ந்துமெள்ளத் தீயிட்டு வூதச்சுண்ணங்
கொப்பியென்று கொட்டுகிற சத்திக்கொக்கும்
கூறரிது சாரவித்தை கூறுவேனே. (136)

சாரவித்தை.

கூறுகிறேன் சாரத்தை கிமிலக்கப்பி
கூசாம லூதுமைந்தா சுண்ணமாகும்
மாறுகிறே னிமிலிதனைத் தங்கத்தப்பி
வகையாகப் புடம்போடத் தங்கம்நீறும்
ஏறுகிறேன் தங்கத்தைச் சூதத்தூட்டி
யெடுத்துடனே மணியாகு மேலேகேளுந்
தேறுகிறே னிச்சூதங் குளிகையூட்டி
தெளிவாக வூதுநன்றாய்ச் சுண்ணமாமே. (137)

சுண்ணமென்ற சூதத்தை வீரத்தப்பி
சுகமாக வாட்டுநன்றாய்க் கட்டிப்போகும்
வண்ணமென்ற தங்கம்நா லிதுதானொன்று
மாட்டியொன்று யுருக்கியதை மணிபோல்வாங்கி
சுண்ணமென்ற அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
தூக்கியொரு புடம்போடச் சுண்ணமாகுங்
கண்ணமென்ற கன்னக்கோல் வாதத்துக்கு
கைமுறையு மிதுவாச்சு கண்டுகொள்ளே. (138)

கண்டுகொள்ளு மிச்சுண்ணந் தாமவேதை
கரையில்லை சத்தமுதல் பரிசவேதை
தொண்டுகொள்ளு மண்டமுதல் பத்துமட்டுஞ்
சொன்னமென்ற யிதினாலே துறையோகோடி
துண்டுகொள்ளும் நாழிகொள்ளுங் குறுணியாகுஞ்
சொற்பெரிய கலமாகுந் தூணியாகும்
பண்டுகொள்ளும் நெற்பயிர்போல் கோடாகோடி
பரவுமையா ளிதன்கூறு பாடுவேனே. (139)

பாடுவேன் குருவாலே மைந்தாகேளும்
        பர்வதமும் மண்மரமும் பொன்னேயாகும்
ஆடுவே னுடிவே னுடியாடி
        அளப்பறிய மாட்டேனுன் கோடிகாலந்
தேடுவேன் தேடுவேன் என்னசொல்வேன்
        தென்னிலேபோ லறிந்தாடுஞ் செப்பமாட்டேன்
கூடுவேன் கூடிவேன் நாகப்போக்கு
        கூறரிதாம் பூரணத்தில் கூடினேனே. (140)

அண்டச்சேந்தூரம்.

கூடின[illegible]தார் பரிவீரச் சுண்ணத்துள்ளே
        குளாவியதோர் வீரமிட்டு அண்டத்தப்ப
நாடினதோர் அண்டமெல்லாந் தோலோடொக்க
        நலமங்கி யண்டம்போல் செந்தூரிக்கும்
மூடினதோ ரண்டமுமிப் படியேயாகும்
        மூதண்ட வேலைதயிதி லறிந்துபோடு
சூடினதோர் சாட்டமெல்லா மண்டச்சாட்டஞ்
        சதகோடி பத்துமென்பார் நான்காணேனே. (141)

காணாத அண்டத்தின் மெழுகுகோடி
        கட்டுநீத் தினமுருக் கினமோகோடி
பூணாத செயநீரோ களங்குகோடி
        பொன்னீரோ வெள்ளியுட நீரோகோடி
தோணாத யுபரசத்தின் சத்தோகோடி
        துடியாமல் சூதமென்ற கட்டோகோடி
ஆணாத பாஷாணக் கட்டேரகோடி
        ஆகிறதைக் கெடுக்கயிதி லாகும்பாரே. (142)

ஆகுமப்பா கட்டினத்தைச் சுண்ணம்பண்ணும்
        அந்தந்த பினங்களுஞ்செந் தூரம்பண்ணும்
போகுமப்பா வெகுதூரங் களங்கம்பண்ணும்
        பொற்குருவால் வெகுபூட்டாம் பூட்டியாடும்
மாகுமப்பா வுபரசத்தின் சத்தால்வேதை
        மட்டுண்டோ லெக்குண்டோ மணிக்கியூட்டு
சாகுமப்பா நவலோகந் தனித்தனியேவேதை
        சாங்கோப சாங்கமிதில் சாற்றினேனே. (143)

சாற்றிய அண்டவித்தை பிண்டவித்தை
சமுசியமாய் மயங்காதே நன்றாய்ப்பூசி
நீற்றிய நீற்றெல்லா மிதுக்குள்நீறும்
நேரான கட்டுவகை கெந்திக்கட்டு
ஊற்றிய வூற்றெல்லா மிதுக்கொவ்வாது
ஓகோகோ உயர்ந்தவித்தை குளிகைதீரும்
போற்றிய போற்றெல்லாம் பதத்தைப்போற்றும்
புகழாகக் கிட்டினத்தைச் சொல்லக்கேளே. (144)

கிட்டினங்கூறல்.

சொல்லுகிறே னண்டத்தின் மெழுகதொன்று
சுட்டண்டத் தோலொன்று வங்கமொன்று
புல்லுகிறேன் புழுகொன்று கூட்டியாட்டி
புகழாகக் கரத்தில்வைத்து பொன்னீர்மீட்ட
மல்லுகிறேன் வெங்கலமாய்க் கிட்டமாகி
மற்றதொன்று மில்லாமல் மண்ணாய்ப்போகும்
வெல்லுகிறேன் யென்றுசொன்ன வாதிமுன்னே
வேதையெல்லாம் பொய்யாக்கி விடுவித்தாட்டே. (145)

ஆட்டிடவே வெகுவித்தை கேளுமைந்தா
ஆச்சிந்தப் பொன்னென்று யவன்தான்சொன்னால்
ஓடையிலே அதைவாங்கிப் பார்த்துப்போடு
ஓகோகோ யிரும்பாகுங் கிட்டமாகுந்
தாடையிலே போட்டவனை விபரங்கேளு
சமர்த்துண்டோ யிருந்தாக்கால் பின்னுஞ்சொல்வான்
பாடையிலே சென்றபிண முயிராமோடா
பார்த்தோருக்கால் முன்பேறு உயிராய்ப்போமே. (146)

போமென்று கோஷித்து ஆடு ஆடு
புகழாக யெவருக்கு மஞ்சவேண்டாம்
ஓமென்று மூலகுரு வர்க்கமானால்
உத்தமனே பேசாதே உயர்ந்தபாட்டர்
நாமென்று மவருடைய சீஷவர்க்கம்
நாதாந்த வேதாந்த வர்க்கமய்யா
ஆமென்று யெனையீன்ற போகர்சொன்னார்
அறுபத்து நாலுமாத் தரிகந்தானே. (147)

அதீதமென்ற மூலகுரு யனுதிகோடி
அப்பனே சித்தருண்டு ரிஷிகளுண்டு
நிதீதமென்ற குளிகைமுறை யறியாரப்பா
நேராகப் பூரணத்தை நேர்ந்துநின்றார்
வதீதமென்ற சொரூபமணி பார்த்துவல்லோர்
பார்மகனே சூதவித்தை யாகக்காட்டி
துதிதமென்ற மௌனத் துதித்தார் யானிறைஞ்சிநிற்க
சேர்த்தியந்தா ளருமைமந்தா வெனக்கேட்டாரே. (148)

கேட்டவர்க்குக் கைலாசம் பரம்பரையில்வந்த
கொடியான மூலருட பிள்ளையுட பிள்ளை
நீட்டவர்க்கு மேலான போகனாதர்
நேராக அவருடைய பிள்ளையான் தான்
ஆட்டவற்குச் சூதவித்தை வருமோவப்பா
ஆச்சரிய மாச்சரிய மறியோம்நாங்கள்
கூட்டவர்க்கு அவருடைய குழந்தைநீயோ
கொள்கியுன்போல் யெவர்களுமே கூறக்காணேன். (149)

கூரான ரசத்தொழிலைச் செய்துநாங்கள்
கொள்கிமனத் தோடேபோ ராடிநித்தம்
வாரான லட்சயத்தைப் பார்த்துப்பார்த்து
மனமுறைத்து மெஞ்ஞான வரையிற்சென்றோம்
வீரான மனத்தைப்போல் ரசத்தைக்கட்ட
வெகுசுளுவு வெகுசுளுவு யறியோமப்பா
தீரான சிவபோகஞ் சனத்திற்சித்தி
செய்வார்க்கு மெஞ்ஞானஞ் சித்தியாமே. (150)

சடத்தின் கூறு.

ஆமப்பா சடமெல்லாம் பிரமன்கூறு
அதுக்குள்நின்ற ரத்தமோ மாலின்கூறு
ஓமப்பா யிதுக்குள்ளே புரியட்டஞ்சொல்வேன்
உத்தமனே சூட்சமென்ற தோற்றங்கேளுந்
தேமப்பா சிகாரமென்ற சிவன்தானென்று
சேர்த்துமெல்ல வகாரமென்ற மயேசனென்று
ஆமப்பா யகாரசதா சிவன்தானென்று
சார்ந்துநின்ற விந்துவதின் மேலுமாச்சே. (151)

ஆச்சப்பா விந்துவின்மேல் நாதமொன்று
அதின்மேலே சத்தியொன்று அறிந்துபாரு
ஓச்சப்பா யிதின்மேலே சிவன்தானென்று
ஒத்தசிவ னுரென்னில் விராட்டியன்தான்
பாச்சப்பா யதன்மேலே பரைதானென்று
யாருமிந்த யெட்டும்புரி யட்டமாச்சு
வாச்சப்பா யிதனாலே பிறப்பிறப்புமாச்சு
வாகான புரியட்டக் கூத்துத்தானே. (152)

கூத்தெல்லாம் புரியஷ்டக் கூத்தேகூத்து
கோடான கோடிசென்ம மெடுத்தேயாடும்
கூத்தெல்தெல்லாம் புரியட்டத் தோற்றமேழு
குலாவியது விரிந்தாடி லஞ்சுமாச்சு
கூத்தெல்லாம் எண்பத்து நான்குலக்ஷம்
கூரான ஜீவபேதம் நாலுயோனி
கூத்தெல்லாம் பார்த்தறிந்த பெரியோரய்யா
கூட்டோடே தள்ளியதன் மேல்நிற்பாரே. (153)

ஞானம்.

மேலான பரைமேலே முப்பாழ்கேளு
விளங்கியொன்று வெளிப்பாழா மதுக்குமேலே
சேலான யொளிப்பாழாய் நிற்கும்பாரு
சேர்ந்துமெள்ள வதைத்தாண்டில் செப்பக்கேளு
கோலான வெளியொளிப்பாழ் கூட்டிப்பாரு
குறிமூன்று வரைதாண்ட வுன்தாய்நிற்பாள்
பாலான மொழியுடையாள் தமரின்வாசல்
பரமவள்தான் போதமவள் பாருபாரே. (154)

பாரப்பா போதமென்ப தவட்கேபேரு
பரிவான யகண்டமென்று மவட்கேபேரு
சேரப்பா அவள்கிட்டா தவளேபோதஞ்
சேர்ந்துடனே தமர்க்குள்ளே சேரலாகும்
ஆரப்பா கண்டவர்கள் கண்டவீதி
ஆதியில்லை அந்தமில்லை யறியப்போகா
நேரப்பா காண்பரிது கடினமெத்த
நிலையாத மனக்குரங்கு நேரொட்டாதே (155)

ஒட்டாதே யென்றுசொல்லி யோகிசென்று
உன்னியுன்னிப் பரையளவு மோடினாலும்
கட்டான பிறவிவரு மய்யோ அய்யோ
கலந்துவந்து பிறந்தாலும் யோகியாவான்
மட்டான பரையளவும் புரியட்டமாச்சு
வரைகடந்த வெளிப்பாழை யடுத்தானானால்
மூட்டாதே வெளிப்பாழே யகண்டமென்று
முனையான சுழிகண்டால் பிறக்கொட்டாதே. (156)

சத்திநிலை.

பிறக்காமல் அதுக்குள்ளே சுழன்றுநின்று
பின்னுமொரு வரையேற யிதுவேயென்பான்
மறக்காம லதுக்குள்ளே மயங்கியேங்கி
மருத்துமொரு வரையேறி யிதுதானென்பான்
திறக்காமல் மூன்றுவரை திறந்துயேறி
சேர்ந்துநின்ற வுன்மாதா யிதுதானென்பான்
பறக்காமல் ரவிகோடி ஒளிதான்வீசும்
பரிவான மதிகோடி பகருங்காலே. (157)

பகராத காந்தியவட் கொவ்வாவொவ்வா
பார்க்கரிது பார்க்கரிது கண்கொள்ளாது
பகராத காந்தியுள்ள தாயைக்கண்டால்
பரமவள்தான் சிவமவள்தான் பாருபாரு
பகராத நிற்குணத்தி நிர்மலத்தி
பரமான போதத்தி பரமேயென்று
பகராத யகண்டத்தி யகண்டத்தக்தி
பாப்பணத்தி சற்குணத்தி பரையென்சொல்லே. (158)

சொல்லியவ ளருளாலே மேலேசொல்லத்
துரியமற்ற வெட்டவெளி சொல்லும்போச்சு
மல்லியவள் மனம்போச்சு புத்திபோச்சு
மாயமெல்லா மூவரையின் கீழேபோச்சு
தில்லையென்ற வம்பலமுந் தாண்டிப்போச்சு
சேரவெட்ட வெளியாகத் தெளிந்துபோச்சு
எல்லியது படர்ந்துநின்ற நிற்குணத்தி
ஏகவெளி யகண்டமது அறியுந்தானே. (159)

அறிவதொன் றி லாசைகொண்டால் வருமோமைந்தா
அவரவர்க்கு விட்டகுறை யாலேயெய்தும்
செறியதொன் றில் மனங்குவிந்து பிடித்தாயானல்
சேராக யேறலா மில்லாட்டில்லை
பிறியவொன் றில் மனம்பிறிந்தால் பேய்போலாச்சு
பேருள தீனியினல் பெருமைபோச்சு
குறியதொன் றில் பார்த்தேறப் பசியொட்டாது
கூரான யிரைக்கியிந்தச் சீமைநேரே. (160)

வேடியுப்புக் கம்பி.

ரோன வெடியுப்பின் பிறப்பைக்கேளு
நிலையான உவர்நிலத்தின் மண்ணைக்கொட்டு
நீரான துவாரகக் கீழூறும்
நெருப்பான ஆலைத்தான் காய்ச்சுவுப்பாய்
போரான சத்திசிவ மானவுப்பு
பிரபலமா மிதன்பெருமை பேசப்போகா
வாரான வுப்பினெடு படிதான்மோரும்
வார்த்ததனைக் காய்ச்சிடவே கம்பியாமே. (161)

கம்பியென்ற உப்பாலே பரிசவேதை
கட்டியதோர் சந்தான தூமவேதை
கம்பியென்ற வுப்பாலே களங்குவேதை
கனல்பட்டால் தெரிசனத்தில் காணும்வேதை
கம்பியென்ற வுப்பாலே செந்தூரவேதை
காட்டுமுன்னே கல்மண்ணும் பழுக்கும்வேதை
கம்பியென்ற வுப்பாலே சுண்ணவேதை
கரையில்லை துரையில்லை கண்டுஆடே. (162)

உப்புக்கட்டு.

ஆடுதற்கு வகைகேளு முப்பைக்கட்டு
அப்பனே சீனமென்ற சுண்ணத்தாலே
நீடுதற்குத் தாளகத்தைச் சுண்ணப்பண்ணி
நேரான தாளகத்தால் வங்கம்நீற்றி
ஊடுதற்கு வங்கமுடன் வீரங்கட்டி
உருவான வெடியுப்பா லப்பிப்போடு
கூடுதற்கு ரவியில்வைத்து வறுப்புச்செய்து
குறையாமல் சுண்ணத்தில் வைத்துஆட்டே. (163)

ஆட்டியதை யெடுமைந்தா யெலும்புபோலாம்
அரகரா முழுக்கட்டு மாச்சுபாரு
கூட்டியதில் சவுக்காரம் புழுகுவீரங்
குறையாம லிப்படியே வூதிப்போட
காட்டியிதில் கடுஞ்சுண்ணங் காணுங்காணுங்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கசைகொள்ளாமல்
மூட்டியிதில் சாரத்தை யிடைக்கிடைதான்சேர்த்து
முனைந்தாட்ட முத்துப்போற் செயநீராமே. (164)

நீரிலே கற்பூரப் பலகைபோட்டு
நேராக வாரியிட்டு வூதச்சுண்ணம்
ஊரிலே கடிப்பல்ல பாறையுப்பு
யுருவாக உடைத்துநன்றாய் மணிபோல்வாங்கி
கூரிலே சுண்ணமுடன் வீரம்போட்டு
குழுறநன்றாய் வெண்கருவா லரைத்துப்பூசு
வாரிலே கற்பூரச் சுண்ணவேகம்
மணிபோலே யுப்படக்கும் புடத்தைப்போடே. (165)

போடுவது யேதென்றால் நாயுருவிநீற்றில்
புகழாக வுப்பைவைத்துப் புடத்தைப்போடு
நீடுவது யுப்பெடுத்து வுருக்கிப்பாரு
நேரோகப் பொன்போலே நின்றுஆடும்
நாடுவது யெதைநாடு மிந்தவுப்பு
நலமான சூதத்தை நாடிக்கொல்லும்
ஊடுவது யிந்தவுப்பில் சரக்கையூட்டி
ஒன்றுக்குள் கோடிகவர் யுரைக்கிறேனே (166)
உப்பின் போக்கு
உரைக்கிறே னிந்தவுப்பைச் சுண்ணமூது
ஒருசங்க மிரண்டுசங்க மோடுவோடும்
உரைக்கிறே னிந்தயுப்பை மெழுகுபண்ணு
உத்தமனே சரக்கெல்லா மெழுகாயோடும்
உரைக்கிறே னிந்தயுப்பைச் செயநீர்பண்ணு
ஓடுதொட்டுக் கல்வரையுஞ் செயநீராகும்
உரைக்கிறே னிந்தவுப்பைச் செந்தூரித்தால்
உபரசமும் நவலோகந் சிவக்குந்தானே. (167)

சிவப்பெல்லாஞ் செந்தூர மாகுமக்காள்
சேர்ந்துநின்று கருத்தாக்கால் களங்கமாச்சு
சிவப்பெல்லாம் வெளுத்தாக்கால் சுண்ணமாச்சு
செகத்திலே பலபலவாஞ் சுண்ணங்கோடி
சிவப்பெல்லாஞ் சுகங்காட்டு முப்புவித்தை
சிவசிவா சூட்சமெல்லா முப்புக்குள்ளே
சிவப்பெல்லா மவைதாமஞ் சூடுஞ்சூதம்
தெறிந்தவனுர் சிவயோகி யறிவான்தானே. (168)

அறிவான கல்லுப்புச் சுண்ணந்தன்னை
அப்பனே கெந்தகத்தி லப்பிஆட்டு
பிறிவான கெந்தகந்தான் சுண்ணமாகும்
பேரான சுண்ணத்தைத் தாளகந்திற்போடு
நெறியாக ஆட்டுயிதைச் சுண்ணமாகும்
நேரான தாளகத்தை வங்கத்தப்பு
தறிவாகப் புடம்போடு வங்கம்நீறும்
தனிவங்கஞ் சூதத்தில் சாற்றிக்கொள்ளே (169)

சாற்றிநின்ற சூதத்தைச் சுண்ணம்பண்ணு
தனிச்சூதச் சுண்ணத்தை நிமிளைக்கப்பு
மாற்றிநின்ற யிதையூது நிமிளைச்சுண்ணம்
வாகான நிமிளையைத்தான் தங்கத்தப்பு
போற்றியிதைப் புடம்போடத் தங்கச்சுண்ணம்
புகழாக யிச்சுண்ணஞ் சாரத்தப்பு
ஆற்றிநின்ற சாரத்தை மணலில்வைத்து
அரைத்ததனை ஊதிடவே சுண்ணமாமே. (170)

சுண்ணமென்ற சாரத்தைத் துருசுக்கப்பு
சுக்காணு மிதையூது சுண்ணமாகும்
சுண்ணமென்ற துருசுதனை வீரத்தப்பி
சுகமாக வைத்தெரிக்கச் சுண்ணமாகும்
சுண்ணமென்ற வீரத்தைக் கெவுரிக்கப்பி
துடியாக ஊதுமைந்தா சுண்ணமாகும்
சுண்ணமென்ற கெவுரிதனைச் சூதத்தாட்ட
துடியாமல் மணியாகுஞ் சூதந்தானே. (171)

சூதத்தின் வேதை

தானென்ற சூதத்தை குகைவைத்தூது
தவளம்போல் சுண்ணும்பார் தானேபாரு
வானென்ற யிச்சூதம் வராகனென்று
வரையாக நாலுயிடை தங்கத்தூட்டு
கானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
கடுஞ்சுண்ண மாகப்பூப் போலேயாகுங்
கோனென்ற குருவிதுதா னிதிலேவித்தை
கோடான கோடியென்றால் வாய்தானேமோ. (172)

கோமென்று சொன்னகுரு பணந்தானென்று
நுகரான வீரமொன்று கெவுரியொன்று
காமென்று துருசொன்று பூரமொன்று
காரமொன்று சூதமிதில் யேழுங்கூட்டி
ஓமென்ற பொடியாக்கித் திரிதிரித்து
உத்தமனே நெய்வார்த்து விளக்கையேற்றி
ஆமென்று அவித்துடனே புகைதான்பட்டால்
ஆகாகா நவலோகந் தூமமாமே. (173)

ஆமப்பா முறைதுறையாஞ் சுண்ணமொன்று
அரிதான வீரமொன்று நிமிளைமூன்று
தாமப்பா அரைத்துடனே சிவப்பேயாகுந்
தன்னுக்குள் சாதிலிங்கங் காரம்போட
ஓமப்பா நவலோக முபரசங்களெல்லாம்
உத்தமனே உபசரிக்க வேதையாகும்
காமப்பா பார்த்தபடி கருவைச்சொன்னேம்
நலமான மைந்தர்களே நாட்டிடீரே. (174)

நாட்டியதோர் வெள்ளிதனைக் குருவால்காட்டு
நலமான வெள்ளியது சுண்ணமாகும்
ஊட்டியதோர் வீரமிட்டுக் காரமிட்டு
ஒன்பதுப ரசமுந்தொட் டாலோவெள்ளி
காட்டியதோர் குருகாண்ட மிதுதான்மைந்தா
கருமறைத்துச் சொன்னுக்கா லொன்றுமில்லை
ஆடியதோர் செயநீர்சுண் ணும்புநீற்ற
அப்பனே அமுரிக்கு ளறிந்துகொள்ளே. (175)

அறிந்தறிந்து கருவெல்லாம் நன்றாய்ப்பாரு
அங்கங்கே சொல்லிவைப்பே னய்ந்துபாரு
மறிந்தறிந்து மறக்காதே மக்காள்சொன்னேன்
மறந்துவிட்டால் சொல்லுதற்கு யென்னைப்போலாரு
பிறிந்தறிந்து நன்றாக ஆடிப்பாரு
பெரும்பாதை பெரும்பாதை கவரோசங்கம்
செறிந்தறிந்து பாராமற் பட்டபாடு
சிவசிவா பூரணமாய்ச் செப்புவேனே. (176)

ஆதிக்குரு.

செப்புவேன் நன்றாகக் கேளுமக்காள்
திராவகத்தின் கருவெல்லாம் புகைநீர்மைந்தா
செப்புவேன் செயநீர்க்கு கருவேதென்றால்
சேர்ந்துநின்ற நவச்சாரம் போனல்போச்சு
செப்புவேன் சுண்ணத்தில் செந்தூரமென்ன
சீரான சவ்வீரஞ் சேர்ந்தாலாகுஞ்
செப்புவேன் வாதத்துக் காதியென்ன
செப்பாதே வழலையென்ற சுண்ணந்தானே. (177)

தானென்ற களங்கத்துக் காதியேது
சமரசமாய் மால்தேவி யோடலாகுங்
கானென்ற மெழுகுக்கு ஆதியேது
காட்டியதோர் செயநீர்தான் கண்டுகொள்ளு
கோனென்ற வேதைக்கி ஆதியேது
கொடியதொரு புடத்தங்கங் கூட்டிஆட்டு
வேனென்ற கட்டினத்துக் காதியேது
விளங்கியதோர் சுண்ணவரை விரைந்துபாரே. (178)

விரைந்துநின்ற வாதத்துக் காதியென்ன
வேதாந்தங் காட்டுகிற சூதஞ்சூதம்
விரைந்துநின்ற நீற்றினத்துக் காதியென்ன
வேரான வெண்காரம் விளங்கிப்பாரு
விரைந்துநின்ற நீத்தினத்துக் காதியென்ன
மேலான கற்பூரச் சுண்ணஞ்சுண்ணம்
விரைந்துநின்ற ஆசரத்துக் காதியென்ன
விளங்கியதோர் கல்லுப்பு விரைந்துகாணே. (179)

காணப்பா யினக்குறையுங் கருக்கிடையுஞ்சொன்னேன்
கைமுறையா யதுவதுவைக் கலந்துபாரு
ஊணப்பா முந்திமுந்தி வழலையுப்பால்
ஓகோகோ வாதமெல்லா முடிந்துபோச்சு
பூணப்பா கிருவணத்தால் போகுந்தூரம்
புகழான மலைதனக்குப் பூட்டலாகும்
வீணப்பா யிந்தமுறை விட்டால்வேதை
விளங்கியிந்தத் தொழிலெல்லாங் குருவைக்கேளே. (180)

அறியாமூடர்.

குருசொல்லப் பொருள்காணும் அருளுங்காணுங்
குலாமரய்யோ குருவின்றிச் சுடுவார்கோடி
குருசொல்ல லட்சயமும் ஞானங்கூடுங்
குறிப்பறியா மனத்தாலே பார்ப்பேனென்பார்
குருசொல்லாத் தொழிலுக்கு வேதையில்லை
குருடனுக்கு வூமைசென்று பணிந்தவாறு
குருசொல்ல வேணுமென்பார் நல்லோரெல்லாங்
குலாமரென்றால் குருவென்றால் போவென்பாரே. (181)

போமென்று சுட்டலைந்து பொய்யேயென்பான்
புகழாக அவன்வாயில் போடுமண்ணை
வாவென்றால் வறியோர்க்கு வருமோசொல்லு
வறுமைவந்தால் போவென்றால் போமோசொல்லு
ஆவென்றால் பெருவயிற் றுண்ணப்போமோ
ஆச்சரியங் காலில்லா னோடப்போமோ
கூவென்றால் செவிடனங்கே யேனென்பானோ
கொள்கையிந்த வாரொக்குங் குருவில்லார்க்கே. (182)

ஆற்கநின்ற மெஞ்ஞானி சடத்தைவென்றால்
அதுவேது வென்றுக்கால் சொல்லக்கேளும்
பார்க்கநின்ற தேகத்தில் சூட்சதேகம்
பரிவான புரியட்டந் தன்னில்நின்று
சேர்க்கநின்று காலோடே கூடிப்போவோஞ்
செயலான சடமெனக்கு யேதுக்கென்பான்
காக்கநின்ற சடங்காப்பான் யோகியானல்
கலந்துநின்ற ஞானிசடங் காத்திடானே. (183)

காத்திடான் ஞானியென்ற குருவேஅய்யா
காரணமே நிற்குணமே கருணையோனே
மாத்திடா சித்தென்ன குளிகையென்ன
மாயத்தைப் பண்ணுகிற மயக்கமென்ன
போத்திடா ரெண்டுக்கும் புகலைக்கேளும்
பொலிவான சித்ததிகம் புகழ்ந்துசொல்வேன்
ஆத்திடா செகத்தோடு சித்துமாடி
அண்டரண்டப் பதமுதலா யறிந்தேன்பாரே. (184)

அறிந்தமட்டோ சிறுபிள்ளாய் செடத்தொடொக்க
அவனிருந்த நிற்குணத்துக் கப்பால்சென்று
மறிந்தமட்டோ திரும்பிவந்து கோடிகற்பம்
மகத்தான சமாதியிலே வாழ்ந்தார்வாழ்ந்தார்
பிறிந்தமட்டோ சமாதிவிட்டுப் பின்னுமாடிப்
பேரண்டப் பெரியோரைக் கண்டுபேசி
நெறிந்தமட்டோ மேருவிலே நின்றுவாழ்ந்து
நேரான பாற்கடலில் நேர்ந்தார்காணே. (185)

நேர்ந்துகொண்டு மாயிபதம் போற்றிசெய்து
நேரான காலுயுகச் சித்தரையுங்கண்டு
நேர்ந்துபதந் தாண்டிமனோன் மணியைப்போற்றி
நேரான முப்பாழின் நேர்மைகண்டு
நேர்ந்துகண்டு அறுமுகனைத் தமர்க்குள்புக்கி
நிலையான பூரணத்தி லுகாந்தமோடி
நேர்ந்துகண்டு சிலைபோல யிதிலேசொக்கி
நேறுவந்துத் திரும்புவதும் மறியந்தானே. (186)

தானென்ற சித்தர்வல் லமைக்குமைந்தா
சகஸ்திரத்துக் கொன்றுவ்வா ஞானிவாழ்வு
வானென்று வெளிகடந்து புக்குவான்காண்
வாய்மூடில் பிடரிநின்று பேசுமோசொல்
கோனென்ற மூலவர்க்கத் துள்சித்தாக
கொடுஞ்சுறுக்கு கொடுஞ்சுறுக்கு பூரணத்தேசென்று
பானென்று பண்ணுவார் பாகந்தீர்த்து
பரிவாக மூழ்கியதில் மீழ்வார்தாமே. (187)

தாமென்று மதுவென்று மிரண்டுமற்று
சாங்கமற்றுப் பாங்கமற்றுச் சமாதியற்று
ஓமென்ற நிற்குணம்போ லொன்றுய்நிற்க
உத்தமர்க்கு அடுத்தமுறை யுணர்வாய்க்கேளு
ஆமென்று நின்றதெல்லாங் கண்டிப்பென்பார்
ஆகாச வெளிமுதலாய்க் கண்டிப்பென்பார்
ஓமென்ற கண்டமுதல் கண்டிப்பென்பார்
ஒன்றுமற்ற நிற்குணமே பொருளென்பாரே. (188)

போய் ஞானி.

பொருளாலே வாடுகிறார் சித்தரெல்லாம்
போக்கறியா னுலகத்தில் குருநாமென்று
மருளாலே மயக்கிநின்று உபதேசித்து
மனிதரைத்தான் மாமாய்கை வலையிற்போட்டு
இருளாலே கூகைகா கத்தைக்கொண்ட
இதுவொக்கு முலகத்தி லிருந்தஆசான்
கருளாலே யேதானுங் குருவால்தோண
நலமாகப் பூரணத்தில் காட்டார்பாரே. (189)

காட்டாத பாபத்தால் விவேகம்போச்சு
கலமில்லா மனத்தாலே ஞானம்போச்சு
மூட்டாத வாயுவினு லோகம்போச்சு
மூதண்டக் குளிகைவிட்டால் கெவுனம்போச்சு
ஆட்டாத ஆசையினல் சடக்தான்போச்சு
அப்பனே நூல்விட்டா லறிவுபோச்சு
ஓட்டாத சுண்ணம்விட்டால் வாதம்போச்சு
ஓகோகோ குருபோனு லொக்கப்போச்சே. (190)

ஒக்குமிந்த ஆட்டுவெடி யுப்புக்கையா
உத்தமனே பூமியுட காதமுப்பு
தக்குமிந்த வுப்பாலே வாதிகட்கு
சதகோடி நவகோடி அறிந்துஆடும்
சொக்குமிந்த வுப்பாலே வுபரசங்களெல்லாம்
தூரவென்றால் வெகுதூரக் தூரவேதை
மக்குமிந்த வுப்பாலே கெந்திமுதலெல்லாம்
வாகான வுப்பினுட வரைதான்முற்றே. (191)

## சாரப்பெருமை.

வகையடங்காச் சாரத்தின் பெருமைகேளு
வரகான யொன்பதுட அமுரிகூட்டி
நிரையடங்கா வுப்போடு காரசாரம்
நேராகக் காய்ச்சிவிட்டான் பறங்கிமைந்தா
கரையடங்கா யதன்பெருமை பாடவென்றால்
காப்பேது கரையேது சாரத்துக்கு
துரையடங்கா யிதுக்குள்ளே சொக்கிப்போவான்
சொல்லுவது இனியென்ன துரையைக்கேளே. (192)

கேளப்பா அண்டம்போல் சாரஞ்சீவிக்
கெடியான அபினியொடு மிளகுபூரம்
நீளப்பா மேனிச்சார் விட்டுஆட்டி
நிலையாக வதின்மேலே யரக்கைப்பூசி
வாளப்பா சாணாங்கிச் சீலைசுற்றி
வகையாக வங்கத்தி லழுத்திமைந்தா
ஆளப்பா பிளக்தெடுக்கச் சாரஞ்சுத்தி
அதையெடுத்துச் சுண்ணாம்பு செய்யக்கேளே. (193)

செய்வதுதான் வங்கமென்ற சுண்ணத்தோடே
சிறப்பாக வீரமிட்டு ஆட்டிப்பூச
மைவதுதான் சலய்பொதியு மணலில்வைத்து
மல்லிகைப்பூப் போலாகு மெடுத்துக்கொண்டு
கைவதுதான் யெட்டிலொன்று பூரச்சுண்ணம்
கலக்குமிந்த யிடைகூட்டு வழலைச்சுண்ணம்
பைவதுதா னரைத்துமெள்ள வில்லைதட்டி
பாங்காக வூதிடவே சுண்ணமாமே. (194)

ஆமம்பா சாரமது சுண்ணமானால்
அண்டரண் டங்களெல்லா மதக்குளாச்சு
சாமப்பா சூதமுதல் தங்கம்நீறும்
சங்கமென்றும் பற்பமென்றுஞ் சொல்லக்கூடா
வேமப்பா தொட்டவிடம் பட்டவிடமெல்லாம்
விடுபட்ட மதயானை போலேயாடும்
ஓமப்பா உலகமெச்சும் சாரவித்தை
யோடுகிற வரிசைசொல்ல யொடுங்காவாரே. (195)

செயநீர்

வாரான சாரத்தில் காரமிட்டாட்ட
மழைமேகம் பொழிந்தாப்போல் சலமாய்நிற்குந்
தாரான செயநீரில் பூரநீரிட்டு
தனிக்குகையில் வாரியிட்டு ஊதச்சுண்ணம்
வீரான யிச்சுண்ணங் கெந்தகத்தப்பி
விரைந்தெரித்து ஊதிடவே சுண்ணமாகும்
கூரான யிச்சுண்ணம் வீரத்தாட்டி
கொடியதொரு வழலைக்கு அப்பிப்போடே. (196)

வழலைச்சுண்ணம்

அப்பிமெள்ளத் தீயாட்டி வெண்ணெய்போகும்
அதன்பிறகு கடுங்கார மதிலேயேற்று
ஒப்பியிந்த வழலையுட வேகஞ்சொல்ல
உத்தமனே முடியாது யுரைப்பேன்சற்று
தப்பியிந்தச் சுண்ணத்தில் வீரத்தாட்டி
தாளகத்தில் மேற்பூசி ஊதச்சுண்ணம்
செப்பியிந்தத் தாளகத்தை வீரத்திற்பூசி
சேர்த்துமே ஊதுமெள்ளச் சுண்ணமாமே. (197)

ஆமிந்தச் சுண்ணத்தைச் சூதத்திலூட்டி
அப்பனே மணியாகு மதனைவாங்கி
தாமிந்தக் கல்வத்தில் நொறக்கிக்கொண்டு
தாளகமுங் கல்லுப்பு வழலைபோட்டு
சேமிந்தக் கிழிஞ்சிகட்டி ஊதிப்போட
சிறப்பான சுண்ணும்பாஞ் செப்பக்கேளு
போமிந்தச் சுண்ணும்பை வங்கத்தப்பி
உத்தமனே புடம்போடச் சுண்ணமாமே. (198)

சுண்ணமென்ற வங்கத்தைச் சாரத்தப்பி
சுகமான மணல்புடமா யூதிப்போடு
சுண்ணமென்றால் கடுஞ்சுண்ணஞ் சாரமப்பா
சூட்டினதோர் விரல்தெரிக்குஞ் சுண்ணவேகஞ்
சுண்ணமென்ற சாரத்தைத் துருசுக்கப்பச்
சுக்காகு மூதிடவே சுண்ணமாகுஞ்
சுண்ணமென்ற துருசதனைத் தங்கத்தப்பி
அடியாகப் புடம்போடு சுண்ணந்தானே. (199)

### சூதமணி.

தானென்ற பரிச்சுண்ணஞ் சூதத்தாட்டி
தயங்காதே மணியாகுந் தன்னைவாங்கி
கானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூது
கடுஞ்சுண்ண மாகுமிந்தச் சூதந்தானே
கோனென்ற சுண்ணமொன்று தங்கம்காலில்
கூட்டிநன்று யுருக்கியதை மணியாய்வாங்கி
வானென்ற அஞ்சுசுண்ணக் குகையிலூத
மல்லிகைப்பூப் போலாகுஞ் சுண்ணம்பாரே. (200)

### சூதமணிச் சுண்ணம்.

பாரிந்தச் சுண்ணத்தால் வேதைகோடி
பலபலவாந் துரைகோடி பரிசங்கோடி
நேரிந்தக் களங்கஞ்செந் தூரங்கோடி
நிலையான குருக்கோடி மெழுகுகோடி
ஆரிந்தப் போக்கறிந்து செய்யப்போரார்
அரகரா சிவசிவா அறியப்போகா
தூரிந்தப் படியென்று யறியமாட்டார்
சொல்லரிது சொல்லரிது சுண்ணப்போக்கே. (201)

போக்கான யிச்சுண்ணம் வீரத்தாட்டி
புகழான துருசின்மேற் பூசியூத
தாக்கான கடுஞ்சுண்ணம் கண்டராச்சு
தனிச்சுண்ண முறைசொல்லச் சார்பைக்காணேன்
வாக்கான மனமெட்டா புத்தியெட்டா
மவுனமுற்ற மெஞ்ஞான வரைக்கமிதுக்கும்
நோக்கான நடுநோக்கா யோடும்வேதை
நூறுசங்கம் நிகரல்ல நுணுக்கமுற்றே. (202)

நுணுக்கமுற்றத் துருசியிலே வீரம்போட்டு
நுகரான அண்டமொன் றதிலேபோட்டு
துணுக்கமுற்று பத்தண்டஞ் செந்தூரமாகும்
துறந்தபின்னும் பொட்டிட்டால் சுண்ணமாகும்
அணுக்கமுற்று வண்டத்தி லனந்தம்வேதை
ஆடுவதை விரித்துரைக்க ஆயிரநாவேணும்
சிணுக்கமுற்று அணிந்தாக்கால் வாதமாமோ
செப்பிடவே குருவேணும் சேர்ந்துதேடே. (203)

தேடுவது யெங்கேயென்று சோம்பினக்கால்
சித்தியில்லை முத்தியில்லை சேரப்போச்சு
நாடுவது யெங்கென்று விட்டாயானல்
நாயாகிப் பேயாகிப் பிறப்பாய்சொன்னேன்
ஓடுவது யெங்கேயென்று ஊசென்றானல்
ஓகோகோ லட்சயங்க ளொன்றுமில்லை
ஆடுவது யெங்கென்று விட்டாயானல்
அழிந்துசடம் போகுமப்பா அறிந்துகொள்ளே. (204)

அறிந்துகொள் அண்டமென்ற சுண்ணத்தாலே
அற்புதமோ நிற்புதமோ சுண்ணமாகும்
பிறிந்துகொளச் செந்தூரஞ் சங்கந்தாண்டி
பேரான களங்கமென்று லக்கோயில்லை
மறிந்துகொள்ளுஞ் செயநீரேர மெழுகோபற்பம்
வாகான சுட்டினமோ கோடாகோடி
பறிந்துசென்று குளிகையிலே லேஷதாகும்
பரமாயும் நந்தியெனப் பகருங்காலே. (205)

காலென்று காற்றுப்போல் சுற்றியாடுங்
கடல்போல உலகமெல்லாங் கவிழ்ந்துபோகும்
மேலென்ற வெளிகாட்டும் விண்ணிலாடும்
வேதாந்த சாரமெல்லாம் விடுவித்தோங்கும்
கோலென்ற மூலத்தில் லிங்கம்பேசும்
கொடியதொரு கண்டத்தி லெட்டும்பேசும்
மாலென்ற புருவமப்பம் மூலம்பேசும்
வானடர்க்து சந்திரனும் பேசுமப்பா. (206)

பேசுமப்பா குருபத்தி லகாரம்நின்று
போரான விந்துமுதல் நாதம்பேசும்
கூசுமப்பா சத்தியென்ற மாயாமாயம்
கூரான வெட்டதவுங் குவிந்துபேசும்
தூசுமப்பா பரத்திஞெளி நன்றாய்க்காணும்
சுகமாக யிம்மட்டும் புரியட்டமாச்சு
வீசுமப்பா முப்பாழும் திறந்துகாணும்
வேதாந்த மவுனத்தாய் வெளியாவாளே. (207)

சத்திசோரூபம்.

வெளியான வுன்தாயைக் கண்டாயானல்
விரவிநின்ற ரவிகோடி வன்னிகோடி
தளியான மதிகோடி காந்திகாணும்
தாயையங்கே நோக்கவென்றால் கண்கொள்ளாது
சுளியான சுளியினுள்ளே சிக்கினுப்போல்
சொக்குமங்கே மனஞ்சற்றும் சோர்ந்திடாதே
குளியான தமர்வாசல் நன்றாய்ப்பாரு
கூரான வுன்தாயைத் தியானம்பண்ணே. (208)

பண்ணுவதும் பண்ணாது மிரண்டுமில்லை
பார்க்கிறதும் பார்க்காது மிரண்டுமில்லை
எண்ணுவது மெண்ணாது மிரண்டுமில்லை
யேறுவதும் யேறாது மிரண்டுமில்லை
உண்ணுவது முண்ணாது மிரண்டுமில்லை
உறங்குவது முறங்காது மிரண்டுமில்லை
கண்ணுவதுங் காணாது மிரண்டுமில்லை
கருத்துணர்ந்த தவயோகி தமரிற்புக்கே. (209)

புக்கிடவே பூரணத்திற் கண்டவீதி
போடதிலே குளிகையென்ற குதிரையேறி
ஒக்கிடவே கரையில்லை பாருபாரு
ஓகோகோ பூரணத்தி லொளியேகாணும்
அக்கிடவே செல்லுவான் திரும்புவானே
அப்பனே ஞானமெல்லாங் கைக்குளாகுந்
தொக்கிடவே தூலசடம் போகுமார்க்கம்
துலையாத வெளிகடந்த சூட்சஞ்சொல்லே (210)

சொல்லுமையா கண்டமென்ற குருவேகீறும்
துரியமென்ற அந்தத்திற் சோதியோனே
மல்லுமையா தூலமெப் படிதான்போச்சு
மக்களே சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளும்
செல்லுமல்லோ முளைக்கம்பம் வெண்டாய்ப்போகும்
சேரிதபோற் குளிகையிட யிப்படியுமாகும்
அல்லுமல்லோ இரவிகண்டால் வெளிச்சமாகும்
அப்படியே ஞானத்தால் சூட்சமாமே. (211)

சூக்ஷமாந் தூலசட்டங் கமலினிக்கி
சொற்பொரிய சூட்சம்விட்டால் காரணமாயிற்குக்
சூட்சமாய்ச் சாரணையின் முறையைக்கேளு
துலங்கியதோர் பாஷாண மறுபத்துநாலுஞ்
சூட்சமாய் உபரசங்கள் சொல்லக்கேளுஞ்
சுகமாக ஒருநூறு யிருபத்தொன்று
சூட்சமாய் லோகங்கள் பத்துஒன்று
அடியான ரத்தினங்கள் ஒன்பதாச்சே. (212)

ஆச்சப்பா துகையெல்லாம் யிருநூற்றைந்து
ஆகமொத்த மானால்சா ரணைதானென்று
வாச்சப்பா ஐந்துதிரம் பண்ணநீயும்
வாகான அஷ்டமா சித்தியாச்சு
ஓச்சப்பா யிப்படியொன் பதுவும்நாலும்
உத்தமனே கமலினியா மணியேயாச்சே
கூச்சப்பா பதினாறுந் தீர்த்தாயானால்
கொடிதான சொரூபமென்ற குளிகையாச்சே. (213)

குளிகைக்குப் பேரதுவும் சகடமாச்சு
குமட்டியதில் பூணால் சேவமாச்சு
குளிகைக்குக் குளிகையிது நன்றாய்க்கேளு
கொடியதொரு சாரணையில் வேகமேறும்
குளிகைக்குச் சாரணையைச் செய்யாமற்றான்
கூரான வுலகத்தோர் கெட்டுப்போனார்
குளிகைக்கு வரவறிந்து செய்வதாரு
குவட்டிலுள்ள சித்தருக்குக் கூடுங்காணே. (214)

கூடுமப்பா கட்டினமோ காரசாரம்
குலாவியதோர் சுண்ணம்புங் காரசாரம்
ஆடுமப்பா ஆட்டெல்லாங் காரசாரம்
அப்பனே வாதமெல்லாங் காரசாரம்
நீடுமப்பா குளிகையெல்லாங் காரசாரம்
நேரான துரையெல்லாங் காரசாரம்
ஓடுமப்பா காயசித்தி காரசாரம்
ஓகோகோ லோகமெல்லாஞ் சாரந்தானே. (215)

சாரம்விட்டால் சாரமில்லை விசாரமாச்சு
சகலதுறை சகலகன்மம் தயங்கிப்போச்சு
காரம்விட்டால் காரமில்லை சுண்ணம்பெல்லாம்
கைமுறையாய்க் கடுங்கார மேற்றுயேற்று
பூரம்விட்டால் சுருக்கில்லை சுண்ணம்புக்குப்
போளம்விட்டால் தொழிலில்லை வருணத்துக்கு
ஆரம்விட்டு உப்புவிட்டால் புடமேபோச்சு
அப்பனே காலையுந்தா னறிந்துகொள்ளே. (216)

சரக்குகள் மடிதல்

கொள்ளப்பா காரத்தால் சாரஞ்சாகுஞ்
சுலாவியதோர் சாரத்தால் காரஞ்சாகுந்
தள்ளப்பா வுப்பாலே பூரஞ்சாகுந்
தனிப்பூரச் சுண்ணத்தா லுப்புச்சாகும்
விள்ளப்பா தாளகத்தால் கெந்திசாகும்
விளங்கியதோர் கெந்தியால்தா ளகமுஞ்சாகும்
முள்ளப்பா துருசுனாற் சூதஞ்சாகும்
உத்தமனே சூதத்தால் துருசுசாமே. (217)

சாமப்பா சீனத்தால் சூடன்சாகுந்
தனித்தொரு சூடனால் சீனஞ்சாகும்
வேமப்பா காரத்தால் பூரஞ்சாகும்
விளங்கியதோர் பூரத்தால் காரஞ்சாகும்
மோமப்பா வுப்பாலே யிந்துசாகும்
உத்தமனே யிந்துவா லுப்புச்சாகும்
வாமப்பா வங்கத்தால் வெடியுப்புச்சாகும்
வளங்கியதோர் வெடியுப்பால் வங்கஞ்சாமே. (218)

வங்கமென்ற கருவங்கம் நிமிளையைக்கொல்லும்
வளமான நிமிளைவங் கத்தைக்கொல்லும்
சிங்கமென்ற சூதந்தங் கத்தைக்கொல்லும்
சிறப்பான தங்கஞ்சூ தத்தைக்கொல்லும்
பொங்கமென்ற சவுக்கார மெழையுங்கொல்லும்
போகமுனி கமலமுனி மூலருந்தான்
சங்கமென்ற கைபாகஞ் செய்பாகங்கள்
சடையுடையோ னாதியென்று புகழ்ந்திட்டாரே. (219)

புகழ்ந்திட்ட நாகந்தங் கத்தைக்கொல்லும்
புகழான வங்கம்வெள் ளியைத்தான்கொல்லும்
புகழ்ந்திட்ட இரும்பதுதான் செம்பைக்கொல்லும்
போக்கான யப்பிரேகஞ் சூதத்தைக்கொல்லும்
புகழ்ந்திட்ட நாகமது லிங்கத்தைக்கொல்லும்
போக்கோடே லிங்கத்தால் கருநாகஞ்சாகும்
புகழ்ந்திட்ட பூநாகந் தீபனத்தைப்பண்ணும்
பூட்டுகிற சாரணைக்குப் போக்கிதாமே. (220)

போக்கான யிச்சேர்வை லோகச்சேர்வை
புகழ்பெரிய செந்தூரக் களங்கச்சேர்வை
தாக்கான குருச்சேர்வை சுண்ணச்சேர்வை
சாருகிற கட்டினமுருக் கினமுஞ்சொன்னேன்
வாக்கான என்வாக்கின் வலுமைகண்டு
வளமுடனே மனதோர்மை யாகநீயும்
நோக்கான புத்திகொண்டு மக்காள்மக்காள்
நன்னிமையாய்ப் பார்த்தாடு காரந்தானே. (221)

சூடன்.

காரமென்ற கடுங்காரஞ் சூடஞ்சொல்வேன்
கருவாழைக் கிழங்கோடு கருவாப்பட்டை
காரமென்ற சீனமொடு வெடியுங்கூட்டி
கைமுறையா யெறித்தாக்கால் புடம்போலாகும்
ஆரமென்ற தீய்க்கொழுத்த நிற்மலமாய்ப்போகும்
அப்பனே வாசனைதான் கருவாப்பட்டை
பூரமென்று யிதைச்சொல்வார் சூடனென்பார்
புகழான கடுங்காரப் போக்கைக்கேளே. (222)

கேளப்பா யிதைக்கட்ட யாராலாகுங்
கெடியான வாதிசொல்வார் சித்தர்சொல்வார்
நீளப்பா யிதுசெத்தால் பரிசவேதை
நேரான தூபமுதற் தீபவேதை
தேளப்பா சரக்குக்குப் பொல்லாச்சூடன்
தெளிவாகக் கட்டுவது கடினமெத்த
வாளப்பா யிதைக்கட்ட. வரிசைசொல்வேன்
மக்களே வகையாகப் பார்த்திடீரே. (223)

கற்பூரக்கட்டு.

பார்த்திடீர் சீனமென்ற சுண்ணத்தோடு
பரிவாக வெடியுப்புச் சூடன்கூட்டி
போர்த்திடீர் யரைத்தெடுக்கச் சுண்ணமாகும்
புகழான சாரமிட் டதனோடாட்டி
பார்த்திடீர் செயநீரா மந்தநீரில்
பாங்கான சூடனைத்தான் துவைத்துப்போடு
ஆர்த்திடீர் பதங்கண்டு சங்குநீற்றில்
ஆற்றிமெள்ளத் தீயெரிக்கக் கட்டுந்தானே. (224)

கற்பூரச் சுண்ணம்.

கட்டியதோர் சூடனுக்குக் காரமேற்றி
கடியதொரு யஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
ஒட்டியதோர் சூடனுட சுண்ணவேகம்
ஓகோகோ கடுஞ்சுருக்கு யுரைக்கப்போகா
தட்டியதோர் துறையெல்லா மிதனால்வேதை
சாகாத சரக்கெல்லா மிதனால்சாகும்
வெட்டியதோர் கடுகெட்டு யிதிலேபோக்கு
நேராக அறிந்தவனே வாதியாமே. (225)

ஆமப்பா யிச்சுண்ணம் வீரத்தாட்டி
அப்பனே துருசின்மே லப்பிப்போடு
ஓமப்பா அஞ்சுசுண்ணக் குகையிலூத
உத்தமனே கடுஞ்சுண்ணந் துருசதாகும்
வேமப்பா யண்டரண்ட மிடைக்கிச்சாரம்
வேதித்து அரைத்தாக்கால் செயநீராகும்
சாமப்பா யின்னீரில் பூரந்தோய்த்துத்
தாக்கிநன்று யூதிடவே சுண்ணமாமே. (226)

ஊதிடவே பொரிப்போல்கற் பூரச்சுண்ணம்
உத்தமனே யிச்சுண்ணம் வீரத்தாட்டி
கோதிடவே வழலையின்மேல் அப்பிப்போடு
கொடியதொரு ரவிபடவே யெண்ணெய்கக்கும்
போதிடவே யிதினோடே உப்புநீற்றில்
புடம்போடச் சவுக்காரச் சுண்ணமாகும்
வாதிடவே கடுங்கார மதிலேயேற்றி
வைத்தெரித்தால் வழலைமெத்த வேகந்தானே. (227)

வேகமென்ற வழலையைத்தா னுப்பிலப்பி
வெகுவேக மாயூது முப்புச்சுண்ணம்
தாகமென்ற உப்பைகெந் தகத்துக்கப்பி
தாக்கியிதைத் தீயாட்டி யூதிப்போடு
பாகமென்ற கெந்தியைவீ ரத்துக்கப்பி
பரிவாகச் சுண்ணும்பா மூதலூது
தாகமென்ற வீரந்தா ளகத்துக்கப்பி
தணலாட்டி யூதிடவே சலவையாமே. (228)

சலவையென்ற தாளகத்தை வங்கத்தப்பி
தாக்கியொரு புடம்போடத் தவளமாகுஞ்
சலவையென்ற வங்கத்தை நிமிளைக்கப்பி
சாதகமா யூதிடவே சுண்ணமாகுஞ்
சலவையென்ற நிமிளைதனை சாரத்தப்பி
சாதகமாய்ப் புடம்போடச் சுண்ணமாகுஞ்
சலவையென்ற காகத்தைச் சாரத்தப்பி
சார்பாகப் புடம்போட்டுத் தணலிலூதே. (229)

தணலிலே வெங்தொடுங்குஞ் சாரச்சுண்ணம்
தாக்கப்பா வீரமிட்டுத் துருசிமேலே
தணலிலே வைத்தூது துருசுச்சுண்ணம்
சதகோடி விரிந்தாடுஞ் சிங்கிக்காகுந்
தணலிலே யிச்சுண்ணந் தங்கத்தில்பூசு
தவளம்போல் சுண்ணும்பாந் தங்கம்பாரு
தணலிலே தங்கத்தை வீரத்தப்பி
தாக்கியொரு புடம்போடச் சுண்ணமாமே. (230)

சுரபிக்குளிகை.

போடப்பா துருசின்மேல் வீரச்சுண்ணம்
புகழான யஞ்சுசுண்ணக் குகையிலூது
ஆடப்பா யெடுத்துஅண் டத்தில்போட்டால்
அப்பனே தூபமுதல் பரிசவேதை
நீடப்பா கெந்திமுதல் சாரவேதை
நிலையாமல் சுரபியென்ற குளிகையாகும்
நேரப்பா சணபேதி தீபவேதை
நேரான தாம்பூல வேதையாமே. (231)

வேதையென்று சொல்லுவது யெல்லாமாகும்
விளங்கியதைக் கண்டுதேர் சுண்ணமாகும்
பாதையென்ற வழலையுப்புச் சிச்கிற்ருனல்
பலபலவாக் துறையாகுங் குளிகையாகும்
போதையுண்டு போதத்தால் பாருபாரு
புகழான சவுசஷ்டி கர்மசித்தி
காதையென்று யிதைவிட்டு வாதம்பார்த்தால்
கால்காசுங் காணுது கலங்குவாரே. (232)

கட்டுவேகை.

கலங்காமற் சொல்லுகிறேன் லோகப்போக்கை
கைமுறையாய்த் தங்கமிட நாகங்கட்டும்
நலங்காமல் நாகமிடத் தங்கங்கட்டும்
நலமான வங்கமிட நிமிளைகட்டும்
துலங்காமல் யப்பிரேக சத்தேயானல்
துடியாகச் செம்புகட்டுஞ் சுண்ணமாகும்
புலங்காமல் பூனகச் சத்தேயானல்
புகழாக யிருவங்கங் கட்டிப்போமே. (233)

கட்டுமப்பா கருவங்கங் கௌரிசத்தால்
கரையில்லை வேதையுமாங் களங்கங்கோடி
மட்டுமப்பா கெந்தீசத்து இரும்பில்போட
வகையேது துகையேது கரைகொள்ளாது
தொட்டுமப்பா காந்தசத்தில் தாளகத்தைத்தாக்க
துரையிதிலே யென்னவென்று சொல்லப்போறேன்
மூட்டுமப்பா வெள்ளியிலே வங்கரசந்தாக்க
மூதண்டங் கிழிந்தாட வெள்ளியாமே. (234)

ஆமப்பா யிந்தவகை லோகமெல்லாம்
அப்பனே செந்தூரம் பண்ணலாகும்
போமப்பா களங்காகுஞ் சுண்ணமாகும்
போக்கறிந்து விரித்தாக்கால் போகுஞ்சங்கம்
காமப்பால் வித்தைசிவ யோகிக்காகும்
கைமுறையா யிந்தவித்தை சமுசாரிக்காம்
போமப்பா யிதுக்குயென்ன ஆதியென்றால்
உத்தமனே வழலையென்ற சுண்ணந்தானே. (235)

## சுண்ண ஆதி.

தானென்ற சுண்ணத்துக் காதியென்ன
சாதகமாய் முந்திமுந்தி வழலைச்சுண்ணம்
தானென்று மிதையரைத்துக் கடைவார்கோடி
சாரமில்லை சாரமில்லை யுப்புப்போச்சு
தானென்று கவிசித்து பெரியோர்கோடி
சந்தயமாய்க் கால்வாசி கூடுங்கூடுந்
தானென்று சுண்ணமிட்டு வருப்பார்கோடி
தன்னுக்கு ளரைவாசி சாகும்பாரே. (236)

பாரப்பா கட்டியின்மேல் சுண்ணம்பூசி
பாங்காக ரவியில்விட்டுப் பிறிப்பாரெண்ணெய்
நேரப்பா யிதுமுக்கால் நேர்ந்துபோடும்
நிலைபாகச் செயநீரில் துவைத்துக்கட்ட
வாரப்பா யெண்ணெயெல்லாம் வடியுங்கீழே
மகத்தான சுண்ணமிது வழலைச்சுண்ணம்
ஆரப்பா யிதினுட்டைக் காணப்போறார்
அரகரா சிவசிவா ஆடுந்தானே. (237)

ஆடுமென்று சொல்வார்கள் வழலைப்போக்கை
அறிவார்க ளாருமில்லை யறிவான்வாதி
கூடுமென்று சொல்வார்க ளினந்தான்கோடி
கூட்டறியார் மாட்டறியார் குருட்டுவாதி
நாடுமென்று சொல்வர்பல வேடம்பூண்டு
நாட்டிலே திரிந்தலையும் சண்டிமாடு
சாடுமென்று சொல்வருப ரசத்தின்வித்தை
சாற்றறியார் பார்க்கறியார் தயங்குவாரே. (238)

தயங்காதே சுண்ணத்தின் கருவைச்சொல்லி
சாற்றுகிறேன் சாற்றுகிறேன் கேளுமக்காள்
தியங்காதே கற்சுண்ணங் கிளிஞ்சிச்சுண்ணஞ்
சேர்ந்துநின்ற சங்குசெந் தகத்தின்சுண்ணங்
கயங்காதே நண்டுக்கல் சுண்ணமுதலஞ்சுங்
கரையேறக் கலந்துகொண்டு கருத்தானப்பா
மயங்காதே யின்னமுண்டு மாட்டியாட்ட
மக்களே சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளே. (239)

சுண்ணக்கரு

கேளப்பா வெண்கருவாஞ் சுண்ணம்பீராங்
கெடியான பழச்சாறும் வாய்நீராகும்
தாளப்பா யிதுபத்துஞ் சுண்ணத்துக்கு
சமரசமா யறிந்தவனே வாதயோகி
வாளப்பா சாஸ்திரத்தின் வழியைவிட்டு
வகைவிட்டுத் துறைவிட்டு மார்க்கம்விட்டு
ஊளப்பா வூனையிட்டுச் சுட்டாலென்ன
உட்கருவும் புறக்கருவு மறியான்தானே. (240)

அறியாமல் கேள்விகொண்டு வாதஞ்சுட்டு
ஆத்தாமல் பொய்யென்று லென்னசொல்வேன்
கறியாமல் தோட்டத்திற் காயவைத்து
கழுவியதோர் சட்டியிலே பார்க்கலாமோ
பிறியாமல் குருவைவிட்டுக் காணமட்டும்
போகக் கண்டபின்பு குருவின்வார்த்தை
நெறியாமல் நின்றவர்க்கே வாதசித்தி
நேரான ஞானசித்தி நிலைக்குங்காணே. (241)

காணப்பா நூலிருந்தும் குருதான்வேணும்
காட்டுகிற துறைக்கெல்லாங் களறவேணும்
பூணப்பா யின்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
புகழாக யெனைப்போலே மற்றோர்சொல்லார்
தோணப்பா சொன்னதனு பவித்துச்சொன்னேன்
சூட்சமுற்ற புத்தியுள்ளார் கண்டுகொள்வார்
வீணப்பா வல்லஅல்ல வென்னூற்சாரம்
வேதாந்த சாரமதின் வித்தைபாரே. (242)

வித்தையொன்றின் சத்தால்திக் கெல்லாங்கட்டும்
வெகுநாளே யுடலிருந்தால் வேதைகோடி
வித்தையொன்றின் யஷ்டமா சித்தியாடும்
விளங்கிநின்று சிவயோகம் வேறுங்காட்டும்
வித்தையொன்றின் புரியட்டம் வெளியேயாகும்
விளங்கியதோர் நிற்குணத்தில் மேவலாகும்
வித்தையொன்றின் வெகுகாலஞ் சமாதிமுட்டும்
விளங்கியதோர் சூதத்தின் விருதுதானே, (243)

## வெட்டு மார்க்கம்

விருதிட்டு வெட்டுவது யாரையென்றால்
விளக்கிநன்றாய்ச் சொல்லுகிறேன் கேளுமைந்தா
கருதிட்டுப் பரிசமொடு சத்தரூபம்
கலந்துநின்ற ரசமோடு கெந்தமைந்தும்
பருதிட்டு வெட்டினா லவனேஞானி
பலபலவாய்க் கவலையுற்றால் மனமேறாது
பொருதிட்ட கருவியெல்லாம் நீக்கிமூலம்
புகுந்தவனே சிவயோகி புகழலாமே. (244)

புகழேது மகத்தினா லாவதேது
பொழுதுதொட்டு விடியமட்டும் பேச்சாலேது
மகளேது தாயேது பெண்டீரேது
மாயமென்ற வரிசையினால் மயங்கிற்றய்யோ
நிகழேது நிகழ்ச்சியென்ற கோபமேது
நேரான மைந்தருட பாசமேது
அகளேது சையோக சுகமங்கேது
அப்பனே மலசலம்போ லெண்ணிடாயே. (245)

எண்ணியெண்ணி மனஞ்சலித்து விட்டஞானி
யெங்கிருந்தே னெங்குவந்தே னெவிடந்தானென்
நண்ணிநண்ணி மனங்கலந்த யோகியானால்
நற்றான யொளிப்பாழி லுருகவேணும்
பண்ணியொண்ணிப் பார்க்கநல்ல வாதியானால்
பருவமுடன் வழலையைத்தான் பார்க்கவேணும்
மண்ணிமண்ணின் வித்தல்லோ யிந்தத்தேகம்
வாழ்கிறதா விடுகிறதா கண்டுசொல்லே. (246)

சொல்லுவது ஞானியென்றால் சடத்தைப்போடு
சுகமான யோகியென்றால் சடத்தைப்பேணு
மல்லுவது சித்தனென்றால் மும்மூலம்பாரு
வகையறியத் தெரியாட்டாற் கிரிகையிலேநில்லு
கொல்லுவது மாகாது சீவன்றன்னை
குவிந்துநின்ற பூசைக்குத் தோஷமில்லை
அல்லுவது மறிந்தவனே விவேகவாதி
அறிவதற்கு வெகுபாடு அறிந்துகூடே. (247)

கூடென்று சொன்னுக்கால் கூடப்போமோ
குருதொட்டுக் காட்டிடவே கூடலாகும்
ஆடென்று சொன்னுக்கா லாடலாமோ
ஆசான்தான் சொன்னபின்பு ஆடவேணும்
நாடென்று சொன்னுக்கால் நாடலாமோ
நற்குருவின் சொற்கேட்டு நாடவேணும்
ஊடென்று சொன்னுக்கால் ஊடப்போமோ
உத்தமனே குருசொல்ல ஊடலாமே. (248)

குரு உபதேசம்.

ஊடலாம் லட்சயத்தைக் குருசொற்கேட்டு
உரைத்துநின்றுல் மனமதிலே ஒன்றிப்போகும்
நீடெல்லா முறைத்தபின்பு வேருய்நின்று
நிலையான பூரணமா யெங்குந்தானுய்
நாடலாம் நாம்போத நாமேயென்று
நம்மாலே பிரபஞ்சம் விரிந்ததென்று
ஆடலாம் அட்டமா சித்தியெல்லாம்
அப்பனே நீவேருய் நின்றபாரே. (249)

நின்றவனே மெஞ்ஞானி நிலைத்தசித்தன்
நேரான சிவயோகி வாசியோகி
நின்றவனே ராஜயோகி அனந்தயோகி
நிலையாத பிறவியெல்லாம் நிகழ்ந்தயோகி
நின்றவனே யாரென்று பார்த்தாயானல்
நிறைந்தமன மசைவற்று நின்றமார்க்கம்
நின்றவனர் நேர்ந்தவனர் ரெண்டும்பார்க்கில்
நிகரில்லா தேகுமது நினைவில்காணே. (250)

நினைவாலே பிடித்தலைதல் சரிதைமார்க்கம்
நேர்ந்தபின்பு கிரிகையிலே யிறங்கிச்செய்தல்
நினைவாலே பார்ப்பதுவே யோகமார்க்கம்
நிலைத்துடனே ஞானத்தில் நேர்ந்துபோவார்
நினைவாலே குருசொல்ல வாதமாச்சு
நீகாத்த சுண்ணம்புத் தொழிலுமாச்சு
நினைவாலே கர்மதர்ம மிரண்டுமாச்சு
நேரிதுக்குத் துரிசினுட வித்தைதானே. (251)

துருசு வைப்பு.

வித்தையிலே உத்தமந்தான் துருசுவித்தை
விளங்கியதின் பிறப்புநன்றாய் விரித்துச்சொல்வேன்
பத்தையிலே செம்புப்பாத் திரமும்பண்ணி
பரிவாக வெடியுங்கல் லுப்புப்போட்டு
மூத்தையிலே தயிர்வார்த்துப் பழச்சார்வார்த்து
முனையான குதிரையுட சத்தம்வார்த்து
அத்தையிலே குழிவெட்டி லத்திபோட்டு
அதின்மேலே மண்ணிட்டு மூடுவாரே. (252)

மூடிவைப்பா ராறுதிங்க ளெட்டுத்திங்கள்
முனையான பசுமைநிறத் துருசதாகும்
நீடிவைப்பா ரிதையெடுத்துத் துருசியென்று
நேராக இதையெடுத்துக் குருவேசெய்வார்
கூடிவைப்பா ரிதுக்குளிந்த மகிமையென்ன
குலாவிகின்று சிவன்செம்பு சத்தியுப்பு
நாடிவைப்பா ரிதினலித் தனையுமாச்சு
நாமறியோம் நலமில்லாத் துருசப்போக்கே. (253)

துருசுக்கட்டு.

போக்கான துருசிதனைக் கட்டச்சொல்வேன்
புகழாக மனமுன்னிக் கேளுமக்காள்
தாக்கான வெடியுப்புப் புளியுங்கூட்டி
சமனுக யிடித்துநன்றாய்த் தீயைமூட்டி
வாக்கான பனியில்வைக்கச் செயநீராகும்
மக்களே கடுஞ்சுண்ண மிந்தநீர்தான்
காக்கான சாரத்தி லிந்நீர்விட்டு
கலமாக கெட்டடங்க ஆட்டுஆட்டே. (254)

கெட்டடங்கிச் சாரமங்கே செத்துதப்பா
நேராக அதையெடுத்துப் புடத்தைப்போடு
பட்டடங்கா யிதையெடுத்துப் பனியில்வைக்க
பாங்கான செயநீராஞ் சாரந்தானும்
மட்டடங்கா யிதினுள்ளே காரங்கூட்டி
மத்தித்துத் துருசின்மேல் மாட்டிப்போடு
குட்டடங்கப் பிழையுங்கள் துருசுகட்டும்
குலாவியிதை நேர்பாகப் பூசிவாட்டே. (255)

வாட்டயிலே கிளிப்போலே யிருகிக்கட்டும்
மருவியது பிலப்படப்பின் னுருக்கால்வாட்டு
நீட்டயிலே அத்துருசு நின்றுதானல்
நிலைத்துதப்பா வாதமென்றும் நினைவாய்க்கேளு
மூட்டயிலே குருவாகுஞ் சுண்ணமாகும்
மூதண்டக் களங்காகுஞ்செந் தூரமாகும்
ஆட்டயிலே மெழுகாகுஞ் செயநீராகும்
ஆகாகா யிதின்போக்கை யறிவாராரே. (256)

அறியாத துருசின்மேல் வழலைச்சுண்ணம்
அப்பனே வீரமிட் டாட்டிப்பூசி
மறியாத அஞ்சுசுண்ணக் குகைவைத்தூத
மல்லிகைப்பூப் போலாகுந் துருசுச்சுண்ணம்
நெறியாக யிதிற்சார மிட்டேயாட்ட
நேராகச் செயநீரா மிதுக்குள்கோடி
பிறியாத யிந்நீரில் பூரமிட்டூது
புகழ்பெரிய சுண்ணும்பாம் பூரந்தானே. (257)

தானென்ற பூரத்தை வீரமிட்டாட்டி
சாதகமாய் வழலையின்மே லப்பிப்போட
கானென்ற வெண்ணெயெல்லாம் ரவியிற்கக்குங்
கடுஞ்சுறுக்கு கடுஞ்சுறுக்கு வழலையப்பா
கோனென்ற வழலையிலே வீரமிட்டாட்டி
கூறான தாளகத்திற் பூசியூத
வானென்ற வெளுப்பதுபோல் சலவையாகும்
வங்கத்தை வீரமிட்டு அப்புவாயே. (258)

அப்பியந்த வங்கத்தைப் புடத்தைப்போடு
ஆச்சரிய மாச்சரியஞ் சுண்ணமாகும்
ஒப்பியிந்த வங்கத்தில் வீரமிட்டாட்டி
உத்தமனே நிமிளையின்மேற் பூசியூத
கொப்பியிந்த நிமிளைகடுஞ் சுண்ணமாகும்
கொடிதான சுண்ணத்தில் வீரங்கூட்டி
தப்பியிந்தச் சாரத்திற் பூசிமைந்தா
சாதகமாய் மணலில்வைத்துத் தீயைமூட்டே. (259)

ஆட்டினதோர் சாரத்தில் பூரச்சுண்ணம்
அப்பனே வீரமிட் டரைத்துக்கட்டி
கூட்டியதோ ரஞ்சுசுண்ணக் குகைவைத்தூதி
கூறரிது வெகுவேகஞ் சாரச்சுண்ணம்
நீட்டினதோர் விரல்தெறிக்கும் வாதமென்றால்
நேர்ந்துயிந்தச் சாரத்தில் வீரங்கூட்டி
காட்டினதோர் துரிசியின்மேல் அப்பிப்பாரு
கடுஞ்சுருக்காம் கல்போலாங் கண்டுகொள்ளே. (260)

கண்டுகொண்ட துருசியைப்போல் வேகங்காணேன்
கடலோட்டம் வேகம்போல் கலந்துபோகும்
பண்டுகொண்ட பாடல்லா மறியாமாந்தர்
பறக்கிறது மிறக்கிறது மிதனாலாச்சு
மொண்டுகொண்டால் வாருதிக்குக் குறைவுண்டாமோ
மூதண்டங் கிழிந்தாடுந் துருசின்வேகம்
தொண்டுகொண்ட யிந்தவித்தை குருதான்சொல்வார்
தொட்டதுபோல் திரிந்தாக்கால் சும்மாவாச்சே. (261)

ஆச்சப்பா தினமொருக்கால் யேட்டைப்பார்ப்பான்
அதுயென்ன யிதுவென்ன வென்றுகேட்பான்
போச்சப்பா வாதமது யில்லையென்பார்
புகழாகக் கண்டவர்தா னாரோவென்பார்
நீச்சப்பா வாதமங்கே உண்டோவென்பார்
நேராகக் குருசொல்ல வேணுமென்பார்
ஊச்சப்பா நூலாலே பலனேதென்பார்
உளுத்தனவன் சொல்லுகிற வுணர்வுதானே. (262)

சிங்கி.

உணர்வாகச் சிங்கியொன்று சொல்வேன்மக்காள்
உற்றுணர்ந்து பார்த்தாக்கா லுண்மைதோன்றும்
தணர்வாக வுடும்பாமை அழுங்குபன்றி
தாயீசற் றவளைமயில் நாயுங்கோழி
குணர்வாகக் கொழுப்பெடுத்து உருக்கிக்கொண்டு
கணக்காக ஒன்பதையுங் களஞ்சுதூக்கு
பணர்வாகப் புழுகைந்து சவ்வாதைந்து
பருவமுட னொன்றாகப் பண்ணிக்கொள்ளே. (263)

பண்ணினது பரிச்சுண்ணம் பூரச்சுண்ணம்
பரிவான துருசென்ற சுண்ணமூன்றும்
ஒண்ணினது ஒருகளஞ்சு வகையொன்றுக்கு
ஒக்கவிட்டு மத்தித்துக் கலத்திலப்பு
நண்ணினது ரவியில்வைத்துக் காந்திபட்டால்
நலம்பெறவே தைலமாம் வழித்துவாங்கி
கண்ணினது நில்லாமல் நன்றாய்வாங்கி
கடக்கவொரு பீங்கானில் வைத்துக்கொள்ளே. (264)

வைத்ததிலே போடுதற்கு மருந்துகேளும்
வாகான வெண்காரஞ் சாரங்கெந்தி
கைத்ததிலே தாளகமும் வீரம்பூரம்
கஸ்தூரி கருநாபி தொட்டியோடு
மொய்த்ததிலே வகையொன்று பணந்தானொன்று
மூணையாமல் தூக்கியிந்த வொன்பதையுமக்காள்
தைத்ததிலே யுரைத்துநன்றாய் தைலம்சேர்த்து
சாங்கமாய் வைமகனே சிங்கியாச்சே. (265)

சிங்கியொடு பொட்டிட்டால் சிவந்தசூதம்
திரும்பாது அரும்பாது சேர்ந்துவெண்ணெய்
பங்கியொரு கிளிகட்டிச் சூடணிலேயாட்டி
பருவமுடன் காண்டியிலே யுருக்கிக்கொண்டு
அங்கியென்ற குகையில்வெள்ளி பொன்போலாடும்
ஆனையென்ற சூதமது பட்டுதய்யோ
கங்கைகொன்றை தும்பைமதி அருகுசூடி
கனிவாக முன்னின்று பேசுவாரே. (266)

சூத குளிகை.

பேசுவார் சூதஞ்சாரணை தான்செய்து
பேராக வெடுத்துந்தா வடமாய்க்கொள்ளு
வாசிவா யென்றுசொல்லி மூட்டியாட
வந்துமுன்னே பஞ்சகர்த்தா நிற்பார்பாரு
ஆசுவார் கேட்டதெல்லா மீவார்யீவார்
அஷ்டமா சித்தியெல்லா மாடலாகும்
தூசிவா வெளிகடந்தா லெல்லாம்போச்சு
சுகமாக நிற்குணத்தின் சேர்திநன்றே. (267)

நன்றான யித்துறைபோல் பதினாறங்கம்
நலமாகத் துருசுவந்த விடங்களெல்லாங்
கன்றான சிங்கிபண்ணச் சூதங்கட்டுங்
கரையேது கணக்கேது லெக்கோயில்லை
குன்றான மலையோடு மண்ணும்பொன்னும்
கூடியிர்தக் குளிகையைச்சா ரணையேசெய்ய
ஒன்றான துரியமட்டுந் தொட்டேயாடும்
உத்தமனே காயசித்தி யுடனேயாமே. (268)

சூதக்கட்டு.

ஆமப்பா சிங்கிகொண்டு கட்டுஞ்சூதம்
அப்பனே சுண்ணும்பா யூதிக்கொண்டு
ஓமப்பா யிதுவொன்று தங்கம்நாலில்
உட்டியதை யஞ்சுசுண்ணக் குகைவிலூது
வேமப்பா யண்டரண்டந் தொட்டதெல்லாம்
வேதைவெகு போக்குவகை சொல்லமாட்டேன்
போமப்பா பலகோடி பிறித்தாடுவோர்க்கு
பொற்குருவும் பொற்சுண்ணம் போக்கிதாமே. (269)

போக்கான குருவைப்போல் வெள்ளிபண்ணு
புகழான வெள்ளிவித்தை பொற்போலாகும்
தாக்கான வேதையிதி லென்னசொல்வேன்
சாதகமாய்ச் சிவசத்தி ரெண்டுவித்தை
வாக்கான தூமமுதற் பரிசவேதை
வகையெட்டு மிதுக்குள்ளே யாடலாகும்
நோக்கான நோக்கோடே கோடிபோக்கு
நுணுக்கத்தில் நுணுக்கமிதில் வரைகாணாதே. (270)

வரைகாணாச் சவுக்காரந் தொட்டுயேற
வகைவகையாய்ச் சுண்ணமென்ற துரைகள்தோறும்
நிரைகாணா வேதையொரு கோடாகோடி
நேராகப் பிறித்துரைக்க வென்னால்கூடா
கரைகாணாக் கடல்காண நினைத்தாப்போல
கண்டமட்டு மாடிடலாம் கணக்கோயில்லை
பரைகாணா யிதினுட்டைப் பார்க்கப்பார்க்க
பாவித்துச் செகசாலம் பூோலேபாரே. (271)

பாரப்பா சுண்ணும்பாய் வெந்ததெல்லாம்
பச்சையிட வேதையாமில் லாட்டார்க்கேளும்
நேரப்பா மேல்நிற்கு முடக்கொள்ளாது
நேரமில்லை யென்மேலே நினைவாய்ப்பாரு
ஆரப்பா யென்னைப்போலே சொல்லப்போறர்
அஞ்ஞூற்றில் வாதமெல்லா மடக்கிப்போட்டேன்
காரப்பா குருபதத்தை மனங்கோணமல்
காத்தவர்க்கு யிந்தநூல் கைக்குள்ளாமே. (272)

ஆமப்பா சடமென்னு ஊத்தைப்பாண்டம்
அதுமேலே ஆசையென்ன மோகமென்ன
ஓமப்பா முந்திமுந்தி மூலம்பார்த்து
உத்தமனே அறுதலமு மூட்டிப்பாரு
காமப்பால் மதியினுள்ளே நிற்குமப்பா
கலந்துண்ணக் காயசித்தி யாகுமாகுஞ்
சோமப்பால் மதியினுள்ளே சத்தியென்று
துலங்கியதோர் மதிகோடி காந்தியாமே. (273)

குருபாதம்.

காந்தியென்ற குருபதந்தா னுதவீட்டில்
கலந்ததே பத்மாசனி யென்றசத்தி
காந்திநின்ற ரவிகோடி யாத்தாள்மேனி
அண்ணடங்கா ஒளியாகும் பார்க்கப்போகா
ஆந்திநின்ற வதின்மேலே கமனசத்தி
கனல்கோடி ஒளியாகக் காணுங்காணும்
காந்தியென்ற சிவத்தினுள்ளே தாயாஞ்சத்தி
கதிர்மதியுங் கோடிகொண்ட ஒளிபோலாச்சே. (274)

ஒளியான பரத்தினுள்ளே யொட்டிநீங்கா
உத்தமனே ரவிகோடி வன்னிகாந்தி
ஒளியான முதற்பாழி லனந்தைப்பெண்தான்
ஒருகோடி ரவிமதிபோல் ஒளிவேகாணும்
ஒளியான வெளிப்பாழில் விருந்தைநிற்பாள்
உத்தமனே ரவிமதியாம் வன்னிகோடி
ஒளியான வெளியொளிப்பாழ் வரையினுள்ளே
உன்மனதுக்கதுதானு முயர்ந்தவீடே. (275)

வீட்டிலே நின்றுரைந்து மயக்கந்தீர்த்து
விளங்கியதின் மேலேயம் பரமதான
காட்டிலே விழுந்தாக்கால் வழியோகாணர்
கைமுறையா யிந்தவழி கருதியேறு
நீட்டிலே விட்டாக்கால் ஞானமாமோ
நினைவாலே கூட்டாட்டால் யோகமாமோ
கூட்டிலே யிருந்தாலென் காட்டில்வாழ்ந்தேன்
குறியாக மனமுறைந்தால் கூடுங்காணே. (276)

கூடுகிற வரிசையிது ஞானவீதி
குருடனுக்கும் வெட்டவெளி யாகச்சொன்னேன்
ஓடுகிற வரிசையிது யோகத்துக்கு
உத்தமனே வாசிகொண்டு ஊதியேறு
ஆடுகிற வரிசையிது உலகமெல்லாம்
அப்பனே குளிகையிட்டு ஆடிப்பாரு
போடுகிற வரிசையிது ஆங்காரத்தைப்
புகழ்பெரிய மூலவன்னிக் குள்ளேபோடே. (277)

மூலவன்னி துலக்கினு லாறுக்குள்ளும்
மும்மூலம் வெளியாகு மேலுங்காணும்
கோலவன்னி யண்டசத்தி கூறுங்காணும்
கொள்கியதோர் பராபரையின் குறிப்புங்காணும்
மேலவன்னி நிஸ்கலமும் வெளியாய்த்தோணும்
வேதாந்த அந்தமெல்லாம் வெளியாய்க்காணும்
மாலவன்னி நிராகாரத் தடங்கினோர்க்கு
மனோன்மணியாள் நடனசங் கீதந்தானே. (278)

தானென்றும் நீயென்று மிரண்டுமற்றால்
சர்வசங்கை தீர்ந்துகொண்டால் ஞானியாவாய்
வானென்றும் மேகமென்றும் மனத்துட்கண்டால்
மவுனமுற்ற நின்றமெஞ் ஞானியய்யா
ஊனென்றும் முயிரென்றும் உன்னுட்கண்டால்
ஓகோகோ மெஞ்ஞானி உற்றவிடமய்யா
கோனென்றுஞ் சீஷனென்ற சொல்மறந்தால்
குறிகெட்டு நின்றதொரு ஞானியாமே. (279)

ஞானிநா னென்பார்கள் வாய்ப்பேச்சாலே
        நல்வினையுந் தீவினையு மிரண்டுங்காணார்
ஞானிநா னென்பார்கள் பாசவலைநீங்கார்
        நலமற்ற போகத்தில் ஆசையாவார்
ஞானிநா னென்பார்கள் தான்வேறுய்நில்லார்
        நாடுகிற பதியைவிட்டு நாய்போலேதிரிவார்
ஞானிநா னென்பார்கள் யேகவெளி காணார்
        நாதாந்தப் பேரொளியை நாடார்தாமே. (280)

ஆறுதலங்காண.

தாமென்ற பதத்தவர்க ளல்லோஞான
        சார்வாகுஞ் சகலசித்துங் கவனங்கொண்டு
ஓமென்ற குண்டலியைக் கண்டாயானல்
        உயர்ந்தாறு தலங்காணு மமுதமூறும்
போமென்ற சொல்லற்று வரவுமற்று
        போக்கத்து நீக்கத்து போதந்தானுய்
ஆமென்ற தத்வமற்று நாணமற்று
        அடங்கிநின்ற பொருளொக்குந் துருசியாட்டே. (281)

ஆட்டான போராட்டு ஆட்டுதற்கு
        அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
மூட்டான வெகுமூட்டுப் போகப்போக
        மூதண்டங் கிழிந்தாடும் வீரவேகம்
சூட்டான சூட்டெல்லா மிதினுலாச்சு
        சுண்ணும்பு வகையெல்லா மிதினுலாச்சு
பூட்டான பூட்டெல்லா மிதினுலாச்சு
        பொற்சுண்ண மிதினுலே பிறந்தவாறே. (282)

வாதஆதி வீரம்.

வாரான வீரத்தால் செந்தூரமாச்சு
        வகைவகையாய் நவலோகந் தண்ணீராச்சு
தாரான உபரசங்கள் சத்துமாச்சு
        சகலமுமே மெதுவாகத் தவளமாச்சு
நீரான யினங்களெல்லாம் வேதையாச்சு
        நிமிஷத்தில் தங்கமையாற் சாவுபோச்சு
கூரான வாதத்துக் காதிவீரங்
        கொடுஞ்சுறுக்கு கொடுஞ்சுறுக்கு குணத்தைக்கேளே. ()

## வீர உற்பத்தி.

கேளப்பா க்ல்லுப்பு வெடியுப்புஞ்சாரங்
கெடியன்ன பேதியுடன் சீனிக்காரம்
நாளப்பா துருசியுட னுறுங்கூட்டி
நலமாக யிந்திடைக்கி ரசந்தான்வாங்கி
சூளப்பா திராவகத்தால் ரசத்தைக்கொன்று
துடியாக யிதினேடே கலந்துகொண்டு
நூளப்பா குப்பியிட்டு யெரிக்கமேலே
நோக்கிநின்ற பதங்கமது வீரந்தானே. (284)

வீரமென்றால் மகாஞான சுத்தவீரன்
வேதைக்கோ ரணவீரன் சுண்ணவீரன்
காரமென்றால் கடுங்கார முண்ணச்சாகான்
கைமுறையா யிதைவிட்டால் வேதைபோச்சு
சாரமென்றால் கடுஞ்சாரம் பட்டால்போகுஞ்
சரக்கினெடு சூதத்தின் போக்குவேகம்
தூரமென்றால் வெகுதூரம் தொட்டாலோடும்
துடியான வீரத்தைக் கட்டக்கேளே. (285)

கட்டுகிறே னுறுவகைச் சரக்குஞ்சூதங்
கண்ணிமைக்குள் கடல்போலே யாகப்பாரு
வட்டுகிறேன் பரிச்சுண்ணம் வீரத்தாட்டி
வாகான சீனம்விட்டால் கருக்கும்பாரு
ஓட்டுகிறே னிதைப்பூசி வீரன்மேலே
உப்பான சீனமொடு சீலைசெய்து
தட்டுகிறேன் தணல்மேலே போட்டுவூத
தளராமற் றுடங்கிக் கட்டுங்காணே. (286)

காணப்பா யிவ்வீரங் கட்டைக்கொண்டு
காட்டயிலே நவலோகஞ் சுண்ணமாகும்
பேணப்பா யிதுக்குள்ளே வேதைகோடி
பிறித்துரைக்கப் போகாது போக்கோகோடி
தோணப்பா யிதின்மேலே வழலைபூரஞ்
சூட்டியே யஞ்சுசுண்ணக் குகையிலூது
ஊணப்பா கரியிலிட்டு ஊதச்சுண்ணம்
உத்தமனே கடுஞ்சுண்ண வேகமாச்சே (287)

ஆச்சப்பா யிச்சுண்ணங் தாளகத்திற்பூசி
அப்பனே வைத்தூதச் சுண்ணமாகும்
ஊச்சப்பா காரீயம் சூதம்நேரே
ஊட்டியே சுண்ணமிட்டு யாட்டிக்கொண்டு
பாச்சப்பா வெடியுப்புக் கம்பிமேலே
பரிவாக ரவியிலிட்டு வருத்துப்போடு
வாச்சப்பா பின்புஅதைப் புடத்தைப்போடு
மக்களே வெள்ளெலும்பு போலேயாமே. (288)

வெள்ளெலும்பாம் வெடியுப்பு செந்தூரிக்க
விதஞ்சொல்வேன் விதஞ்சொல்வேன் விரைந்துகேளும்
வெள்ளெலும்பா மொருகம்பி வாங்கிக்கொண்டு
வீரமொடு பரிச்சுண்ண வீரமிட்டுப்பூசி
வெள்ளெலும்பை ரவியினுள்ளே போட்டாலிந்த
வேகமது வுடன்சென்று பாய்ந்துபாய்ந்து
வெள்ளெலும்பு சிவத்தெலும்பா யிதிலேவித்தை
விரைந்ததிலே வேதைசொல்வேன் மேவிக்கேளே. (289)

வெடியுப்பு வேதை

மேவியதோர் வெடியுப்பைக் காரீயத்திய
விளங்கியதில் பனிரெண்டு மாற்றுக்காணும்
மேவியதோ ருப்பைநவ லோகத்தீய்ந்தால்
வேதையென்ன பதினாறு மாற்றுக்காணும்
மேவியதோ ருப்பையுப ரசத்திலீய
விடுபட்ட ஆணிக்குள் விரவியாடும்
மேவியதோர் வெடியுப்பு வேதைகேளும்
மேகம்போல் வெகுசாறுக்கு விரவும்பாரே. (290)

பாரப்பா யிந்தவுப்பைச் சுண்ணத்திட்டு
பாங்கான தாளகத்திற் றூக்கியூது
நேரப்பா சலவைகொண்டு சுண்ணும்பாகும்
நேர்க்துயிர்தச் சுண்ணத்தை வங்கத்தப்பி
சாரப்பா புடம்போடு சுண்ணமாகும்
சார்ந்தஇந்தச் சுண்ணத்தைக் கெந்திக்கப்பி
ஊரப்பா வைத்தெரிக்க உப்புச்சுண்ணம்
ஊதிடவே மல்லிகைப்பூப் போலாம்பாரே. (291)

பூப்போலே ஆகுவதென் குருவின்வாக்கு
பூரணத்தில் மனதொன்றாய்ப் பொருந்தச்செய்து
பூப்போலே நின்றவுப்பில் வீரங்கூட்டிப்
புகழாக நிமிளையின்மே லப்பியூதப்
பூப்போலே நிமிளையப்பா யிந்தநீற்றை
புகழ்பெரிய சாரத்துக் கப்பியாட்டு
பூப்போலே சாரமுமாஞ் சாரச்சுண்ணம்
பொற்றகட்டில் வீரமிட்டுப் பூசிப்போடே. (292)

போட்டுவொரு புடந்தனிலே தங்கச்சுண்ணம்
பொய்க்குருவோ மெய்க்குருவோ அறிந்துபாரு
ஆட்டவொரு புடத்தாலா யிரத்தெட்டண்டம்
அணுக்கொண்டே ஆடுபே ரண்டமட்டும்
நீட்டவொரு மலைகாணேன் யெதிரிகாணேன்
நேராக முன்வந்து நிற்பார்காணேன்
பூட்டவொரு பாற்காணேன் முன்பின்காணேன்
மூதண்டம் பொற்குருதா னடும்போக்கே. (293)

குளிகை.

போக்கான பொற்குருவாற் சூதங்கட்டிப்
புகழாகச் சுண்ணாம்பாய்க் குகையிலூதி
வாக்கான சுண்ணத்தால் வீரங்கட்டி
மருவியதோர் வீரத்தைச் சுண்ணமாக்கி
தாக்கான திதுவொன்றில் தங்கம்நாலில்
தாக்கியிலைத மணிபோலே வாங்கிக்கொண்டு
சாக்கான கற்பூரச் சுண்ணம்வீரஞ்
சாரித்து யிம்மணிமேற் பூசிவையே. (294)

பூசியதோர் குளிகைதனைக் குகையில்வைத்து
புகழாகப் புடம்போடச் சுண்ணமாகும்
காசியதோர் சரஸ்வதி யமுனைகெங்கை
கைக்குள்ளே யாச்சுகுரு பதத்தைப்பூசு
வாசியதோர் சித்திகண்டா லிந்தச்சித்தி
வாகான பொற்சுண்ண வேகமாகும்
மாசியதோ ரத்தநின் றமரிருந்தவீட்டில்
மருவிநின்று அமுர்தமுண்ண வாய்க்கும்பாரே. (295)

மாய்க்குமப்பா யிச்சுண்ண வீரத்தாட்டி
வகையான தங்கத்தி லப்பிப்போடு
மாய்க்குமப்பா பரிச்சுண்ணம் வேகமெத்த
மக்களே யிதைவிட்டுச் சூதங்கட்டு
சாய்க்குமப்பா அஞ்சுசுண்ணக் குகையிலூது
சலவைபோல் சுண்ணும்பாஞ் சூதந்தானும்
தாய்க்குமப்பா காலிடையி லிதுவொன்றிட்டு
சாதகமா யுருக்கியொரு மணியாய்வாங்கே. (296)

வாங்கினதோர் மணிமேலே பூசுதற்கும்
வகையான கற்பூரக் துருசுசுண்ணம்
தாங்கினதோர் சவ்வீரம் புழுகுசாரஞ்
சமரசமாய்க் கூட்டியந்த மணிமேலப்பி
ஓங்கினதோர் அஞ்சுசுண்ணக் குகைக்குள்வைத்து
உரைக்கவொரு புடம்போடச் சுண்ணமாகும்
பாங்கினதோ ரிச்சுண்ண மாடுமாட்டை
பகுர்ந்துரைக்க நாவில்லை பண்பாய்க்காணே. (297)

பண்பான சுண்ணத்தில் வீரமூட்டிப்
பரிவான லிங்கமிட்டுக் காரமிட்டு
நண்பான லோகமுப ரசங்கள்தன்னில்
நாட்டிடவே யிருபத்தி ரெண்டுமாற்று
தண்பான சுண்ணஞ்சவ் வாதுகூட்டி
தடவினுல் சரக்கெல்லா மணிபோலாகும்
உண்பான சாக்கிலொரு கோடாகோடி
உயர்சுண்ணச் செகதூர வகையிதாமே. (298)

பதினுறு வேதை.

வகையான யிக்குருவிற் புழுகைப்பூட்டி
மாட்டியல்லோ சரக்கெல்லா மூதச்சுண்ணந்
துகையான தொவ்வொன்றில் கோடிச்சுண்ணம்
துறைதோறும் விரிக்கவென்றல் வயதுகோடி
பகையான யினங்கண்டு பாய்ச்சசுண்ணம்
பரிவான யித்துருவில் மணிபோலாடும்
புகையான தூமமுதல் பதினுறுவேதை
பொன்முதலாய் வெள்ளிவரை பிரித்துஆடே. (299)

பிறித்தறிந்து யாடவென்றால் வயதோகொஞ்சம்
பேயரென்ன சென்மமெடுத் தாரேலோகர்
மறுத்தறிந்து நோய்கோடி வறுமைகோடி
வயதுசென்று கிழமான மயக்கங்கோடி
நெறித்தறிந்து யென்னவித்தை யென்னஞானம்
நேராகப் பார்க்கவென்றா லாசையொட்டா
குறித்தறிந்து நோக்கவென்றால் மனங்கூடாது
கொள்கின்று பெண்ணாசை கொல்லுந்தானே. (300)

சடம் விழுந்தால்

கொல்லுகிற ஆசையினால் பெண்ணைக்கொண்டு
கூறான மைந்தர்களைப் பெற்றாயேயும்
செல்லுகிற காலமீமக் களதில்மக்கள்
செலமுமிறைப் பார்களென்றே யெண்ணியெண்ணி
மல்லுகிற போகத்தா லிறந்துபோனால்
மக்களார் பெண்டீரார் தம்பியாரு
அல்லுகிற சடமெடுத்துத் தர்மஞ்செய்தால்
அவரவர்க்கே யல்லாம லுனக்கங்கேதே. (301)

ஏதப்பா பெண்டீரா லாவதேது
யீன்றெடுத்த பிள்ளையினா லாவதேது
கோதப்பா பந்துவினா லாவதேது
கொண்டதினால் கொடுத்ததினா லாவதென்ன
வாதப்பா சொல்லிநித்தம் பிறட்டால்தேடும்
மகத்தான திரவியத்தா லாவதென்னா
போதப்பா போதுமென்ற போதம்பார்த்தால்
புகழுனக்கு யிதுலாபம் புகழ்ந்துகாணே. (302)

புகழ்ந்துநின்ற வுலகத்தில் வந்துயானும்
புத்திரனைப் பெறுமலையோ மலடனானேன்
நிகழ்ந்துயினிக் கதியேது தற்பணங்களேது
யென்செய்வேன் கடைத்தேற பெண்ணுமாண்பர்
மகிழ்ந்துநீ புத்திரரைப் பெற்றாயானால்
மக்களாற் கடைத்தேற வண்மையுண்டோ
அகிழ்ந்துநின்ற பிள்ளைவே தாந்தியாகில்
அண்டத்திற் சேரவிவன் பிதிற்குநன்றே. (303)

விட்ட குறை.

நன்றான தாயவள்தான் மோகமுற்று
நலமான பிதாவோடு கலந்ததாலே
ஒன்றான விந்தாலே விட்டகுறைவந்து
வுருத்தறிக்கு மவ்வுருவை யவளவளுங்காணுர்
கன்றான கெற்பத்தில் சுமந்துபெற்று
கண்ணோடு மூக்கோடு போற்றியாட்டி
நின்றான பாசத்தால் வளர்த்தாள்மாதா
நேசமாய் வித்தையெல்லாம் பிதாசொன்னுரே. (304)

சொன்னதோர் பிதாவுக்கு மிவனுமென்னு
சுமந்துபெற்ற மாதாவுக் கிவனுமென்னு
பன்னதோர் பலகலையாங் காமக்கூத்து
பழகினுன் கன்மமென்ற காமவித்தை
பொன்னினதோ ரித்தனையு மாட்டியாட்ட
புகழான சிற்றின்ப மாயமாச்சு
என்னதோ ரென்னசொல்வே னய்யோஅய்யோ
எழுநரகந் தனிலுழல விருத்தல்நன்றே. (305)

நன்றான புத்திரன்பூ ரணத்திற்சேர்ந்தால்
நலமான பிதிர் நூறு வமிசமுத்தி
நன்றான மாதாவின் வமிசம்நூறு
நண்பாக முத்திபெறும் பாருபாரு
நன்றான புத்திரன்தா னுகாவிட்டால்
நரகத்துக் கேதுவா யெய்துமய்யோ
நன்றான புத்திவந்தால் சாதகந்தான்கேளும்
நாதாந்தப் பெருவெளியை காட்டிப்பாரே. (306)

பெருவெளியே பிதாவாச்சு சேய்நீயாச்சு
பேராக வுருக்கொண்டு யெடுக்குமுன்னே
அருவெளியே சித்திரத்தைக் கேளுமக்காள்
அதையடுக்கப் பூரணந்தான் நின்றுகொண்டு
கருவழியே யேழுவகை யோணியானல்
கண்கொள்ளாக் கரைகொள்ளாச் சென்றுவென்றுல்
ஒருவழியோ யொருமுகமோ வொன்றேதேகம்
ஓகோகோ பலவாறு யுதித்தல்தானே. (307)

உதித்திட்ட செந்நூவெல்லா மோடியோடி
முறங்கிறது விழிக்கிறது மெட்டுக்குள்ளே
பதித்திட்ட யெட்டகன்று பரைகாணுமல்
படுகிறதோர் பிறவியெல்லாம் பாழாய்ப்போச்சு
மதித்திட்ட சென்மமது ஞானசென்மம்
வாக்கான பூரணத்தை மருவிப்போகும்
கொதித்திட்ட நீர்போலே சிறிதுஞானங்
கொள்கியதோர் கற்பூரத் தீபமாமே. (308)

ஒடுக்க விபரம்.

ஆயப்பா லிங்கத்தி லடங்கிப்போகும்
அதுவுமொரு பட்சந்தா னதுவல்லாமல்
போமப்பா சடத்தைவிட்டுப் போக்காய்ச்செல்லும்
புகழாக யிதுவுமொரு பட்சமாகும்
போமப்பா யிதுநாளி லொடுங்குவதுமரிது
உத்தமமாம் வித்தையிது சிவத்தார்க்கெய்தும்
நாமப்பா சடத்தோடு பூரணத்தில்வாழ்ந்தோம்
நம்போலே பிள்ளைகளே வாழுவீரே. (309)

வாழுகிற தெப்படியோ வென்றால்மக்காள்
வரையாக யோகத்தே நின்றுதேறி
ஆழுகிற ஞானத்தில் விண்டுகொண்டு
அதினூடே மனதொன்றிப் போனபின்பு
நீழுகிற பிரபஞ்ச மெல்லாம்நானே
நிலையான சராசரமும் யானேயாச்சு
தாழுகிற யென்வகையில் யானேயாச்சு
சகலமுமே நானென்று நில்லுநில்லே. (310)

நில்லாட்டால் பிரபஞ்சத் தென்னசெய்யும்
நேராக வெகுநாள்தான் சடத்தைவாழ்த்து
அல்லாட்டால் சித்தென்ன குளிகையென்ன
ஆழுகிற ஆட்டென்ன பூரணத்தில்
செல்லாட்டால் வாதமென்ன கற்பமென்ன
செகத்திலுள்ள மனுடரைப்போல் நீயொன்றாச்சு
சொல்லாட்டால் குருவென்ன சீடனென்ன
தொல்லுலகில் வேடமிட்ட குருத்தானாச்சே. (311)

குருவென்ற தாருக்கு நாமமையா
குறித்தபூ ரணத்தைக்காட் டினவனுச்சு
கருவென்ற கருவறிந்து மேலவெளிகாட்டிக்
கைமுறையாய்ச் சேர்ப்பவனே யாசானுசான்
தருவென்ற புருவமப்யத் தமர்ந்துநீயும்
சாதகமாய்ச் சோதியிலே கலந்தாயானால்
திருவென்ற வுதையத்தில் வெளிச்சமேது
சேர்ந்திடும் ராக்கால மிருட்டுமேதே. (312)

இருட்டேது யிருட்டேகு மிரவிமுன்னே
யேகவெளி யென்னுளு மிருப்பதென்னே
அருட்டேது வெளிக்குள்ளே வெளியைப்பாரு
அம்மம்மா ஒளிக்குள்ளே ஒளியைப்பாரு
மருட்டேது ஒன்றுமில்லை வெளியேயாச்சு
மக்களே அந்தயிடம் மகத்தாம்போதம்
திருட்டேது யெத்தியுண்ணுங் குருவேயானால்
செப்பறியார் செகசாலஞ் செப்புவாரே. (313)

செப்புவது யென்னவென்றால் செப்பக்கேளும்
செகமெல்லா மிருதயந்தான் பிரமமென்று
ஒப்புவது அவனியெல்லாம் பூரணந்தானென்று
ஓகோகோ நான்முத்தோ னென்றுசொல்லி
ஒப்புவது மலைக்கிறது மெனக்குள்ளென்று
உபதேச மிதுவென்பார் குருட்டுமாண்பர்
தப்புவதுஞ் சிக்கிறது மிரண்டுங்கண்டால்
தானவனுப் நின்றதுவா மென்றுகேளே. (314)

கேளப்பா சொல்லறியா னுலகத்தாசான்
கெடியாயிப் படிசொல்லிப் பணம்பறிப்பான்
நாளப்பா போக்கிசீ வனத்தைப்பண்ணி
நலமான சீடனுக்குப் பிழைப்புண்டாக்கி
சூளப்பா வுலகமிப் படியேபோச்சு
சொக்கியந்த மாயத்தே சுழன்றேபோனார்
தாளப்பா திறந்துவிட்டா லவனேயாசான்
சாதகமாய்க் குருதேடிச் சார்ந்துகேளே. (315)

உலகஞானி.

கேளப்பா வுலகமெல்லாம் வசனஞானம்
கெடியாகச் சங்கமென்ற பெயருமிட்டு
வாளப்பா சிவராச யோகஞ்செய்வார்
வஞ்சகமாய்க் கொலைகளவு பொய்யுஞ்சொல்வார்
தாளப்பா பிடித்துநிற்பார் குருவேயென்பார்
சச்சிதா னந்தவெள்ளக் கடலேயென்பார்
கோளப்பா சொல்லியொரு குடிகெடுப்பார்
குறிப்பான வுலகத்து ஞானிதானே. (316)

தானென்ற பொருளாறு பூரணந்தானுறு
சஞ்சார விலட்சணனாய்த் திரிவேனென்பார்
மானென்ற விழியுடைய பெண்ணைக்கண்டால்
மகிழ்வாகப் பின்சென்று மயக்கமாவார்
தீனென்ற தீனியிலே ருசியைப்பார்ப்பார்
செகசாலம் பேசியே புரட்டுச்செய்வார்
ஊனென்ற வுடம்புநீர்க் குமுழியென்பார்
உத்தநோய் வந்தாக்கா லுணருவாரே. (317)

வானென்ற ஞானமென்ன வெரும்பேச்சென்பார்
வாதமென்ன குளிகையென்ன வாய்ப்பேச்சென்பார்
கானென்ற காயசித்தி உண்டோவென்பார்
ககனமென்ன யோகமென்ன பொய்யேயென்பார்
ஊனென்ற வுடம்புக்குத் திடமதாக
உண்டுசுக மனுபவித்த லதுவோஞானம்
தானென்ற ஆணவத்தை யற்றேனென்பார்
தந்திரமாய் யிவைபேசித் திரிவார்பாரே. (318)

பாரப்பா யிப்படித்தா னுலகஞானம்
பார்த்தவர்கள் வெகுகோடி மாண்டுபோனார்
ஆரப்பா அறிந்தவர்கள் ஞானமார்க்கம்
ஆதிசித்த ரிஷிகளிலே யனேகங்கோடி
நேரப்பா னொந்தவர்கள் கரையோயில்லை
நினைவாக யிந்தமுறை யுனக்குச்சொன்னேன்
ஊரப்பா நரகத்தில் வீழ்கவேண்டாம்
உத்தமனே யதுக்கொக்கும் வீரத்தாட்டே. (319)

ஆட்டான கெந்தகத்தைக் கட்டக்கேளு
ஆதிசத்தி முதலனந்த மதுமாவேகம்
நீட்டான யிதனாலே யெரிச்சலொடுபுகைச்சல்
நிமிஷத்தில் மாண்டுபோய்ச் சாம்பலாகும்
பூட்டான திதைக்கட்டச் செகந்தான்பொன்னும்
புகழான கெந்தகத்தில் போக்கோகோடி
கோட்டானை யுரித்தசிவ னிதுக்குள்சிக்கி
கூடுகிற துறைக்கெல்லாம் வேதையாமே. (320)

கேந்தகக் கட்டு.

துறைக்கெல்லாம் வெகுசாறுக்கு கெந்திவேகம்
துடியாமற் சூதத்தை யழுத்திக்கொல்லும்
மறைக்கெல்லா மெட்டாப்பூ ரணத்தைக்காட்டும்
மவுனமுற்று உண்டாக்காற் காயசித்தி
குறைக்கலாம் நீட்டலா மிதிலேவேதை
கோடான கோடிகவ ரென்னசொல்வேன்
அறைக்கலா மிதினாலே யறந்தான்செய்தால்
ஆத்தாளுக் கீசனன்று யருளும்வாறே. (321)

அருளான கெந்தகத்தைக் கட்டக்கேளும்
அப்பனே வழலையுடன் வீரச்சுண்ணம்
அருளான மேற்பூரந் துருசுச்சுண்ணம்
அதுநாலு மொத்தரைக்கச் சிவப்பேயாகும்
அருளான கெந்தகத்திற் பூசிப்போட
அப்பனே மஞ்சளத்துத் தந்தம்போலாம்
அருளான யிதின்மேலே காரசாரம்
ஆதியுப்புச் சுண்ணமுடன் மூன்றுமப்பே. (322)

அப்பியிந்தக் கெந்தகத்தைக் கிளிஞ்சிநீற்றில்
அழுத்திமெள்ளத் தீயெரிக்கக் கல்லாய்ப்போகும்
ஒப்பியிந்தக் கெந்தகத்தைக் குகையில்வைத்து
ஊதிடவே சுண்ணாம்பா முறிந்தவேகம்
செப்பியிந்தச் சுண்ணத்தில் வீரமிட்டாட்டி
செயலான கல்லுப்பி லப்பியூது
தப்பியிந்தக் கல்லுப்புச் சுண்ணமாகும்
சாதகமாய் வீரமிட்டுத் தாளகத்திலப்பே. (323)

தாளகத்தை யூதிடவே சலவைச்சுண்ணங்
தனிச்சுண்ணம் வங்கத்தில் வீரமிட்டப்பு
கோளகத்தே வங்கமது கடுஞ்சுண்ணமாகும்
கொடியதொரு வங்கத்தில் வீரமிட்டாட்டி
நாளகத்தே நிமிளைக்கி யப்பியூது
நலம்பெறவே கடுஞ்சுண்ண நிமிளையாகும்
ஆளகத்தே யிச்சுண்ணஞ் சாரத்தப்ப
ஆகாகா ஜலம்பொசியு மணலில்மூடே. (324)

மூட்டிப்பின் ஜலம்பொசிந்து வெண்டுபோலாம்
மூதண்டச் சாரத்தை யரைத்தூது
ஆட்டியபின் கடுஞ்சுண்ண மாகுஞ்சாரம்
அப்பனே வீரமிட்டுத் துருசுக்கப்பு
ஊட்டியபின் சுக்கானு மூடிப்போடு
ஓகோகோ கடுஞ்சுண்ணந் துரிசியாச்சு
நீட்டியபின் துருசியுடன் வீரமிட்டு
கோராகத் தங்கத்திற் பரிசம்பண்ணே. (325)

பரிசித்துப் புடம்போட்டு ஊதிப்போட
பாங்கான பரிச்சுண்ணம் வேகம்மெத்த
பரிசித்தால் சூதத்தி லுருண்டுகட்டும்
பாங்கான மணிமேலே பூரச்சுண்ணம்
பரிசித்து வீரமிட்டு ஆட்டிப்பூசி
பரிச்சுண்ணங் குகையில்வைத்துப் பாங்காயூது
பரிசித்த சூதமது சுண்ணும்பாகும்
பதினாறு மிதுவொன்று பாய்ச்சியாட்டே. (326)

பாச்சியதோர் குளிகையின்மேல் துருசுவீரம்
பக்குவமாய்ப் பூசியதைக் குகையில்வைத்து
ஆச்சியதோர் தணலிலிட்டு ஊதச்சுண்ணம்
அப்பனே வெதுவேக மண்டம்பொன்னும்
காச்சியதோர் நவலோக முபரசமும்பொன்னும்
கல்மலையுங் கானகத்து மரமும்பொன்னும்
தாச்சியதோ றொன்றுமில்லை யெட்டெட்டுமாடுந்
தங்கத்திற் சூதம்நின்ற தாக்குத்தானே. (327)

தாக்கான குருவில்சவ் வாதுகூட்டி
தனித்ததொரு கெந்தகத்திற் பூசிவாட்டி
ஏக்கான குகையிலிட்டு வுருக்கஆடும்
இவ்விடைக்கு நாலிலொன்று தங்கம்போட்டு
வாக்கான இவ்விடைக்குச் சூதம்போட்டு
மருவியதோர் நாகமிதிற் பாதிபோடு
தூக்கான யிடைக்கெல்லா மெட்டிலொன்று
சுகமாக வீரமிடக் களங்கமாமே. (328)

களங்குச் சேந்தூரம்

களங்கத்தை வேதையிடு ஆயிரத்துக்கொன்று
கனகமென்ற பதினாறு மாற்றுமாகும்
களங்கத்தை யுபாசத்திற் தாக்கினுக்கால்
கைமுறையாய்த் திசைமாற்றுக் காணுங்காணும்
களங்கத்துக் கிடைக்கிடைதான் தங்கங்கூட்டி
கல்த்துருக்கி யவ்விடைக்குச் சூதங்கூட்டி
களங்கத்தை யரைத்துமொரு புடத்தைப்போட
கனகமயச் செந்தூர மாகும்பாரே. (329)

செந்தூரம் செடுந்தூரம் போகுமப்பா
சேர்ந்தபதி னாயிரத்துக் கொன்றுவேதை
செந்தூர மிப்படியே தொந்தித்தேற
செப்பரிது கோடிமட்டும் வேதையாகும்
செந்தூர மிப்படிக்கட் டினங்கள்சீராய்ச்
செய்துகொண்டால் கணக்கேது லக்கமேது
செந்தூரச் சரக்குமுதல் யுபாசங்கள்
சேர்த்தேறச் சேர்த்தேற வேகமாமே. (330)

வேகமென்ற சுண்ணம்பில் புழுகோவீரம்
வேதித்துச் சரக்கோடு அப்பிபூது
பாகமென்ற சரக்கெல்லாம் சுண்ணம்பாகும்
பாச்சியிதை யினக்கோரு மேத்தயேத்த
ஆகமென்ற பூரணம்போல் கோடிதொந்தம்
அம்மம்மா கரையில்லை தொந்தம்சொல்ல
தாகமென்று யெடுத்தவன்காண் சலத்தைத்தேடி
தவித்துநின்ற வாறெருக்கு மூலகத்தோரே. (331)

உலகத்தோர் பண்ணுகின்ற வாதமல்ல
உத்துநின்று சிவயோகி பண்ணும்வாதம்
உலகத்தோர் செய்வதெல்லாம் பத்தேமாத்து
உத்தமியைப் பூசைசெய்தால் வாக்குங்காணும்
உலகத்தோர் வாதத்தால் வாமத்திற்புக்கி
உற்றுணர்ந்து பாராமல் வாதம்பொய்யென்று
உலகத்தோர் வாமத்தைத் தூசிப்பார்கள்
உத்தமனே ரவிகோடி நாதமெண்ணே. (332)

எண்ணப்பா யுப்பான சுண்ணத்துள்ளே
இயல்பான வீரமிட்டு கல்நார்க்கப்பி
பண்ணப்பா புடம்போடக் கல்நார்ச்சுண்ணம்
பாங்கான யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
கண்ணப்பா கற்பூரச் சிலையிற்பூசி
கனக்கவொரு புடம்போடு அதுவுஞ்சுண்ணம்
மண்ணப்பா யிச்சுண்ணங் கெருடபச்சைக்கப்பி
மாட்டியொரு புடம்போடச் சுண்ணமாமே. (333)

சுண்ணமென்ற பச்சையிலே வீரமிட்டாட்டி
சுகமாக வழலையின்மே லப்பிப்போட
சுண்ணமென்ற யெண்ணையெல்லாஞ் சுண்ணும்புண்ணுஞ்
சோபிதமா யதுவாங்கிக் கடுங்காரமேத்து
தண்ணமென்ற சாரமதிற் சமனுய்க்கூட்டி
தாக்கவொரு சலமாகுஞ் சலத்தினுள்ளே
கண்ணமென்ற கற்பூரப் பலகைபோட்டு
காயவைத்து வாரியிட்டு வூதிப்போடே. (334)

ஊதினால் கடுஞ்சுண்ண மாகும்பூரம்
உத்தமனே யிதையெடுத்து வீரங்கூட்டி
ஆதினால் நவலோகத் தப்பியூத
அம்மம்மா நவலோகச் சுண்ணமாச்சு
ஏதினு லெதிலாச்சு பூரம்சீற்றல்
என்னசொல்வேன் நவலோகச் சுண்ணமாச்சு
ஊதினால் விழுமோடா கொம்பில்மாங்காய்
உத்தமனே சுண்ணத்தை யூதிப்பாரே. (335)

பாரப்பா நவலோகச் சுண்ணமெல்லாம்
பட்டவிடந் தொட்டவிட மெல்லாங்கட்டும்
கோரப்பா வீரமிட்டால் வேதையாகும்
கோடி நூறுதொந்தம் நேர்ந்துயேறும்
போரப்பா பொன்னாகுங் குளிகையாகும்
புகழான காயசித்திப் போக்குமாகும்
ஆரப்பா யிதின்போக்கை யறிந்துசொல்வார்
அரகரா சிவசிவா அரிதுதானே. (336)

அரிதரிது நவலோகச் சுண்ணத்தோடு
அப்பனே வீரமிட்டுப் பூசியூது
அரிதரிது வுபரசங்க ளெல்லாஞ்சுண்ணம்
அம்மம்மா அதைத்தொட்டு சுண்ணங்கோடி
அரிதரிது சரக்கெல்லாஞ் சுண்ணம்பாகும்
அதுக்கதுக்குத் தொந்தித்தால் கோடியாகும்
அரிதரிது சுண்ணும்பு வித்தைதமைந்தா
அறிந்தவனே முழுவாதி அறிந்துபாரே. (337)

அறிந்துபார் கெருடபச்சை சுண்ணந்தன்னில்
அதில்வீரம் மத்தித்துத் தாளகத்திலப்பி
அறிந்துபார் சுண்ணத்தில் வைத்தெரிக்க
அரிதான தாளகமோ சுண்ணமாகும்
பிறிந்துபா ரிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
பேரான வீரத்தி லப்பியூது
செறிந்துபார் வீரமது சுண்ணம்பாகும்
சேரான வீரத்தில் வீரங்கூட்டே. (338)

கூட்டியதோர் வீரத்தைத் தங்கத்தப்பி
கூசாமல் புடம்போடு தங்கச்சுண்ணம்
ஆட்டியதோர் பரிச்சுண்ணஞ் சூதத்தாட்ட
ஆகாகா மணியாகு மதுக்குமேலே
நீட்டியதோர் வீரமிடு பூரச்சுண்ணம்
நிறப்பாகப் பூசியதைக் குகையிலூது
மூட்டியதோர் கடுஞ்சுண்ணஞ் சூதமாகும்
முகிழ்விரிந்து பூப்போலே விரியும்பாரே. (339)

விரியுகிற சூதத்தில் வீரமிட்டாட்டி
        விளங்கியதோர் துருசுக்கு அப்பிரூது
அரியுகிற சுண்ணப்பாங் துருசுமைந்தா
        அப்பனே வீரமிட்டுக் கெந்திக்கப்பி
சொரியுகிற பரிமேகம் கெந்திச்சுண்ணம்
        தொகையென்ற பெண்வேதை சொல்லப்போகா
தெரியுகிற யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
        திறமான நிமிளைக்கி அப்பிப்போடே. (340)

அப்பிநின்ற நிமிளையைத்தான் ஊதச்சுண்ணம்
        அப்பனே யிதையெடுத்து வங்கத்திற்போடு
ஒப்பிநின்ற வங்கமது சுண்ணமாகும்
        உத்தமனே வங்கத்தைச் சாரத்திலப்பு
செப்பிநின்ற சாரமது சுண்ணமாகுஞ்
        சேர்ந்திந்தச் சாரத்தைத் துருசுக்கப்பு
தப்பிநின்ற துருசியது சுண்ணமாகுஞ்
        சாதகமாய்த் துருசியது சிங்கிக்காமே. (341)

ஆமப்பா துருசியிலே சவ்வாதுகூட்ட
        அப்பனே சரக்கெல்லா மணிபோலாகும்
ஓமப்பா துருசியிலே புழுகுகூட்ட
        உத்தமனே யண்டமுதல் சரக்குஞ்சுண்ணம்
சேமப்பா துருசியிலே காரசாரஞ்
        சேர்ந்திடவே சகலமுமே சத்தாமூனும்
வேமப்பா யண்டரண்டந் துருசினூட்டு
        வேரில்லை பணியில்லை வெளிபோலாச்சே. (342)

வெளியான வெளிக்குள்ளே ரேகைபாரு
        விளங்கிநின்ற சுழிக்குள்ளே வன்னிபாரு
நெளியான கால்கொம்பில் நாதவிந்துபாரு
        நேராக அத்தலையில் நின்றுபாரு
ஒளியான வொளிக்குள்ளே யொளியைப்பாரு
        ஓகோகோ வொளிகடந்த வொளியைப்பாரு
தளியான தலமேது சக்கரங்களேது
        தன்னியிதை உன்னிதத்தில் சார்ந்துபாரே. (343)

உன்னிதத்தி லேறுவது யாருமைந்தா
உத்துநின்ற மனதுமனோன் மணித்தாயாகி
தன்னிதத்தில் பசுபதி பாசந்தீர்த்து
சாதகமா யிப்பதியி னுள்ளேசேர்ப்பாள்
பன்னிதத்தில் தினந்தோறும் சுத்திவஸ்தும்
பாத்துக்கே யென்றுசொல்லிக் கொண்டுநோக்க
அன்னிதத்தி யாகநில்லா ளென்னைப்பெற்றாள்
யாவர்க்குந் தாயாகி நிற்பாள்பாரே. (344)

தாயான பூரணியே யகண்டரூபி
சச்சிதா னந்தவெள்ளச் சார்பினாலே
பேயான பிள்ளையைநீ பெற்றிட்டாக்கால்
பேய்ப்பிள்ளை யென்றுதள்ளப் பேச்சுண்டோசொல்
ஓயான வெளிமுதலாய் வாயுவன்னி
உற்றஜலம் பூமியென வுருவெடுத்துநீதான்
மாயான மாயமென்றுங் கருவியென்றும்
வாசனையாம் ஆசையென்றும் வைத்தாய்நீயே. (345)

நீயென்றும் நானென்று மிரண்டாய்க்கண்டால்
நிட்சயமாய்ப் பிறவியுனக் காச்சுதென்பாய்
தாயென்றும் பிள்ளையென்றுஞ் சொன்னேனானால்
சங்கத்தி யாகியல்லோ சமுசாரியானேன்
காயென்றும் வித்தென்றுஞ் சொல்வேனானால்
காட்டியதோர் மரம்போலே பிறவியாச்சு
ஓயென்றும் வேதாந்தத்; தந்தம்நின்றால்
ஓகோகோ ஒருநாளும் பிறவிதானே. (?46)

பிறவாத நெறிவேணு மென்பார்கோடி
பேரான காயத்தை வென்றார்கோடி
மறவாத குளிகையிட் டாடவென்பார்கோடி
மதியமுர்தம் வேணுமென்பார் கோடாகோடி
திறவாத சையோகம் வேணுமென்பார்கோடி
திருட்டுவித்தை திலதவித்தை வேணுமென்பார்கோடி
உறவாத வாதவித்தை வேணுமென்பார்கோடி
உத்தமியே யவரவர்க்குக் கொடுத்தாய்நீயே. (347)

கொடுத்தல்லோ யவரவர்க்கு முன்னாய்நின்று
குவிந்தபின்பு நல்வினைதீ வினையுமானாய்
அடுத்தல்லோ போற்றயெத் தனையோசென்மம்
ஆகியெடுத் தாலுனையே பணியக்கிட்டும்
தடுத்தல்லோ யாட்கொண்டாய் விட்டகுறையாலே
தாயேநான் பிறக்கரிது வென்பாரில்லை
மடுத்தல்லோ மோகத்திற் காமனாய்ச்சென்று
வஸ்துவென்ற சத்தியிலே மயங்கினாரே. (348)

மயங்கினார் தீனியினால் சையோகத்தால்
மந்தகா சத்துடனே வரவுதப்பி
தியங்கினார் கிருமிமிஞ்சி வாந்தியாகி
சிற்றின்ப மோகத்தால் சேர்ந்துகெட்டார்
துயங்கினார் கரணமா லிங்கணத்தில்
சுத்தினார் பத்தினார் பதத்தைப்பார்த்து
முயங்கினா ரிதுவெல்லா முத்தியென்றார்
மூடரையா வுலகத்து வாமிதானே. (349)

வாமியென்ற நாமமது யாருக்காச்சு
மகத்தான பஞ்சகர்த்தா வுக்குமாச்சு
வாமியென்ற நாமமது ரிஷிகட்காச்சு
மருவிநின்ற சிவயோகி தனக்குமாச்சு
வாமியென்ற நாமமது சித்தர்க்காச்சு
மகத்தான மெஞ்ஞானம் பெரியோர்க்காச்சு
வாமியென்ற நாமமது வாதிக்காச்சு
மற்றவர்க்குப் பசுவென்ற நாமந்தானே. (350)

தானென்று வுனைப்போற்ற வல்லானானால்
சாபமெல்லாம் வஸ்துவுக்குத் தீர்க்கவேணும்
ஊனென்ற தேகத்துக் குபாசிக்கவேணும்
உத்தமனே கலைகளெல்லா மூட்டவேணும்
பானென்று பாணிச்சால் பரத்துக்கென்று
பரவினையாய்க் கொண்டிருந்து பரத்தைநோக்கி
கானென்ற மாய்கைவிட்டுப் பரத்திற்சேர்ந்து
கழருவார் சிவயோகி ரிஷிகள்தானே. (351)

சிவயோகி ரிஷிகளுமெடுத்த திந்தப்பூசை
சேர்ந்துநின்ற மறையோர்க ளெடுத்ததிந்தப்பூசை
தவயோக சைவருக்கு மெடுத்ததிந்தப்பூசை
தவசுடைய பெரியோர்க்கு மெடுத்ததிந்தப்பூசை
மவயோக மவுனிக்கு மெடுத்ததிந்தப்பூசை
மருவிநின்ற சனகாதி தெடுத்ததிந்தப்பூசை
புவயோகி ரசவாதிக் கெடுத்ததிந்தப்பூசை
புகழ்பெரிய பூசைக்கிக் கெந்தகந்தான்நேரே. (352)

ரசத்தின் பெருமை.

நேரான ரசத்தினுட பெருமைகேளும்
நிலையான யீசனுட விந்துவிந்து
மானான கெவுனமுதல் காயசித்தியாகும்
மகத்தான வாதமுமாம் வசியமுதலெட்டும்
சீரான சிவனன்று தியானத்தேகிற்கில்
ஜெந்துசத்தி செனித்ததினு விந்தவிந்து
பாரான குளிரோம்பி மலைகள்தோறும்
பறந்துதப்பா பறந்துதப்பா சூதந்தானே. (353)

சூதமது யேதென்றே யெண்ணவேண்டாஞ்
சுத்தசை தன்யமது சிவத்தின்கூறு
வாதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
மகத்தான பூரணத்தின் மார்க்கம்மார்க்கம்
வேதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
விளங்கியதோர் பூரணத்தில் விரிந்தநூல்தான்
போதமது யேதென்றே யெண்ணவேண்டாம்
புகழான மனந்தானே போதமாச்சே. (354)

ஆச்சப்பா சூதமங்கே யில்லாவிட்டால்
அப்பனே கெவுனமென்ற குளிகைபோச்சு
பேச்சப்பா வாதமென்ற சொல்லும்போச்சு
போனான காயசித்தி பேரும்போச்சு
மூச்சப்பா அற்றயிடம் நோக்கிறதும்போச்சு
மூதண்டச் சித்தரென்ற நாமம்போச்சு
ஓச்சப்பா மந்திரமாஞ் சித்திபோச்சு
ஓகோகோ சித்தெல்லா மோடிப்போச்சே. (355)

ஆச்சப்பா வெவ்வேறு கவரோகோடி
அதுக்கதுக்கு யினங்கோடி ஆட்டங்கோடி
ஓச்சப்பா குருகோடி சுண்ணங்கோடி
உற்றசெய நீரோடு திராவகமோகோடி
போச்சப்பா கரையுமில்லை கணக்குமில்லை
போக்காகப் பெரியோர்கள் சொன்ன நூல்தான்
நீச்சப்பா கடுநீச்சுக் காணப்போகா
நேரான நூலினுள்ளே நிலைகாணுதே. (356)

நிலைகாணப் போகாத நூலைப்பார்த்து
நேராகச் சுட்டதினுல் கருக்காணுது
தலையான கால்காணுங் கால்தலையாய்க்காணும்
சாஸ்திரத்தை யெப்படித்தான் பெரியோர்சொன்னுர்
மலைகாண லெக்கிட்ட அம்புபோல
வைத்திலரே வைத்திலரே வல்லோரய்யோ
கலைகாணப் போகாது அர்த்தமாகா
கண்கட்டிக் காட்டிலே விட்டவாறே. (357)

விட்டிடமுந் தொட்டிடமுந் தெரியாதப்பா
வேதையொன்றுந் துறையொன்றுங் காணுதப்பா
கட்டிடமுங் கலந்திடமுங் காணுதப்பா
கரையிதுக்கு யெவ்வளவு யென்றுங்காணுர்
நட்டிடமு மெடுத்திடமுங் காணுதப்பா
நலமான முற்றியொன்றுந் தெரியாதப்பா
தொட்டிடமுந் தொடாதிடமுந் தெரியாதப்பா
சூட்சமுற்ற பெரியோர்கள் சொன்ன நூலே. (358)

சொன்னுர்கள் வல்லோர்கள் நூலோகோடி
சூஸ்திரத்தை மறைத்துச்சாஸ் திரங்கள்செய்தார்
சொன்னுர்கள் குருப்போக்குக் கருப்போக்குமறைத்து
சுத்தரச வாதியென்று லெடுத்துக்கொள்வார்
சொன்னுர்கள் பொருட்கருவை வெட்டவெளியாக
சோதிகெட்ட வந்தகன்போல் அலாவிப்பார்க்க
சொன்னுர்கள் சொன்னுர்கள் பெரியோரய்யா
சொல்லியென்ன சொல்லியென்ன சித்தர்க்காமே. (359)

ஆமப்பா யெனையின்ற காலாப்பாட்டர்
அகண்டபரி பூரணமா மூலகாயன்
ஓமப்பா யப்படியே மறைத்துச்சொன்னார்
ஓகோகோ அறுகாண்டம் பாடிச்சொன்னேன்
காமப்பா யிப்படியே சொன்னோமானால்
காட்டிலுள்ள பெரியோர்க்குத் தெரியாதென்று
தாமப்பா அறுகாண்டங் கிழித்துப்போட்டு
சாதகமாய் முக்காண்டஞ் சொன்னேன்பாரே. (360)

பாரப்பா ஆயிரத்தில் முக்காண்டஞ்சொன்னேன்
பகிர்ந்ததனை அஞ்ஞூறாய்ச் சுருக்கிச்சொன்னேன்
நேரப்பா களங்கமுதல் சுண்ணமார்க்கம்
நிலையான செயநீரும் சத்துமார்க்கம்
சேரப்பா குருக்கிடையுங் கிராவணத்தினோடு
செயராசமும் பாழாகத் திறங்களெல்லாம்
ஆரப்பா யெனைப்போலே திறந்துசொன்னார்
அருநெல்லிக் கனிபோலே கைக்குள்ளாச்சே. (361)

கைக்குள்ளாய்ச் சொன்னதெல்லாம் பெரியோர்பார்த்து
கடையிலே போட்டாரே மூவருடபேரன்
மெய்க்குள்ளாய்க் கருமறைத்துச் சொல்லாதேயோர்
வேதாந்த மிப்படியே வெளியாய்ச்சொன்னார்
பைக்குள்ளே கையிட்டு பணமெடுத்தாப்போல்
பாயுமப்பா யுலகமெல்லா மென்றுயெண்ணி
மைக்குள்ளாங் குகையினுள்ளே யென்னூல்வைத்து
வாதுவந்த விடங்களிலே வாசிப்பாரே. (362)

வாசித்து மூலகுரு பேரனாலே
மகத்தான கீர்த்திகொண்டா ரென்பார்நல்லோர்
வாசித்து வாசித்து யிப்படித்தானுண்டோ
வாதநூல் யென்பார்கள் வல்லோரையா
வாசித்து வாசித்து அடக்கமில்லையென்பார்
வாய்மூடிப் பிடரிநின்று பேசுமென்பார்
வாசித்துப் பெரியோர்கள் நாயேன்பாட்டை
மகத்தாகக் கொண்டாடி வைத்திட்டாரே. (363)

வைத்திட்ட பெரியோரும் ரிஷிகளெல்லாம்
மைந்தன்மேற் சந்தோஷ மாகச்சொன்னார்
வைத்திட்ட இதுபோல்நா லுண்டோவென்று
வாகாக நாலுதிக்குந் தேடிப்பார்த்தேன்
கைத்திட்ட சட்டமுனி யென்னாற்கொக்க
கண்டேனே கிரவுஞ்ச மலையினுள்ளே
வைத்திட்ட நூல்களுக்கும் நிகண்டுகாட்டி
மகத்தான பெரியோரை வணங்கினேனே. (364)

வணங்குவதேன் மூல நட பேராஅய்யா
மகத்தான கொங்கணரே ஞானமூர்த்தி
வணங்குவதே னருளோடு பொருளாம்ரெண்டும்
வகைவகையாய் நவம்போல திறமாய்ச்சொன்னார்
வணங்குவதேன் மூலவர்க்கங் கைலாசவர்க்கம்
மகத்தான சித்தவர்க்கம் நீங்களய்யா
வணங்குவதேன் நீர்சொன்ன மூன்றுகாண்டம்
வரிசையிட்ட பொற்கம்பி போலவாச்சே. (365)

ஆச்சப்பா மெத்தநன்று யும்முடைய நூல்தான்
அய்யாயுன் நூலுக்கு நிகண்டுவேண்டாம்
ஆச்சப்பா யிப்படித்தான் பாடச்சொல்லி
ஆத்தாள்தான் சொன்னாளோ ஆசான்சொல்லோ
ஆச்சப்பா உன்னூலைச் சித்தர்கண்டால்
யாருக்குங் காட்டார்க ளொளிப்பாரய்யோ
ஆச்சப்பா யிப்படியே யின்னூலைச்சித்தர்
அமுக்கினார் குகைக்குள்ளே யமுக்கினாரே. (366)

அமுக்கியல்லோ பலநூலை வெளியிற்போட்டார்
அதினாலே கெட்டார்க ளுலகத்தோர்கள்
அமுக்கியல்லோ சித்தரெல்லாஞ் சந்தேகமாக
ஆதிசிவன் சொன்னநூல் வெளியிலிட்டார்
அமுக்கியல்லோ போட்டார்க ளென்றுயான்தான்
அதுவெல்லாந் துகைப்படுத்தி நிகண்டுசெய்தேன்
அமுக்கியல்லோ யென்நிகண்டை யொளித்துப்போட்டார்
அப்பனே யாச்சரியங் கண்டுகொள்ளே. (367)

கண்டுகொண்ட கயிலாச முனியேயய்யா
கபடுமெத்தக் கபடுமெத்த சித்தருக்கு
பண்டுகொண்ட சித்தரிஷி களுக்குமாகும்
பரவிணு லுலகத்தி லாகாதென்று
ஒண்டுகொண்டே யொளித்தார்க ளதுவும்நன்று
உத்தமனே யில்லாட்டா லுலகம்பேயாம்
தண்டுகொண்ட ஞானிசிவ யோகிக்காகும்
சங்கையிலாக் காமுகற்கு மாகாதென்றேன். (368)

ஆகாது யென்றொளித்தா ரதுவும்நன்று
அல்லாட்டா லுலகமெல்லாம் பொன்னாய்ப்போகும்
சாகாது ஜனங்களெல்லாம் காயசித்தி
சாதகமாய்ச் சித்தரென்ற நாமம்போச்சு
பாகாது மெஞ்ஞானப் பரவிப்போகும்
பாவென்ன கிகண்டென்ன கண்டேனென்பார்
வேகாத தலையோடுஞ் சாகாக்காலும்
வெட்டவெளி யாமென்றே மறைத்திட்டாரே. (369)

மறைத்திட்டால் மெத்தநன்று யென்றுசொல்லி
வாகாகப் பணிக்துயெந்தன் குகையில்வைத்து
நிறைத்திட்ட சிங்கியினுற் சூதங்கட்டி
நேராகச் சுருக்கியதைக் குகையில்வைத்து
முறைத்திட்டங் தப்பாமற் சுண்ணும்பாக்கி
மூட்டியிந்தச் சூதத்தாற் வீரங்கட்டி
கரைத்திட்ட வீரத்தாற் கல்லுப்புக்கட்டி
கல்லுப்பைக் கடுஞ்சுண்ண மாகவூதே. (370)

பூரச்சுண்ணம்.

ஊதியதோ ருப்புடனே வீரஞ்சேர்த்து
உத்தமனே வெண்கருவா லாட்டிக்கூட்டி
கோதியதோர் சுண்ணத்தில் வைத்துமாட்டு
குறையாமற் கடுஞ்சுண்ணம் பூரமாகும்
ஆதியதோர் தொந்தமிட்டால் நூறுதொந்தம்
அப்பனே பூரந்தா னறிந்துபாரு
ஓதியதோர் பூரத்தில் வீரமிட்டாட்டி
உத்தமனே தாளகத்தி லப்பியூதே. (371)

## தாளகச் சுண்ணம்.

அப்பியதோர் தாளகமுஞ் சலவைச்சுண்ணம்
அதையெடுத்து வீரமிட்டு வங்கத்தப்பி
ஒப்பியதோர் புடம்போட வங்கச்சுண்ணம்
உத்தமனே வங்கத்தை நிமிளைக்கப்பி
செப்பியதோர் கனலிலிட்டு யூதச்சுண்ணஞ்
சேர்ந்துநின்ற நிமிளையைத்தான் சாரத்தப்பி
கப்பியதோர் கனலிலிட்டு எரித்துவாங்கி
கைமுறையாய் வீரமிட்டு வில்லைகட்டே. (372)

கட்டியதோர் சாரத்தை யூதச்சுண்ணங்
கடுஞ்சாரச் சுண்ணத்தில் வீரமிட்டாட்டி
ஒட்டியதோர் துருசியின்மே லப்பியூது
உத்தமனே கடுஞ்சுண்ணந் துரிசியாகுந்
தெட்டியதோர் துருசியிது சிங்கிக்காகுஞ்
செகமெல்லா மிதினாலே வாதமாச்சு
அட்டியதோர் துருசுக்குச் செம்புமாய்ந்தால்
அதினாலே வாதமென்ற அங்கமாச்சே. (373)

அங்கமென்ற பதினாறு துருசியாலே
ஆதிவிந்து கட்டுவதுந் துருசியாலே
சிங்கமென்ற சிங்கியது துருசியாலே
சேரவெல்லாங் கட்டுவதுந் துருசியாலே
தங்கமென்ற குருவெல்லாந் துருசியாலே
சாதகமாய்ச் சத்தெல்லாந் துருசியாலே
பொங்கமென்ற பொங்கமெல்லாந் துருசியாலே
பொன்பிறந்த பிறப்பெல்லாந் துருசுவுப்பே. (374)

துருசுவென்ற வுப்பாலே சிங்கிபண்ணி
சூதத்திற் றாக்குமைந்தா அடித்துச்சாகும்
பரிசியிந்தச் சூதத்திற் கற்பூரச்சுண்ணம்
பாங்காக வீரமிட்டு ஆட்டிப்பூசி
கருதியதைத் தணலிலிட்டுக் குகையில்வைத்து
கணக்காக ஆநிடவே சூதச்சுண்ணம்
நெருதியென்ற சுண்ணமொன்று கிளிப்போற்கட்டி
நேரான நாலிடையாந் தங்கத்தாட்டே. (375)

ஊட்டியிந்த மணியெடுத்துத் துருசுச்சுண்ணம்
உத்தமனே வீரமிட்டு ஆட்டிப்பூசி
நீட்டியிந்தக் குகையில்வைத்து ஊதவூது
நேராகப் பரிச்சூதச் சுண்ணமாகும்
பூட்டியிந்தச் சுண்ணத்தில் வீரஞ்சினம்
புகழாக அரைத்துநன்றாய்த் தங்கத்தப்பி
காட்டியதில் கல்லுப்புச் சுண்ணம்பூசி
கலமான சிலைசுத்தித் தணலிலூதே. (376)

ஊதிடவே வீரமங்கே கட்டிப்போகும்
உத்தமனே அவ்வீர மொன்றுதாக்கி
போதிடவே உப்பதினு விதுவொன்றிட்டு
புகழ்பெரிய மணியாக வெடுத்துக்கொண்டு
மாதிடவே துருசியொடு பூரச்சுண்ணம்
மருவியதில் வீரமிட்டு ஆட்டிப்பூசி
கோதிடவே புடம்போடக் குகைதான்றெம்பி
கூகைநீ ரதுபோலக் குப்பலாமே. (377)

குப்பமென்ற பரிவீரச் சுண்ணத்துள்ளே
கொள்கியதோ ரினச்சேர்வை சுண்ணச்சேர்வை
ஒப்பமென்ற செந்தூரஞ் செயநீர்சேர்வை
ஒகோகோ சத்துமுதல் வேதைமார்க்கங்
கப்பமென்ற வாதமென்ற கடலுக்கப்பா
கரையேது கணக்கேது காண்பாராரு
உப்பன்றோ யித்தனைக்கும் வாதியாக
உத்தமனே ஆடியது உண்மைதானே, (378)

காணப்பா வீரமென்ற சுண்ணத்துள்ளே
காணுமைந்தா சவ்வீரஞ் செகப்புமெத்த
பூணப்பா லிங்கமிட்டுக் காரம்போட்டு
பொட்டிடவே நவலோக மலையும்பொன்னும்
ஊணப்பா துத்தமொடு துருசுவீரம்
உறவான சூதமிட்டுத் திரியிலூட்டி
நீணப்பா விளக்கேற்றி யவித்ததூமம்
நேரான கற்குகைதான் பொன்னுய்ப்போமே. (379)

மாற்றுக்காணும் வகை.

பொன்னா லதுக்குள்ள மாத்தைக்கேளும்
புகழாக அறுபத்து நாலுமாத்து
பன்னான பெரியோர்க்குக் காணுங்காணும்
பலபலவாஞ் சனங்களுக்குப் பத்தேகாணும்
மன்னான ரிஷிகளுக்கு நூறுகாணும்
மகத்தான சித்தருக்குத் தொண்ணூறுகும்
தன்னான ஞானிக்கு ஆயிரமேமாற்றும்
சண்டாள சென்மமென்றால் காணுதொன்றே. (380)

ஒன்றாகக் கண்டதெல்லாம் ஞானமாச்சு
உத்தமனே ரென்றதென்ன யோகமாச்சு
நன்றாக நின்றதென்ன நிற்குணத்தின்நேர்மை
நடராச மூர்த்திகுருச் சொல்லவேணும்
வென்றாக வெல்வதென்ன ஐம்புலனைமைந்தா
வேதாந்த அந்தமென்ன விளங்கிப்பாரு
கன்றான கண்மேலாய்த் துடைத்தாப்போல
கலங்கெடுக்கும் பூரணந்தான் கண்டுநோக்கே. (381)

மேல்மூலம், நடுமூலம், கீழ்மூல விபரம்.

நோக்குவது யெவ்வாறென் றெண்ணவேண்டாம்
நுட்பத்தைச் சொல்லுகிறே னன்றாய்க்கேளு
நோக்குவது புருவமய்யம் மேல்மூலம்நின்று
நுகராத கீழ்மூலம் குண்டலியைப்பாரு
நோக்குவது நடுமூலங் கண்டத்தைப்பாரு
நோக்காம லிலட்டினுட கருவுங்காணும்
நோக்குவது தமர்சேர மேலேபாரு
நூல்போட்ட யேணியைப்போல் வெளியுமாமே. (382)

வெளிகடக்க வெளிகடக்க அகண்டவீடு
மேவயிலா மேவயிலா மண்ணுண்டானால்
ஒளிகடக்க வொளிகடக்க வுந்தன்போதம்
ஓகோகோ ஒட்டிப்பா ரதுவும்பேசும்
வெளிகடக்க முப்பாழுந் தாண்டுந்தாண்டும்
மேல்நோக்கச் செல்கிறவன் குளிகைஞானி
வெளிகடக்க ஒளிகடக்க யொன்றுமில்லை
வெளிமூச்சுப் பேச்சில்லை சூதநேரே. (383)

நாகசுத்தி.

நேரான நாகத்தின் சுத்திகேளும்
நிலையான சாரநீர் வாங்கிக்கொண்டு
வாரான நாகத்தை யுருக்கிச்சாய்க்க
மைந்தனே நாகத்தி னூறல்போச்சு
தாரான வில்லையைப்போ லெடுத்துக்கொண்டு
தனிமேலே சூதமென்ற சுண்ணம்வீரம்
சோரான சோரனுக்குப் பூசிக்காய்ச்சி
திடியான அஞ்சுசுண்ணக் கவசம்பண்ணே. (384)

பண்ணியதோர் கவசத்தை யுலரப்போட்டு
பாங்கான சுண்ணும்பு கீழ்மேலிட்டு
ஒண்ணியதோர் கலக்கவொரு புடத்தைப்போடு
உத்தமனே கடுஞ்சுண்ண நாகமாச்சு
சண்ணியதோர் சன்னெல்லாந் தகர்த்துப்போடும்
தாகமுட னேற்றகுருக் கேற்றமென்ன
சண்ணியதோ ரிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
தங்கத்திற் பூசியொரு புடத்தைப்போடே. (385)

தங்கச்சுண்ணம்.

போடப்பா புடமொன்று தங்கச்சுண்ணம்
புகழாக யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நீடப்பா துருசியின்மே லப்பியூது
நோகச் சுண்ணும்பாக் துருசுதானும்
மூடப்பா யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
உத்தமனே கல்லுப்பி லப்பியூது
ஆடப்பா கடுஞ்சுண்ண முப்பேயாச்சு
அரகரா யிதுக்கிரைதான் பூரமாச்சே. (386)

தாளகச் சுண்ணம்.

பூரத்தை யுப்போடே சேர்த்தவூது
புகழாக நூறுதொந்தம் பூரங்கட்டும்
காரத்தை மெத்தையிலே யேத்தியேத்தி
கடுஞ்சுண்ண மாகுதற்குப் பூரமூதி
வீரத்தைச் சேர்த்தாக்கால் ரெத்தம்போலாம்
விளங்கியிதைத் தாளகத்திற் பூசிப்போட்டு
தாரத்தைச் சுண்ணும்பில் வைத்துஆட்ட
தாக்கான சலவைவொத்த சுண்ணும்பாமே. (387)

வங்கச்சுண்ணம்.

ஆமப்பா தாளகத்தில் வீரமிட்டாட்டி
ஆச்சரியம் வங்கமென்ற கட்டியில்பூசி
ஓமப்பா புடம்போடப் பொருமிநீறும்
உத்தமனே கடுவேகம் வங்கச்சுண்ணம்
சாமப்பா யிதைக்கண்டால் சூதயானை
தாக்கினால் தயிர்போலாங் கல்லுப்போலாம்
ஏமப்பா ஏமப்பா வென்றால்பேசும்
யெடுத்ததுறை யெட்டெட்டு மாடலாமே. (388)

நிமிளைச் சுண்ணம்.

ஆடலாம் வங்கத்தில் வீரமிட்டாடி
அப்பனே நிமிளையின்மே லப்பிப்போடு
வடலாம் புடம்போட நிமிளைச்சுண்ணம்
உத்தமனே வீரமிட்டு சாரத்தப்பு
நீடலாங் கசியுமது மணலில்வைத்து
நீட்டதிலே வீரமொடு பூரச்சுண்ணம்
கூடலாம் வெண்கருவா லரைத்துக்கட்டி
குமுறியிதை யூதிடவே சுண்ணமாமே. (389)

ஆமப்பா சாரத்தில் வீரமிட்டாட்டி
அப்புஅப்பு துருசிலே சுக்கானுகும்
சாமப்பா சுண்ணமென்ற குகைவைத்தூது
தாமப்பா வுப்போடே தவளமாகும்
வேமப்பா அண்டரண்டங் தொட்டதெல்லாம்
வேதையென்ற சொல்லெல்லா மிதுக்குள்ளாச்சு
ஓமப்பா யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
உத்தமனே தங்கத்திற் பூசிப்போடே. (390)

பூசியொரு புடம்போடத் தங்கம்நீறும்
பொன்னினால் சூதத்தைக் கட்டிக்கொண்டு
மாசியொரு புடம்போடச் சூதச்சுண்ணம்
மைந்தனே யிதுவோடே வீரமிட்டாட்டி
ஆசியொரு துருசிக்கிப் பூசிப்போடு
அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து வூதச்சுண்ணம்
தாசியொரு பெண்ணிவள்தான் பிரபஞ்சமெல்லாம்
சணத்திலே யுண்டாக்கி யழிப்பாள்தானே. (391)

பிறப்பிறப்பு.

அழிக்கிறதும் படைக்கிறதும் யாராலாகும்
ஆத்தாளா மனோன்மணியா ளாகுமாகும்
தெழிக்கிறதும் அழிக்கிறதும் யாராலாகும்
சிற்சத்தி யென்றதொரு பெண்ணாலாகும்
ஒழிக்கிறதும் விடுகிறதும் யாராலாகும்
உத்தமியா ளுன்மனையா ளாகுமாகும்
சுழிக்கிறது மிடுக்கிறதும் யாராலாகும்
சுத்தசை தன்யமென்ற தாயாலாமே. (392)

தாயான வுன்மணித்தாய் வர்ணமப்பா
சரக்கிலே துருசியென்ற வுப்புவுப்பு
மாயான மாயமெல்லா மவளைப்போல
மருவியிந்தத் துருசுநின்று ஆடுமாடும்
காயான காயசித்தாங் குளிகைசித்தாங்
கண்டுடனே தெரிசனத்தில் வேதையாகும்
சேயான யீரெட்டு வேதையாகும்
செப்பரிது செப்பரிது துருசுப்போக்கே. (393)

போக்கான துருசியிலே சிங்கிபண்லரி
பொட்டிட்டால் ஒருசேரு சூதங்கட்டும்
வாக்கான சூதத்தை உருக்கிக்கொண்டு
மைந்தனே சுண்ணம்பா யாகவூது
தாக்கான யிதுவொன்று தங்கம்நாலு
சாதகமா யுருக்கியொரு மணியாய்வாங்கி
நோக்கான வீரமொடு கற்பூரச்சுண்ணங்
நுகரரைத்து மணிமேலே பூசிவையே. (394)

வையப்பா அஞ்சுசுண்ணக் குகையினுள்ளே
வைத்துமொரு புடம்போடச் சுண்ணமாகும்
கையப்பா கண்டதொழில் கடினவேகம்
கற்பகமாய் விருட்சமது காமதேனு
மெய்யப்பா யிதினோடே வீரங்காரம்
மேதியப்பா லிங்கமிட சிகப்புமெத்த
பொய்யப்பா யெண்ணாதே யிதிலேவேதை
பொட்டொன்று மலையொன்று பொன்னுமாமே. (395)

பொட்டொன்று லுபரசங்கள் சத்தாய்ப்போகும்
போக்கான நவலோகம் நீறிப்போகும்
பொட்டென்று லண்டமெல்லாஞ் செந்தூரமாகும்
போக்கதிலே வெகுகோடி புகலமாட்டேன்
பொட்டொன்றால் மாமுதலாய் மண்ணும்பொன்னும்
போக்கேது நீக்கேது பூட்டப்பூட்ட
பொட்டென்றால் பருவதங்கள் சாம்பலாகும்
பூட்டுகிற கற்கண்டு பூட்டியாட்டே. (396)

ஆடயிலா மாடயிலா மனக்தம்போக்கு
ஆதியில்லை அந்தமில்லை யறியப்போகா
நீடயிலா நீடயிலா மொருகவரைத்தொட்டு
நிலைகாணப் போறுனோ வாதிமகனப்பா
ஊடயிலா மூடயிலா மொன்றைவிட்டுயெட்டு
ஓகோகோ பத்துமென்ன வாய்தான்கொள்ளா
ஓடயிலா மோடயிலாங் கவனவீதி
உற்றசிவ சித்தமய மூணிப்பாரே. (397)

பாரப்பா யிக்குருவில் வீரம்பூரம்
பரிவாகப் புழுகிட்டே யாட்டிக்கொண்டு
நேரப்பா சுக்குகளி லெல்லாஞ்சுண்ணம்
நிலையேது தலையேது கவரோணுர்
ஊரப்பா குருவில்சவ் வாதுசார
ஊட்டினல் சாக்கெல்லா மணிபோலாடுங்
காரப்பா குருப்பதத்தை நித்தம்நித்தம்
காத்தவர்க்கு வகைவகையாய்க் காட்டுவாரே. (398)

காட்டுவார் குருவின்மேல் பத்திவைத்தால்
கண்முன்னே யிருப்பதுபோ லிருப்பாராகில்
மூட்டுவார் சமாதியுள்ளே லட்சயத்தைக்காட்டி
முப்பாழின் வெளிகடக்கக் குளிகையீய்வார்
நீட்டுவா ரண்டமென்ற தமரிலோட
நிலைகாட்டி யிப்படித்தா னென்பநுசான்
கூட்டுவார் நிர்மலத்தி லிதுதானென்பார்
கோடான கோடியுக மிருக்கலாமே. (399)

இருக்கலா மிருக்கலாம் ஞானத்துள்ளே
        எத்தனைநா ளிருந்தாலும் யோகமொன்று
சொருக்கலாஞ் சொருக்கலாம் மனஞ்சென்றக்கால்
        சோதியுட னந்தம்வரை தோன்றுந்தோன்றும்
சுருக்கலாம் சுருக்கலாம் வேதாந்தம்பார்த்தால்
        தொல்லுலகில் சாஸ்திரங்க ளெல்லாங்கீழாம்
பெருக்கலாம் வழலைகண்டால் சுண்ணஞ்சுண்ணம்
        பேரேது வூரேது பிரித்துக்காணே. (400)

உலகஞானி.

காணப்பா வுலகத்து யோகஞானி
        கடந்தேறக் கடினமெத்த யேதென்றக்கால்
தோணப்பா கோயாலே மனமலைந்துகெட்டு
        சூட்டுகிற லட்சயத்தை நாடொட்டாது
ஊணப்பா வூணப்பா யென்றலென்று
        உத்தமனே வறுமைவந்தா லூனொட்டாது
வீணப்பா வீணப்பா வுலகஞானம்
        வெகுபேரில் கோடியிலே ஒருவன்தானே. (401)

ஒருவனல்லோ உலகத்தே ஞானியாவார்
        உற்றநடுக் காண்டமஞ் ஞூற்றைப்பாரு
மருவநல்ல மலைதோறும் நாதாக்கள்சித்தி
        மருவிவிட்டால் நூலோடு வாசிசித்தி
பருவநல்ல காயசித்தி குளிகைசித்தி
        பாங்கான யோகசித்தி ஞானசித்தி
தருவநல்ல யெம்சித்தி யானதினால்மைந்தா
        சாதகமாய் நவகோடி சித்தராச்சே. (402)

ஆச்சப்பா நவகோடி சித்தென்பார்கள்
        அப்பனே யெத்தனைபே ரெண்ணக்கூடா
போச்சப்பா உலகத்தைப் போலேரெட்டி
        பூமியெல்லாம் சித்தமய மாகப்போச்சு
வாச்சப்பா உலகத்தோர் சேரச்சேர
        வளர்ந்ததப்பா சித்தர்மய மாகயெங்கும்
யோச்சப்பா யிதுக்குள்ளே மூலவர்க்க
        முத்தமனே மலைதோறு முறவுண்டாச்சே. (403)

உறவுண்டு யென்றுக்கால் மாண்பரெல்லாம்
ஓகோகோ நிருவிகற்பத் துறைந்தார்கோடி
உறவுண்டு யென்றுக்கால் பெண்ணுறவோவல்ல
உத்தமனே ஞானத்தை ஓட்டும்பந்து
உறவுண்டோ வென்றுக்கால் வங்கணமோவல்ல
யோகத்தால் குளிகையிட்டு உறவுபாரு
உறவுண்டு யென்றுக்கால் பேத்துறவோவல்ல
உத்தமனே வாசியுட உறவுதானே. (404)

தானென்ற வுறவுக்குட் சேர்ந்தால்மக்காள்
சங்கற்பம் விகற்பமொன்றுஞ் சாரொட்டார்கள்
ஊனென்ற தலமாறுங் காட்டுவார்கள்
உயர்ந்தகுரு பதத்தினுள்ளே ஊட்டுவார்கள்
தேனென்ற மதியமுர்த மூட்டுவார்கள்
செகமெல்லா மித்தையென்று தெளிவிப்பார்கள்
வானென்ற கடந்தவஸ்து வித்துவென்று
வாயிலே குளிகையிட்டுக் காட்டுவாரே. (405)

காட்டாம வுலகத்தோன் பார்த்தானுனல்
கடுமரத்தி லெறும்பூர்ந்து கொம்பில்தேடி
மூட்டான யதீதமென்ற பழத்தைக்கண்டு
மொய்த்ததுக்கு மொக்குமொக்கு மூலயோகம்
நீட்டான குருசொல்லத் தெளிந்ததானுல்
நிலையான புருவமய்யக் கொம்பில்நின்று
தாட்டான பட்சியைப்போல் பழத்தைத்தின்பான்
சாதகமாங் கேசரிமுத் திரையைக்காட்டே. (406)

காட்டுவார் சித்தனென்றால் தேகமுத்தர்
கண்ணிமைக்குள் காயசித்தி பண்ணிவைப்பார்
ஓட்டுவார் மதியளவுங் கவனவீதி
உத்தமனே அண்டமெலாஞ் சுத்திசெய்வார்
மூட்டுவார் நிர்விகற்ப முகாந்தமட்டும்
முன்னூறு பிர்மவரை முடிவுதாண்டி
ஆட்டுவார் மனக்கயிற்றால் வாசிதன்னை
ஆச்சரியங் கேசரியா லாட்டுவாரே. (407)

கேசரிதா னவர்களுக்குப் பூச்சரமாய்க்காணும்
கெடியான அண்டமெல்லாங் கைக்குட்காணும்
கேசரிதா னவர்க்கசனப் பட்சிபோல
கீழேது மேலேது சித்தர்க்குமைந்தா
கேசரிதா னுவதென்ன ஆகாசந்தான்
கெடியாக அதினாலே அஞ்சுமாச்சு
கேசரியில் சஞ்சரித்தால் அவனேசித்தன்
கெடியான ரசவாதி கீர்த்தியோனே. (408)

கீர்த்தியென்ற ரசவாதம் வந்தால்மைந்தா
கெடியான வாசியென்ற யோகம்வேணும்
கீர்த்தியென்ற ரசயோகம் வந்தால்மைந்தா
கிடையாத ஞானத்தே கிட்டவேணும்
கீர்த்தியென்ற யெமசித்தி யானால்மைந்தா
கெவுனமுற்று வுலகமெல்லாஞ் சுற்றவேணும்
கீர்த்தியென்ற ராசயோகம் வந்தால்மைந்தா
கீழேழும் மேலேழுங் காணலன்றே. (409)

காணுவான் நன்மைரச வாதியென்றால்
கடைகெட்ட வாதிவிட்ட குறையேயானால்
பூணுவான் மாயத்தில் பெண்ணைக்கூடி
போகிப்பான் தாகிப்பான் பிறப்பான்கோடி
தோணுவா னிருவினையின் பாவத்தாலே
சுழலுவான் ராட்டினம்போல் சொக்கிச்சொக்கி
ஊணுவா னொருக்காலும் கடைத்தேறமாட்டான்
ஓகோகோ உலகத்தில் வாதிதானே. (410)

உலகமெல்லா மிப்படியே கெட்டுப்போச்சு
ஓகோகோ யோகமெல்லா மூழலாச்சு
உலகமெல்லாஞ் சாங்கியமென்ற ஞானம்போச்சு
உறைத்துநிற்க மாட்டாமல் மனம்பேயாச்சு
உலகமெல்லாங் கெட்டவா சனையிற்கூடி
உத்தமனே கிரிகையிலே யுழன்றார்கோடி
உலகமெல்லாஞ் சரியையிலே நின்றார்கோடி
ஓடுகிற கானலைப்போ லொடுங்கினாரே. (411)

ஓடுங்கினுர் மாயத்தே யுலகத்தோர்கள்
உத்தமனே அதினுலே மனம்பேயாச்சு
ஓடுங்கினுர் சித்தரெல்லாம் பூரணத்தினுள்ளே
ஓகோகோ சித்தரென்ற காமமாச்சு
ஓடுங்கினுர் மனோன்மணியா ளொளிதானுள்ளே
உற்றசிலம் போசையுமே கேட்கலாச்சு
ஓடுங்கினுர் ரிஷிகளெல்லாம் நிருவிகற்பத்துள்ளே
உரையற்ற விடமதுதான் உயர்த்திகாணே. (412)

உயர்த்தியென்ன தாழ்த்தியென்ன மூன்றுபேர்காண்
ஒருவரவர் கைநீத்து யொருவர்தோர்ப்பார்
உயர்த்தியென்ன பின்னெருவ ரோடமெத்த
ஓகோகோ யெப்படியுங் கரையில்சேரு
உயர்த்தியென்று சொன்னுக்கால் மனமோசத்தி
ஊட்டுறது மாட்டுறது மனத்தினுலே
உயர்த்தியென்ற மும்முறை பாராமல்கெட்டு
உலகமெல்லாம் வாய்ப்பேச்சா லுழன்ருர்பாரே. (413)

பாரப்பா உழன்றுதிரி யாதேநீயும்
படுகுளியில் விழுகாதே பாழாமாய்கை
நேர்சூழ்ந்து தென்றல்வி வேகம்போச்சு
நிமிஷத்தில் பஞ்சிலிட்ட தீய்ப்பேரலாச்சு
யாரப்பா சொன்னுலும் செவிகேளாது
பாசமென்ற அரவுகடி தலைக்கேயேறும்
சேரப்பா மலைகளிலே சித்தரோடு
சேர்ந்தயிந்தக் கூத்தெங்கும் காகத்தாட்டே. (414)

ஆட்டான தாளகந்தா ஞதிவித்தை
அப்பனே சிவனுடைய தங்கைகாதம்
கூட்டான அஷ்டலெட் சுமியாய்நின்று
கூத்தாடி வுலகமெல்லாம் மண்ணுய்நின்றுள்
நீட்டான செகசால மவட்குளாச்சு
நிமிஷத்தே லோகமெல்லாஞ் சொர்ணமாகும்
மூட்டான தமக்கைவந்து மூண்டாளானுல்
மூதேவி பெருமையென்ன வறுமைதானே. (415)

வறுமையினாற் சுடுவார்க ளுலகவாதி
　　வாய்க்குமோ மூத்தாள்தான் முகத்தில்நிற்க
சிறுமையினாற் சுட்டலைந்தால் வாதமாமோ
　　செப்புகிற குருவேணுந் திருமுன்வேணும்
பொறுமையினாற் சாந்திமுற்று நிற்கவேணும்
　　புகழாகச் சிவயோக மூட்டவேணும்
நெறுமையினால் மெஞ்ஞானம் பார்க்கவேணும்
　　கோராக வாதமங்கே நிலைக்குந்தானே. (416)

தானென்ற ஆணுவத்தால் சுடுவார்கோடி
　　சாதகமாய்க் கெட்டதென்ன வென்பார்கோடி
கானென்ற காட்டினுள்ளே அலைவார்கோடி
　　கைமுறையாய்ச் சாறுவிட்டு அரைப்பார்கோடி
கோனென்ற குருகாணே னென்பார்கோடி
　　கூட்டுகிற வரிசையில்லை யென்பார்கோடி
தேனென்ற மொழிகேட்டுச் சுடுவார்கோடி
　　செகமெல்லாங் கெட்டுநிற்கத் திறந்தான்காணே. (417)

திறமாகச் சிலதுபேர் காரஞ்சாரம்
　　சிக்கிற்றுச் சிக்கிற்றுத் தெளிந்தேனென்று
குறமாகப் பாடினதோர் பாட்டுப்போல
　　குளாவியொன்றை யொன்றோடே கூட்டிப்பார்த்து
நிறமாகத் தப்பித்துக் கட்டுமாயில்
　　நேரல்ல விதுவென்று பின்னையொன்று
அறமாகச் செய்வமென்று பாய்ந்துபாய்ந்து
　　அலைகிறு ருலகமெல்லா மலைகுறரே. (418)

அலைகிறவன் வாதமில்லை பாருவென்பான்
　　அப்பனே லோகம்பொன் னுமோவென்பான்
துலைகிறதோர் வினைதுலைந்தால் காணுமென்பான்
　　சூட்சாதி சூட்சமப்பா வாதமென்பான்
குலைகிறதோர் கருவியினு லெண்ணியெண்ணி
　　குறுக்குவழி யாகவொன்றைக் கூட்டிப்பார்த்து
உலைகிறதோர் சுணங்கனைப்போல் வாதிகோடி
　　உறவாடிப் பார்த்திருந்து மூதுவாரே. (419)

ஊதுவா ரொருகோடி கரிக்காசுங்காணும்
உறைத்துநின்ற வூத்தாலே கெட்டுதென்பார்
கோதுவார் புடம்போட்டோர் காசுங்காணும்
குழுறித்துப் புடம்மெத்தப் போச்சுதென்பார்
வாதுவார் பதங்கம்வைத்து யெரிப்பாரய்யா
வகைமோச மதினாலே தீஞ்சுதென்பார்
மாதுவார் சூதத்தைக் கட்டுகிறேனென்பார்
மருவிநின்ற புடத்தாலே புகைந்துபோமே. (420)

போமப்பா குருசொல்ல வாதமாகும்
புகழூற்ற விவேகியென்றுஞ் சும்மாசெய்வார்
ஓமப்பா குருசொல்லை உணர்ந்துசெய்வார்
உலுத்தனென்றால் சுட்டெரிவா னென்றுமில்லை
ஆமப்பா யென்றொருவன் அடுத்திருந்துசொல்வான்
அதைக்கேட்டு மெய்யென்று குருமொழியைவிட்டு
காமப்பால் வித்தைநன்று யென்பான்பாவி
கழுவியதோ ரெலும்புகவ்வும் நாய்போலாச்சே. (421)

தாளகச் சுத்தி.

ஆச்சப்பா தாளகத்தைச் சுத்திகேளு
அப்பனே சுண்ணும்புக் கல்லில்வைத்து
சாச்சப்பா நீர்வாரு ஐம்பத்தொன்று
சண்டாள வூற்றெல்லாங் கருப்பாய்ப்போகும்
காச்சப்பா யதன்பிறகு கூழுப்பாண்டம்
காடிவிட்டுக் கொதிப்பித்து யிருத்துப்போட்டு
போச்சப்பா யிதைப்பாரு சுத்தியாகும்
உத்தமனே யிதைச்சுண்ண மாக்கக்கேளே. (422)

தாளகச் சுண்ணம்.

கேளப்பா துருசியென்ற சுண்ணத்தோடே
கெடியான வீரமொடு பூரச்சுண்ணம்
நீளப்பா மத்தித்துத் தாளகத்திலப்பி
நோரக வூகிடவே சுண்ணமாகும்
மாளப்பா யிச்சுண்ணம் வீரங்கூட்டி
மாட்டியிதைத் துருசுக்கு அப்பியூது
தாளப்பா யிதுவல்லோ வாதத்துக்கெல்லாம்
சாக்கெல்லாந் துருசுக்குக் கீழுமாச்சே. (423)

கல்லுப்புச் சுண்ணம்.

ஆச்சுதிந்தத் துருசியிலே வீரமிட்டாட்டி
யப்பனே கல்லுப்பி லப்பியூது
மாச்சுதிந்தக் கல்லுப்புச் சுண்ணும்பாகும்
மகத்தான சுண்ணமிது வுப்புச்சுண்ணம்
தோச்சுயிந்தச் சுண்ணத்திற் சாரங்கூட்ட
துடியான செயநீராம் நீருக்குள்ளே
வாச்சுதிந்தக் கற்பூரப் பலகைபோட்டு
வாரியிட்டு ஆதிடவே சுண்ணமாமே. (424)

வங்கச் சுண்ணம்.

சுண்ணமென்ற கற்பூரம் வீரமிட்டுஆட்டி
துடியான தாளகத்திற் பூசியூது
சுண்ணமென்ற சலவையுமாந் தாளகந்தானப்பா
தொட்டிடமும் பட்டிடமுஞ் சுண்ணும்புக்காடு
சுண்ணமென்ற தாளகத்தை வங்கத்திற்பூசி
சூட்டியொரு புடம்போட வங்கச்சுண்ணம்
சுண்ணமென்ற வங்கத்தால் சரக்கெல்லாங்கட்டுந்
துளிபட்டாற் சூதமங்கே சுற்றிச்சாமே. (425)

சாமப்பா உபரசங்கள் சத்தாய்ப்போகும்
தாக்கயிலே சரக்கெல்லா மீயமாகும்
வேமப்பா யண்டரண்ட மகராசந்தான்
(வங்கம்) விட்டிடமுந் தொட்டிடமுந் தெரியாதாடு
ஆமப்பா யிச்சுண்ணந் தங்கத்தைநீற்றும்
ஆதியென்ற ரசத்துக்குச் சிங்கமிந்தவங்கம்
ஓமப்பா யிப்படியே சுண்ணமெல்லாமாடு
ஒன்றொன்றை விரித்தாட யுகங்கொள்ளாதே. (426)

நிமிளைச் சுண்ணம்.

கொள்ளாத வங்கத்தை வீரமிட்டுஆட்டி
குலாவியதோர் நிமிளையின்மேற் பூசியூது
அள்ளாத சுண்ணும்பாம் நிமிளைவேகம்
அண்டரண்டங் கடந்தாடு மறியப்போகா
தள்ளாத பிரமனுட விதிதந்தள்ளுஞ்
சாதகமாய் வெகுகோடி காலம்வாழ்ந்து
தள்ளாத் சூதத்தை நிமிஷத்திற்கொல்லும்
துடியான தங்கத்தை நீற்றுங்காணே. (427)

### சாரச்சுண்ணம்.

நீற்றியதோர் நிமிளையிலே வீரமிட்டாட்டி
நேரர்கச் சாரத்திற் பூசுபூசு
போற்றியதோர் கசிவெடுக்க மணற்குள்வைத்து
புகழாகப் புடம்போடு தந்தம்போலாம்
ஆற்றியதோர் சாரத்தில் வீரம்பூரம்
அப்பனே கூட்டியதைக் கருவாலாட்டி
ஏற்றியதோர் வில்லைகட்டி ஊதச்சுண்ணம்
ஏதுசொல்வேன் சாரத்தின் வீரந்தானே. (428)

வீரமென்றால் வெகுவேகஞ் சாரச்சுண்ணம்
வேதைமுறை யென்னாலே சொல்லக்கூடா
தாகமென்றால் வெகுதாகஞ் சூதத்தைக்கண்டால்
சலம்போல பாவிக்குஞ் சாரநீறு
யாகமென்றால் சரக்கெல்லாம் பாகம்பண்ணும்
பணப்பேதி சினப்பேதி சத்தபேதி
நாகமென்று விதுபட்டால் தூமவேதை
நல்மான சாரத்தைக் கரைகாணேனே. (429)

### துருசுச் சுண்ணம்.

கரையில்லாச் சாரத்தில் வீரமிட்டாட்டி
கவ்விடவே துருசியிலே பூசிக்காண
நிரையில்லாத் துருசியைத்தா னூதச்சுண்ணம்
ஜோக வெகுசாறுக்கு துருசுவேகம்
வரையில்லாத் துறையாடுங் கோடாகோடி
வாய்திறந்து பேசவென்றால் வார்த்தையில்லை
துரையில்லா வூரிதுவோ வெண்ணவேண்டாம்
துடியான துரையாச்சு துருசுதானே. (430)

துரிசிகொண்டு ஆடுவதே வாதஞானம்
சூட்சத்தை யறிவார்கள் பெரியோரையா
பரிசிகொண்டு வேதிக்குந் தூமவேதை
பட்டதெல்லாங் குருவாகுஞ் சிங்கிக்காகும்
தெரிசிகண்டால் சுரபியுமாங் காமதேனு
தேசமெல்லாம் பொன்னாகுஞ் சுண்ணமாகும்
உரிசிகொண்டு கண்டவரார் சித்தன்வாதி
ஓகோகோ மற்றவர்க்குத் தெரிந்திடாதே. (431)

சூதச் சுண்ணம்.

தெரியாத துரிசியிலே சிங்கிகூட்டி
 சினக்கவொரு பொட்டிட்டால் சூதஞ்சாகும்
மறியாத சூதத்தை யுருக்கிக்கொண்டு
 மறுபடிதான் சுண்ணும்பா யூதுமைந்தா
பரியாத பதிஞலு மிதுதாஞென்றும்
 பாய்ச்சியொரு மணியாக வாங்கிவைத்து
அறியாத வீரமொடு பூரச்சுண்ணம்
 அப்பியல்லோ குகைதனிலே வைத்தூதே. (432)

ஊதப்பா சுண்ணும்பாம் கோசபீசம்
 உத்தமனே வாதமெல்லா மிதுக்குள்ளாச்சு
ஏதப்பா யிதைவிட்டால் வாதமுண்டோ
 யெடுத்தெடுத்த துறைக்கெல்லா மிரண்டும்வேணும்
சூதப்பா செய்கிறதோர் வாதியாஞல்
 சுட்டறியான் தங்கத்தைச் சுடுவான்பாவி
மாதப்பா கடாட்சித்தால் வாதமாகும்
 மதிகெட்ட பசுவாஞல் வாதம்போச்சே. (433)

வாதமென்று லேதுக்கு நாமமாச்சு
 மகத்தான ரசத்தையல்லோ மாய்க்கவேணும்
போதமென்று லேதுக்கு நாமமாச்சு
 புகழான மனத்தைவசப் படுத்தவேணும்
வேதமென்று லேதுக்கு நாமமாச்சு
 வேதாந்த சாரத்தை யறியவேணும்
நாதமென்று லேதுக்கு நாமமாச்சு
 நாதாந்த யோகத்தை நாட்டநன்றே. (434)

நன்றுமில்லை தீதுமில்லை விண்ணைப்பார்த்தால்
 நானுமில்லை நீயுமில்லை நடனங்கண்டால்
ஒன்றுமில்லை ரெண்டுமில்லை யுரைத்திட்டாக்கால்
 ஓடுகிற குளிகையில்லை மனமுமில்லை
கண்ணுமில்லை முகமுமில்லை வாயுமில்லை
 கானலொடு பரிசமொடு சத்தமில்லை
பண்ணுமில்லை பழக்கமில்லைக் கருவியில்லை
 பராபரம்போல் நின்றவர்க்குத் தபசுநேரே. (435)

### வங்கத்தின் பெருமை.

நேரான வங்கத்தின் பெருமைகேளும்
நிலத்தமக ராசன்தான் வங்கமப்பா
பாரான பூமியிலே சூதந்தங்கிப்
படர்ந்துநின்று செனித்திட்ட வங்கமாச்சு
ஓரான வாசனைக்குஞ் சூதங்கட்டும்
உத்தமனே சுணைப்பட்டால் தங்கம்மீறுஞ்
சாரான நவலோக முபாரசங்களெல்லாஞ்
சணத்திலே சரக்கெல்லாஞ் சேரச்சாமே. (436)

சாமப்பா தொட்டசரக் கெல்லாஞ்சுண்ணஞ்
சதாசிவத்தின் மேல்நின்ற மணிவரைக்கும்
வேமப்பா அண்டமென்ற பத்துவேகும்
விட்டிடமுந் தொட்டிடமு மேமமாகும்
ஓமப்பா வங்கமென்ற சிங்கஞ்சிங்கம்
உட்பாய்ந்தால் விடுமோடா உப்புக்கப்பா
ஆமப்பா வங்கமென்ற கம்பந்தன்னில்
ஆதியென்ற மதயானை கட்டலாமே. (437)

கட்டலாங் கட்டலாம் வங்கத்தூணில்
கரையேது கணக்கேது சூதஞ்சாகும்
யெட்டலாம் யெட்டலா மனந்தவேதை
யென்னவென்று சொல்லிடுவேன் வங்கத்தாட்டு
நெட்டலாம் நெட்டலாஞ் சுண்ணமெல்லாம்
நிலையேது தலையேது நினைவோகொள்ளா
தட்டலாந் தட்டலாம் வேதையெல்லாம்
தங்கமெல்லாம் வெங்கலமாய்த் திருவாய்ப்போமே. (438)

போமப்பா யேமமெல்லாங் கெட்டுத்தூளாய்ப்
புகழாகச் செய்தாக்கா லிரும்புபொன்னும்
ஆமப்பா வங்கத்தைச் சுண்ணம்பண்ண
யாராலு முடியாது அறிவான்வாதி
ஓமப்பா வறுப்பார்கள் புடஞ்செய்வார்கள்
உத்தமனே சுன்னையில்லை காரமில்லை
நாமப்பா கண்டபடி அஞ்ஞூற்றில்சொன்னோம்
நலமாகப் பார்த்துரைத்து நாடிப்பாரே. (439)

காட்டியிந்த முறையெல்லாம் பார்க்கவெண்ணில்
நலமாகக் குருபதத்தைக் கார்த்திருந்து
மூட்டியிந்தக் குருச்சொன்னால் துறையுங்காணும்
முட்டாளாய்ச் சுட்டாக்கா ளொன்றுமில்லை
ஆட்டியிந்தக் குருக்கண்டா லெல்லாஞ்சுண்ணம்
ஆசான்றான் சொன்னதினா லறியவேணும்
காட்டியிந்த வழலைச்சுண்ணம் தொட்டாலாடுங்
காட்டாட்டால் யென்னூலைக் கலந்துபாரே. (440)

சட்டைமுனி நூல் பாரேனல்.

கலந்தெந்தன் நூல்பாரு மனதையூணிக்
கயிலாய சட்டைமுனி நூலைப்பாரு
மலைந்துநின்று அலையாதே நூவில்லாட்டால்
மகத்தான குருபதத்தைத் தோத்திரம்பண்ணு
நலைந்துநின்ற பத்திகண்டால் குருதான்சொல்வார்
நாய்போலே திரிந்துவிட்டால் சொல்லார்சொல்லார்
அலைந்துநின் றலைந்ததினால் வாதமாமோ
அறிவுகெட்ட சென்மங்க ளென்றுசொல்லே. (441)

சொல்லப்பா வாதிகிட்டத் திரிந்துசுற்றி
சூட்சமெல்லா ஞானறிவே னென்றுசுட்டு
அல்லப்பா பணம்போச்சு சோற்றுக்காகும்
அதுவுமன்றி யிதுவுமன்றி அழிஞ்சுபோச்சு
வில்லப்பா வளைந்தாலோ அம்புதைக்கும்
வெறுமரம்போல் நின்றாக்கால் தைக்குமோடா
கல்லப்பா வாதிமன மிரங்கிப்பார்த்தால்
கடாட்சித்துச் சொன்னாக்கால் சொல்லுவாரே. (442)

சொன்னாக்கால் யெப்படித்தான் சொல்வானாசான்
துணையான நிழல்போலக் காத்தால்சொல்வார்
சொன்னாக்கால் பொய்சொல்லார் நிலைத்தவாதி
சோதிப்பான் குணங்களெல்லாந் துணிவுகாண்பான்
சொன்னாக்கால் பொய்சொல்வீச் சுடுவித்தாக்கால்
சுணங்கனவன் வாதியல்ல துப்புமேலே
சொன்னாக்கா லொருசொல்லில் காட்டிவிப்பான்
சூட்சமது அவர்பதத்தைச் சுற்றிக்காரே. (443)

காரப்பா கார்க்கையிலே பத்திகொண்டு
கைகாட்டும் வேதையென்று கேட்கவேண்டாம்
பாரப்பா தொண்டுபண்ணித் திரியும்போது
பாய்ச்சுவார் வேதையப்போ நீயும்பாரு
ஏரப்பா எருதுழைத்து உழுதாலல்லோ
எக்காளுஞ் சீவனத்துக் காகுமாகும்
நேரப்பா குருபதத்தைக் காத்தாலல்லோ
நிகரில்லா யேமவித்தை காட்டுவாரே. (444)

ஏமவித்தை.

ஏமவித்தை யென்றக்கால் யெளிதோமைந்தா
யெடுத்தசடத் தவக்குறையா லெய்துமெய்தும்
யேமவித்தை கண்டாக்கால் ஞானசித்தி
யெட்டுமெட்டுஞ் சித்தியாம் யோகசித்தி
யேமவித்தை யென்றக்கால் போதஞ்சித்தி
யெளிதிலே மனஞ்செயிக்கும் குளிகைசித்தி
யேமவித்தை காணிலிரு வினையுமெய்தும்
இல்லாட்டால் யெண்ணியெண்ணி யேங்குவாரே. (445)

எங்கினால் வருமோதான் மகத்தாஞ்சித்தி
யெங்கெங்கு நூல்பார்த்து மெளிதிற்காணார்
பாங்கின லென்னூல்பார் சட்டைமுனி நூல்பார்
பாலோடு சர்க்கரையும் பழம்போலாச்சு
தாங்கின லூணிப்பார் வெட்டவெளியாகும்
தப்பான சொல்லில்லை கருமறைப்போயில்லை
வாங்கின லொருவேதை வெகுவேதையாகும்
மயங்கினால் முட்டாள்தான் மயக்கம்பாரே. (446)

மயக்கம்.

மயக்குவது யெதினாலே ஆச்சுதென்றால்
ஆயிபதம் பூசிக்காப் பாவத்தாலே
மயக்குவது யெதினாலே யாச்சுதென்றால்
வாசிகொண்டு வூதாத மனதினாலே
மயக்குவது யெதினாலே யாச்சுதென்றால்
மாபத்தி லழுத்திநின்ற மயக்கத்தாலே
மயக்குவது யெதினாலே ஆச்சுதென்றால்
மக்களே வேதாந்தம் பாரார்காணே. (447)

காணாத மூடரொரு கோடிகோடி
கார்த்திருந்து பாராத கசடர்கோடி
ஊணாதே ஊணிகின்று உலைவார்கோடி
ஒப்பற்ற ஞானமெங்கே யென்பார்கோடி
பூணாதே பூணும்பின் னென்பார்கோடி
புகழான சாங்கியமென் றிருப்பார்கோடி
தோணாது தோணியெங்குந் தானாய்நின்று
சுத்தசை தன்யத்தைத் துடரார்பாரே. (448)

துடராதே ஞானம்விட் டென்னசடமானூர்
சுணங்கமல்லோ சணப்பொழுதில் விஷமத்தில்வீழ்ந்து
அடராமல் கண்மூடிப் போதத்தைப்பார்த்து
ஆனதின்பின் னுதவியல்லோ மறந்துபோச்சு
படராமல் மாயத்தை மனதைக்கட்டிப்
பார்க்கவல்லோ நரசென்ம மெடுத்ததல்லால்
உடராம லுண்டுடுத்திச் சையோகித்து
உத்தசென்ம மதையுமொழித் திடலாகாதே. (449

காயசித்தி.

ஆகாதே ஆகாதிந் நரசென்மந்தான்
அனந்தகா லிருந்துதவ மெடுத்தசென்மம்
போகாதே போகாது காயசித்தில்
புகழான யோகத்தே நின்றுதேறு
ஏகாதே யேகாது ஞானத்தேறில்
இதுக்கல்லோ நரசென்மம் வேணுமென்றார்
வேகாதே வேகாது மதத்தின்பிறப்பு
வெந்துபோம் ஞானத்திற் விரைந்துயேறே. (450)

ஏறப்பா வென்றக்கா லேறுவானோ
யெளிதாக விட்டகுறை வந்தாலேற்றும்
தேறப்பா வென்றக்கால் தேறுவானோ
செகமாய்கை யொழிந்தாக்கால் மனந்தான்தேறும்
ஆறப்பா வென்றக்கா லாறுவானோ
ஆங்காரந் தீய்ந்தக்கால் கோபமாறும்
மாறப்பா வென்றக்கால் மாறுவானோ
மாயத்தின் நேசமற்றால் மாறுவானே. (451)

நேசமற்று நின்றதல்லோ நிருவிகற்பம்
　　நினைவழிந்து போனதல்லோ நிராகாரந்தான்
காசமற்று நின்றநிற் குணத்தின் வீதி
　　நல்வினையுந் தீவினையும் ரெண்டும்பாழாம்
வேஷமொற்ற பிரபஞ்சத் தடுத்துநின்று
　　வெகுநாளா யுலைந்தலைந்து மனதைத்தேற்றி
காசமற்ற கண்போல ரவியைப்பார்த்து
　　கலப்பார்கள் பெரியோர்கள் கண்டுகொள்ளே. (452)

கண்டுகண்டு மனந்தேறி யெல்லாந்தள்ளி
　　கற்பமில்லை யென்றிருந்த லெட்சயத்தைத்தள்ளி
உண்டுஉண்டு கழித்ததெல்லாம் பொய்யென்றெண்ணி
　　உற்றுப்பார் வெட்டவெளி யொன்றுமில்லை
அண்டுஅண்டு கண்டத்தி லப்பாசொன்னேன்
　　அறியாம லிருந்தாக்கால் பிறவிவாய்க்கும்
மொண்டுமொண்டு யிரைக்கின்ற மேகநீர்போல்
　　மோசமப்பா பிறவிவந்து முளைக்குந்தானே. (453)

முளையிலே பிடுங்கிவிட்டா லொன்றுமில்லை
　　மூதளிர்த்து மரமானால் பிடுங்கப்போமா
கிளையிலே படர்ந்துநின்ற கொடிபோல்மைந்தா
　　கெடுமாயை வாசனையால் வந்துசுற்றும்
குளையிலே பொன்னூலைத் தளுக்கைப்பார்த்து
　　குவிந்துநின்ற தலம்பாரு மெள்ளப்பண்ணுந்
தலையிலே அகப்பட்டுச் சாகநன்றே
　　சாதகமாய் மெஞ்ஞானந் தாக்கியேறே. (454)

சாரச்சுண்ணம்.

தாக்கான தாளகமாஞ் சுண்ணத்தோடே
　　சாதகமாய் வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வாக்கான வங்கத்திற் பூசிக்கொண்டு
　　மருவியொரு புடம்போடு வங்கச்சுண்ணம்
வோக்கான யிச்சுண்ணம் வீரமிட்டாட்டி
　　புகழான சாரத்தி லப்பியூது
நேர்க்கான சுண்ணாம்பாஞ் சாரச்சுண்ணம்
　　நகாயிதில் வீரமிட்டு வழலைக்கப்பே. (455)

கல்லுப்புச் சுண்ணம்.

அப்பியதோர் வழலைதன்னை ரவியிற்போட்டு
அதின்பிறது சுண்ணாம்பில் வைத்துஆட்டு
ஒப்பியதோர் சவுக்காரஞ் சுண்ணாம்பாகும்
உத்தமனே கடுங்கார மதிலேயேற்றி
செப்பியதோர் வீரமிட்டுக் கல்லுப்பிலப்பி
சினக்கவொரு புடம்போட்டு ஊதிப்போடு
கொப்பியதோர் கல்லுப்புக் கடுஞ்சுண்ணமாச்சு
கொட்டுமது கொட்டுமது சினைத்தேளாச்சே. (456)

கற்பூரச் சுண்ணம்.

ஆச்சப்பா உப்போடே சாரமிட்டாட்டி
அப்பனே செயநீராம் நீருக்குள்ளே
ஓச்சப்பா வீரமிட்டுச் சிவந்தநீராம்
உத்தமனே கற்பூரப் பலகைபோட்டு
வாச்சப்பா வாரியிட்டு வூதச்சுண்ணம்
மருவியிதில் வீரமிட்டால் ரெத்தம்போலாம்
பாச்சப்பா யிதைத்தாள கத்தின்மேலே
பரிவாகப் போட்டூதச் சுண்ணமாமே. (457)

வங்கச் சுண்ணம்.

சுண்ணமென்ற தாளகத்தில் வீரத்தாட்டி
துடியான வங்கத்திற் பூசிக்காய்ச்சி
தண்ணமென்ற புடம்போட வங்கச்சுண்ணம்
சாதகமாய் வங்கத்தில் வீரத்தாட்டி
பண்ணமென்ற பரங்கிக்கிப் பூசிவாட்டி
பக்குவமா யூதுமைந்தா வீரச்சுண்ணம்
வண்ணமென்ற வீரத்தில் வீரத்தாட்டி
மகத்தான நிமிளைக்கிப் பூசிப்போடே. (458)

நிமிளைச் சுண்ணம்.

பூசியதோர் நிமிளைதன்னை ஊதச்சுண்ணம்
புகழான நிமிளையிலே வீரத்தாட்டி
ஆசியதோர் சாரத்தி லப்பியாட்டி
அதின்பிறகு வில்லைகட்டி யூதச்சுண்ணம்
காசியதோர் மேருவதாம் நிமிடங்காட்டும்
கரைகொள்ளா வேதையுஞ்சா ரத்திலாமே
நாசியதோர் நர்த்தனத்தில் நின்றபதிகாட்டும்
நலமான வித்தையிது சாரம்பாரே. (459)

பார்க்கிறதோர் நாதாக்கள் ரிஷிகள்காணூர்
பாவிமக்காள் நீங்களெங்கே காணப்போறீர்
சேர்க்கிறதோ ரினங்கண்டு சேர்த்துஆடில்
தீராது தீராது உகாந்தகற்பம்
கோர்க்கிறதோர் மணிபோலே யகண்டவரையேறும்
குறுக்கினல் குறுக்குமது விட்டால்நீரும்
ஏர்க்கிறதோர் கடைசியெல்லாந் தள்ளிப்போட்டு
யேற்றிவிக்கும் போதத்தி விருந்துவாழே. (460)

துருசுச் சுண்ணம்.

போதத்தி விருத்தியதோர் சாரச்சுண்ணம்
புகழாக வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வாதத்திற் தலையான துருசுக்கப்பி
வாட்டிமெள்ள வூதிடவே சுண்ணமாகும்
காகத்திற் சூதத்தைக் கண்டுதானல்
கரும்பாம்பின் வாயிலுற்ற தேரையாகும்
வேதத்தின் முறையிதுதான் மலரோன்சொல்லும்
வேதாந்தப் பெரியோர்கள் சொன்னவாறே. (461)

வாரான துருசியிலே சிங்கிகூட்டி
மகத்தான சூதத்தைக் கட்டியாட்டி
தாரான சீனமிட்டு மத்தித்தேதான்
தனிப்பரங்கிப் பலகைமேற் பூசிவாட்டி
கூரான வுபரசத்தின் சுண்ணமப்பி
கொடுஞ்சீலை சுற்றியதைக் காயவைத்து
நேரான பக்குவமா யதையெடுத்து
கிலையாக வைத்துமே தணலிலூதே. (462)

ஊதையிலே வயிரம்போல் வீரங்கட்டும்
உத்தமனே யிதுரெண்டுந் தங்கமாகும்
ஊதையிலே யுருக்கியொரு மணியாய்வாங்கி
உட்பூரந் துருசியது ரெண்டும்பூசி
ஊதையிலே யஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
உத்தமனே மல்லிகைப்பூப் போலேயாகும்
ஊதையிலே வெகுநேரா யதிந்துவூது
உத்ததிலே வாய்க்காட்டால் நீருகாதே. (463)

ஆகாதே பொச்சுதென்று மலைக்கவேண்டாம்
அப்பனே பின்னொருக்கால் சூட்டியூது
வேகாதே நின்றுக்கால் சுண்ணமெல்லாம்
வேதையில்லை சுண்ணப்பேற நன்றாயூது
சாகாதே சாவதென்னு பச்சைச்சுண்ணாஞ்
சாதகமாய்ச் சேர்ந்தாக்கால் வேதையாகும்
நோகாதே யிதைப்பார்த்து தொழிலைப்பண்ணு
நோக்கான நோக்கையுண்ணி நோக்குநோக்கே. (464)

பின்சென்மம்.

நோக்கினர் சிவயோக சித்தனுவார்
நோக்காட்டால் கடைகெட்ட பாவியாவார்
ஆக்கினைசோ ருண்ணலாமென் றிருக்குமுன்னே
அதற்குமுன்னே சிவகலை பிறிந்ததானல்
போக்கினல் பின்னிந்தச் சென்மவருமோடா
புத்திகெட்ட பிள்ளைகளே புக்கியேறு
வாக்கினல் மனத்தினல் காணக்கூடா
மகத்தான பூரணத்தில் மருவநன்றே. (465)

மருவியதோர் பரியோட்டே வீரச்சுண்ணம்
மகத்தான வெட்டெட்டு வேதையாடும்
உருவியதோர் கத்தியிலே விழுந்தபழம்போலே
ஓகோகோ வாதமெல்லாந் துண்டுதுண்டாயாடும்
கருவியதோர் யுண்மையொக்கு மிதிலேவேதை
கண்ணிமைக்குள் சென்மம்நா றெடுத்தாப்போலாடும்
சருவியதோ ரண்டமொடு கோடிசங்கமாடுஞ்
சாதகமாய் வங்கமது போதம்நேரே. (466)

நிமிளை நாலு விபரம்.

நேரான நிமிளையுட பெருமைகேளும்
நிகரான நாலுவகை சாதியுண்டு
வாரான பொன்னிமிளை ரசிதத்தோடு
மருவியதோர் கஞ்சமொடு காகந்தானே
தாரான நாலுவகைக் குள்ளேமைந்தா
சதகோடிக் கேயோடும் யேமவர்ணம்
பாரான கஞ்சமென்றால் நாலாயிரத்துக்கோடும்
மருவியதோர் ரசிதத்தின் பண்புகேளே. (467)

ஜெயகேந்தி.

பண்பான ரசிதமென்றால் நூற்றுக்கோடும்
பாங்கான கருப்பென்றால் பத்துக்கோடும்
நண்பான யிதுநாலுந் தேவிநாதம்
நலமாக மலேதோறும் பிறக்கும்பாரு
கண்பான யிதின்வேதை கரைசொல்லப்போகா
காணப்பா செயகெந்தி யிதுக்குநாமம்
தண்பான தவமுடையோர் செப்பும்வித்தை
சாதகமாங் காமுகற்குத் தவறிப்போமே. (468)

தவறாமல் காணவென்றால் சிதம்பரத்தைப்பூசி
சத்தியமா யஞ்செழுத்தை மனத்தாலோது
தவறாமல் காணவென்றால் வாமத்தேநில்லு
சாதகமாய் வஸ்துவுட சுத்திகொண்டு
தவறாமல் காணவென்றால் பத்திகொண்டு
தலமாறுங் கண்டுசதா சிவத்தில்நில்லு
தவறாமல் காணவென்றால் ஞானவழிகூடு
தனிநாலும் விட்டாக்கால் வாதம்நீச்சே. (469)

நீச்சென்று அருள்புரிந்தீர் குருவேயையா
நிர்மலமே நிற்களமே நிறைஞ்சனமேகேளும்
வாச்சென்ற வர்ணந்தான் நீச்சிற்கண்டேன்
வாதவித்தை விளையாட மருவினர்கள்
பூச்சென்று சொன்னீரே யிதுவென்மாயம்
புத்தியற்றுச் சொல்கிறனே போதித்தாளு
ஆச்சென்று சொல்வார்கள் கண்டவார்த்தை
அவனுடைய கிரிகையைநீ யறிந்துபாரே. (470)

அறிந்துநின்றே பார்த்திடுமம் பலமாம்பூசை
அத்தோடே வாமமவன் கூடிச்செய்வான்
மறிந்துநின்று போதையிலே வாசிவைத்து
மனமுறைத்தால் ஞானத்தின் வழியிற்செல்வான்
பிறிந்துநின்று அவ்வழியை விட்டால்மைந்தா
பேய்வாதி பேய்வாதி யங்கொன்றில்லை
சொறிந்துநின்ற சிரங்கரித்து வறுமைபூண்டு
சுற்றுவா ரவர்தோஷஞ் சுற்றுந்தானே. (471)

சூதம்சுட்ட தோஷம்.

தோஷமென்ன வென்றக்கால் சொல்லக்கேளு
சூதமென்ற சிவனுடைய சுக்கிலந்தான்
தோஷமென்ன சுட்டாக்கால் ரவிகோடிநரகம்
சுகமாக யிதைக்கட்ட மதிகோடியோகம்
தோஷமென்ன கெந்திமுதல் பாரபரைக்குநாதம்
சுட்டாக்கா லென்னளும் நரகில்மாய்வான்
தோஷமென்ன உபரசங்கள் காரஞ்சாரம்
சுட்டவனே கடத்தேறுத் துரோகியாமே. (472)

ஆமப்பா யிதையறிந்து வல்லோரெல்லாம்
ஆசான்தான் சொன்னபின்பு அறிந்துசெய்வான்
ஓமப்பா யில்லாட்டாற் நூல்முறையேசெய்வார்
உத்தமர்கள் செய்வார்க ளிப்படித்தான்மைந்தா
வாமப்பா லுண்டுகொண்டு ஆத்தாளைக்கேட்பார்
வல்லமையாய்த் தேகசித்தி பண்ணினோர்கள்
சோமப்பா லுண்டுகொண்டு பார்ப்பார்கோடி
சுத்தரச வாதமங்கே சித்தியாமே. (473)

சித்திக்கும் வாமிக்குஞ் சிவயோகிக்கும்
செகமெல்லாஞ் சுற்றுகிற சித்தருக்கும்
சத்திக்கு மனதானல் வரமீவாள்
சார்பாகச் சிவயோகஞ் சேரச்செய்வாள்
ஒத்திக்குங் குளிகைதந்து ஆடச்செய்வாள்
உன்மனைக்கு மனதுவந்தா லுயரயேத்தி
முத்திக்கும் ஞானவழி யிதுதானென்பாள்
மூவருக்குந் தாயான மூலந்தானே. (474)

மூலமென்ற பாராபரையைப் போற்றுபோற்று
முத்திபுத்தி சித்துனக்கு வேணுமென்றால்
ஆலமுண்ட அரனைநித்தம் போற்றுபோற்று
அகண்டவெளி காணுதற்கே ஆசையானல்
நீலமுண்ட மேனியாம்துண் டலியைப்பாரு
நேர்பரைபோல் பளிச்சென்று நெட்டிட்டேறு
ஓலமென்ற திசைநாதங் குருபதத்திற்காணும்
உத்தமனே மதியமூர்த முண்ணலாமே. (475)

அமுர்தமுண்டால் காயசித்தி யாகுமாகும்
அப்பனே பொற்சிலைபோல் திரேகமாகும்
அமுர்தமுண்டால் தென்வடக்குக் கடலைத்தாண்டும்
அதுகடந்து மேருவுக்கு மப்பாற்கூடும்
அமுர்தமுண்டா லரைதனிலே பனிரெண்டாண்டு
அப்பனே யிருக்கலாம் ஞானசித்தி
அமுர்தமுண்டா லவனல்லோ ஞானயோகி
அதனாலே சித்தரென்ற நாமமாச்சே. (476)

சித்தரென்றும் வாமிசிவ யோகியென்றும்
செப்பியதோர் மகிமைவந்த திறத்தைக்கேளும்
நித்தரென்ற சிவன்விந்து கூடினதால்மைந்தா
நிறையான மூவருக்குங் கீர்த்தியாச்சு
பத்தரென்று முத்தரென்றுஞ் சொல்பேருண்டு
பரிவாக அவர்களுக்கும் வாதசித்தி
புத்தரென்றுஞ் சமணரென்றும் சமயமாறு
புகழ்பெரிய ஆயியைத்தான் பூசிப்பாரே. (477)

பூசிப்பா ரொருகோடி ரிஷிகளப்பா
பொற்பூவா லர்ச்சிப்பார் சித்தரப்பா
வாசிப்பா ரென்றுமனோன் மணிக்குள்யோகி
மகத்தான மெஞ்ஞானி போதத்தேநிற்பார்
ஆசிப்பார் வேதாந்தி வுடலைத்தூக்கி
அதனுடைய லகிரியினால் கண்டத்தேதத்துந்
தூசிப்பார் சண்டாளர் பானமுண்டு
சொக்கிநின்று வறுமையிலே சுழலுவாரே. (478)

சுழலாமல் பராபரையைப் பூசைபண்ணி
சுத்தசை தன்யத்தை மனதில்வைத்து
அழலாதே நிற்குணமே நிற்மயமேயென்று
அகண்டபரி பூரணமே யென்றுயர்த்திக்கொண்டு
உழலாதே யுன்மனையை யெண்ணியெண்ணி
உகந்துன்னை வாமிவன்பா லுன்மனைத்தாய்
தழலாதே மனங்கூடிச் சென்றுயேறு
சாதகமாய்ப் பிறவியற்றுச் சாருவாயே. (479)

நிமிளைச் சுண்ணம்,

சாரான நிமிளைக்கும் வங்கச்சுண்ணம்
தாக்கிப்பார் வீரமிட்டு வூதுவூது
சேரான சுண்ணும்பாம் நிமிளைச்சுண்ணம்
சீரான விதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நீரான சாரத்தி லப்பியூது
நேரான சுண்ணும்பு முன்போல்பண்ணு
ஆரான சாரத்தை வீரமிட்டாட்டி
அப்பனே துருசுக்கு அப்பியூதே. (480)

துருசுச்சுண்ணம்.

வூதையிலே சுண்ணும்பாந் துருசுதானும்
உத்தமனே யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
காதையிலே வழலைக்கு அப்பிப்போட்டு
கணக்கான சுண்ணும்பில் வைத்தேயாட்டு
மாதையிலே வழலைகடுஞ் சுண்ணமாகும்
மைந்தனே யிதையெடுத்து வீரத்தாட்டி
பாதையிலே சூடனுக்கு அப்பிப்போட்டு
பர்லைக வெண்கருவா லரைத்துக்கட்டே. (481)

சூடச்சுண்ணம்.

கட்டியதோர் சூடனைத்தா னூதச்சுண்ணம்
கலந்ததிலே வீரங்கல் லுப்புக்கப்பி
நெட்டியதோர் தணல்மேலே வூதச்சுண்ணம்
நேராக யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
தெட்டியதோர் காரத்துக் கப்பிப்போட்டு
சேர்ந்துலர்ந்த வில்லைதனை யெரித்துவூது
கொட்டியதோர் சுண்ணும்பாங் காரச்சுண்ணம்
கொள்கியதில் வீரமிட்டுக் குமுறஆட்டே. (482)

சீனச்சுண்ணம்.

ஆட்டியதோர் காரம்சீ னத்துக்கப்பி
அதையுலர வைத்துச்சுண் ணும்பில்தாக்கி
மூட்டியதோர் தீயெரித்து வூதச்சுண்ணம்
மூதண்டங் கிழிந்தாடுஞ் சீனவேகம்
ஒட்டியதோர் சீனத்தில் சாரமிட்டாட்டி
உத்தமனே செயநீராம் நீருக்குள்ளே
காட்டியதோர் கற்பூரப் பலகைபோட்டு
கலக்கியதை வாரியிட்டுக் குகையிலூதே. (483)

மால்தேவிச் சுண்ணம்.

குகையோடே சுண்ணும்பாய்க் கற்பூரம்நீறும்
கூப்பிட்டால் வாதங்கை கட்டிநிற்கும்
வகையோடே வீரமிட்டு எடுத்துஆட்டி
மாலினுட தேவிக்குப் பூசியூது
சுதையோடே சுண்ணுப்பாஞ் சலவைமிஞ்சி
தொட்டவிடம் பட்டவிட மெல்லாமீயம்
நகையோடே யிதுக்குள்ளே வீரமிட்டாட்டி
நலமான வங்கத்தி லப்பிப்போடே. (484)

வங்கச்சுண்ணம்.

போடப்பா புடமொன்று வங்கச்சுண்ணம்
புகழாகப் பூப்போலே பொருமிநீறும்
ஆடப்பா யிதைத்தொட்டால் கவரோகோடி
அரகரா சிவசிவா அறியப்போகா
நீடப்பா வங்கத்தில் வீரமிட்டாட்டி
நேரான நிமிளைக்கு அப்பியூது
சாடப்பா கடுஞ்சுண்ண நிமிளையாச்சு
சரக்குமுதற் சூதமெல்லாம் தார்க்கச்சாமே. (485)

சாரச்சுண்ணம்,

தாக்கப்பா நிமிளையிலே வீரமிட்டாட்டி
சாரத்தின் மேலப்பிச் சார்பாயூது
வாக்கப்பா கொள்ளாது சாரமாட்டு
வாய்திறக்கப் போகாது வல்லோர்காணுர்
நோக்கப்பா நோக்கிநின்ற பிரபஞ்சம்போல்
நுழைந்ததெல்லாம் நுழைந்தாடும் சாரவேகம்
நாக்கப்பா கொள்ளாது பாடவென்றால்
நாதாந்தத் தீசனன்று சொன்னவாறே. (486)

துருசிச் சுண்ணம்.

வாறுகேள் சாரத்தில் வீரமிட்டாட்டி
மகத்தான துருசியின்மே லப்பியூது
கூறுகேள் துருசியது வேகமெத்த
கொடியதொரு சிறுநாகங் கடித்ததொக்கும்
மேறுகே ளிறங்காது கெருடர்க்குமஞ்சா
யென்னசொல்வேன் துருசியுட சுண்ணத்தாட்டை
மாறுகே ளிதையெடுத்துச் சிங்கிகூட்டி
மக்களே சூதத்திற் பொட்டுப்போடே. (487)

சூதக்கட்டு.

பொட்டிட்டாற் சூதமங்கே உருண்டுசாகும்
புகழாகச் சூடனிலே வாட்டிக்கொண்டு
மட்டிட்டா லெண்ணைகுத்திக் கரண்டியாலே
மக்களே காரமிட்டுக் குகையிலாட்டி
கெட்டிட்ட பொன்போலே கண்விட்டாடும்
நேராக விதுவல்லோ சூதக்கட்டு
தொட்டிட்ட கட்டெல்லாஞ் சாரணைக்குஆகா
செப்புகிறேன் சாரணையைச் செப்புவேனே. (488)

சாரணை.

செப்புகிறேன் சூதமப்பா பலந்தானென்று
சேர்ந்துநின்று ஆடையில்பூ நாகச்சத்து
ஒப்புகிறேன் பலமொன்று யிதுக்குளீய்ந்து
உத்தமனே புடம்போட்டு நீத்தாயானால்
அப்புகிறேன் சூதத்தில் தீபனமோமெத்த
அசுரரைப்போல் வாங்கிடுமே கொடுத்ததெல்லாம்
துப்புகிறேன் பின்புகெந்திச் சத்தையீய்ந்து
துடியாகப் புடமிட்டுத் தீர்த்துயேறே. (489)

ஏறியபின் அப்பிரேகச் சத்தையூட்டி
இயல்பாகப் புடமிட்டுத் தீர்ந்தபின்பு
மாறியபின் சரக்கறு பத்திநாலும்
வகையான உபரசம்நூற் றிரண்டுபத்து
தேறியபின் நவலோகம் மூட்டித்தீர்ந்து
செயலாக ரத்தினமொன் பதையுமூட்டி
கூறியபின் னிருநூற்றி யஞ்சுமானல்
கொடியதொரு குளிகையது ககனமாமே. (490)

ககனகுளிகை.

ககனமிது லட்சவரை காதமோடும்
கலந்துயிர்தப் படியொருக்கால் தீர்த்தாயானல்
ககனமிது பத்துலட்சங் காதமோடுங்
கண்டுயிதைப் பின்னொருக்கால் தீர்த்தாயானல்
ககனமிது கோடிலட்சங் காதமோடும்
கண்டுமிதைப் பின்னொருக்கால் தீர்த்தாயானல்
ககனமிது நிற்புதமாங் காதமோடுங்
கடுவேகமாகுமின்னந் தீர்த்துப்பாரே. (491)

தீர்த்ததுவை பின்னொருக்கால் தீத்தாயானால்
சேர்ந்துநின்ற மதியளவுந் தொட்டிட்டோடும்
தீர்த்ததுவின் பேரென்ன அஷ்டமாசித்தி
சேர்ந்திதனைப் பின்னொன்று தீர்த்தாயானால்
தீர்த்ததுவின் பேரென்ன கமலினியுமாச்சு
தீயுண்ணுங் காற்றையுண்ணுஞ் சலத்தையுண்ணும்
தீர்த்ததுவின் பின்னேழு தீர்த்தாயானால்
செகமெல்லா மோடுகின்ற சொரூபமாமே. (492)

சொரூபமென்ற நாமமிதில் வந்ததென்ன
தொத்தாதார் பூரணத்தைத் தொத்திநின்றால்
அரூபமென்ற சடமாகுங் கத்தியோடும்
அப்பனே கற்பூர தீபம்போலாம்
நிரூபமென்ற நிஷ்களத்தில் யேத்தியாடும்
நேராக யிரவியிலே யிறங்கலாகும்
தருபமென்ற தருவினுட தமரிலேற்று
சூட்சாதி சூட்சமுற்ற காயமாமே. (493)

சொரூபமணி.

ஆமப்பா முத்தியொரு சாணையாஞ்சூதம்
அப்பனே ரெண்டிடையாந் தங்கமெட்டு
ஓமப்பா யுருக்கியொரு மணியாய்வாங்கி
உத்தமனே துரிசியொடு பூரச்சுண்ணம்
காமப்பால் விட்டரைத்து வீரம்போட்டுக்
கலந்தரைத்துக் குளிகைக்குப் பூசிப்போடு
சாமப்பா சூதமொடு தங்கம்ரெண்டும்
சாதகமா யஞ்சுசுண்ணக் குகையில்வையே. (494)

வைத்துஒரு புடம்போடப் பொருமிநீறும்
மகத்தான வஸ்துவினு லானசுண்ணம்
வைத்துயிதைப் பூசியப்பா ஆயிமுன்னே
வாதமுதல் காயசித்தி குளிகையாச்சு
வைத்துயிதில் வீரமிட்டுக் காரங்கூட்டி
மைந்தனே லிங்கமிட்டால் சங்கம்வேதை
வைத்துயிதில் புழுகிட்டுக் காரங்குத்தி
மத்தித்து லேகிக்க வெல்லாம்நீறே. (495)

நீரூச்சு சகலமெல்லா மொன்றிற்கோடி
நீத்தினத்தைக் கரைகாண வென்னூர்க்கூடா
வீரூச்சு யிக்குருவில் சவ்வாதுகாரம்
விளங்கியதோர் நாதவிந்து விட்டேயாட்டி
தாரூச்சு உபரசங்கள் சரக்கிற்பட்டால்
தங்கம்போல் நின்றுடும் வேதைகோடி
ஆரூச்சு சமுத்திரமாய்க் கண்டேயாடி
அனந்தவரை யிவ்வளவென் றடங்காவாறே (496)

அடங்காத வஸ்துவினு லாடுஞ்சுண்ணம்
அப்பனே அஞ்ஞூற்று யெட்டுமாத்து
திடங்காத பாதையிதிற் கோடாகோடி
சொல்லுதற்கு யென்னுலே சொல்லப்போகா
முடங்காத சூதத்திற் தங்கத்தையூட்டி
மூதண்டக் கடுங்கார சாரவித்தை
இடங்காத யிதினோடு நாதவிந்து
ஏற்றினுல் வஸ்துவென்ற வித்தைபாச்சே. (497)

வித்தையிலே வெகுசுறுக்கு வஸ்துவித்தை
விழுந்ததிலே பெருமைவந்த விருப்பென்ன
பத்தையிலே லவணமுண்டு சிவத்தைக்கூடி
பாங்கான குருபதத்தில் விந்துவாக
மத்தையிலே சத்தியுட சிவப்பாமெல்லாம்
மகிமையாய்க் குறியதனில் வந்ததினுலேயா
செத்தையிலே பட்டதீப் பற்றினுப்போல்
செகமெல்லா மிதினுலே செனித்தவாறே. (498)

செனித்ததென்ன நாதமது சத்தியாச்சு
சேர்ந்துநின்ற சுக்கிலத்தான் சிவமுமாச்சு
செனித்ததென்ன யிதினுலே சீவன்கோடி
சித்தர்முதல் ரிஷிகள்முத லிதினுல்தேகம்
செனித்ததென்ன யிதுரெண்டு மென்றுபார்க்கில்
சிகாரமொன்று வகாரமொன்று ரெண்டேரெண்டு
செனித்தரெண்டால் வாதத்தைத் தொட்டுஆட்டி
செகமேழுங் கொள்ளாது தெரிந்திடாதே. (499)

தெரியாத வஸ்துவித்தை சிவயோகிக்காம்
சித்தர்க்காம் ரிஷிகளுக்காம் மற்றோர்க்காகா
வரியாத சடமெடுத்த வல்லோர்ககாகும்
மாயமுற்ற காமிக்கு வம்சம்பாழாம்
தரியாத காமியென்றால் சடத்தைக்கொல்லுஞ்
சாதகமாய்ப் பிறவியிலே தள்ளுந்தள்ளும்
புரியாத வித்தையிது போக்காய்ச்சொன்னேன்
புகழாக அறிந்துமக்காள் பூட்டியாட்டே. (500)

பூட்டரிது யென்றுசொன்னீர் ஆதிவித்தை
புகழான சுண்ணம்பின் போக்குமெத்தவென்றீர்
காட்டரிது காட்டரிது ஞானமென்றீர்
கைமுறையா யோகத்திற் காணவென்றீர்
மூட்டரிது மூட்டரிது யினங்கண்டுஆடி
முன்னறிந்து பின்னறிந்து யூதரிதுவென்றீர்
நாட்டரிது நாட்டரிது மனஞ்சென்றேறி
நாயகமே யெங்கட்கு நாட்டுமுறைசொல்லே. (501)

வேடியுப்புச் சேயநீர்.

சொல்லுகிறேன் மக்களே யெல்லாங்கேளு
சுருக்கான வழியொன்று சூட்சங்கேளு
மல்லுகிறேன் வெடியுப்புப் பலந்தான்பத்து
மருவிநின்ற புளிபத்துச் சாரமொன்று
ஏல்லுகிறேன் சீனமொன்று கல்லுப்பொன்று
யிதுவெல்லா மிடித்துநன்றாய் வில்லையாக்கி
அல்லுகிற தீயிலிட்டா லெறிந்துயெல்லாம்
அப்பனே சுண்ணம்பாம் பனியில்வையே. (502)

வைத்துடனே செயநீரா முப்புச்சுண்ணம்
மக்களே சாரத்தி லிந்நீர்விட்டுக்
கைத்துடனே கல்வத்தி லாட்டுஆட்டு
கடுகெட்டாய் நெட்டங்க மட்டுமாட்டு
வைத்துடனே யிதையெடுத்து அண்டவோட்டில்
பக்குவமாய் வைத்துமொரு புடத்தைப்போடு
வைத்துடனே பனியில்வைக்கச் செயநீராகும்
மக்களே கடுங்காரச் செயநீர்தானே. (503)

## வேங்காரக் கட்டு.

தானென்ற வீரமொன்று பூரமொன்று
சாதகமா யிந்நீரி லரைத்துக்கொண்டு
கானென்ற வெண்காரப் பலகைமீதில்
கலந்தவுப்புக் கலந்தவுப்புக் காயக்காய்
வானென்ற ரவிபடவெண் காரங்கட்டும்
மகத்தான முழுக்கட்டு மைந்தாபாரு
கோனென்ற வெண்காரஞ் செந்தூரம்பின்
குணமாக யின்னமொரு குறிசொல்வேனே. (504)

குறியான வெண்காரஞ் சாரநீர்குத்தி
குலர்வியதோர் மூன்றிடைதா னரைத்துக்கொண்டு
நெறியான துருசியொன்ப திடையின்மேலே
நேராகப் பூசியதை உலரப்போட்டு
மறியான ரவிபடவே பசுமையாகும்
மைந்தனே பின்பதிலே செயநீர்பூசி
செறியான தீமேலே வாட்டுவாட்டு
சேர்ந்ததிலே பச்சைநிற மாகும்பாரே. (505)

பாரப்பா சீனத்தில் வெடியுப்புநீரை
பாய்ச்சியிதைப் பொடிபண்ணி ரவியிற்போட
நேரப்பா சுண்ணும்பாய் நீறிப்போகும்
நேரான கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
சாரப்பா யிதுக்குள்ளே முன்வைத்ததுருசு
சாதகமாய் மூடியதை யடுப்பிலேற்ற
நீரப்பா செத்துமே துருசுகட்டும்
நிலைத்ததப்போ வாதமென்று நினைத்துக்கொள்வே. (506)

நினைத்ததிந்தத் துருசொன்று சாரமொன்று
நேராக முன்வைத்த காரம்நாலு
முனைந்துயிதில் தாளகந்தா னொன்றுபோட்டு
மூட்டியந்தச் சாரநீர் விட்டேயாட்டி
புனைந்துயிதை மூன்றுபங்கு பண்ணிவைத்து
புகழான அயப்பொடிதான் பத்தொன்றிட்டு
இனைந்தகன்றய்க் குகையில்வைத்தே ஊதலூது
யேகமணி யாயிருக்கு மெடுத்துப்பாரே. (507)

எடுத்துப்பார் அயந்தன்னை நொறுக்கிக்கொண்டு
இதமாகப் பின்னுமொரு பங்குகூட்டி
மடுத்துயிதைப் பின்னொருக்கால் குகையிலாட்டு
மணிதிரண்டு சத்துப்போ லாகிநிற்கும்
தொடுத்துயிதை யின்னுமொரு பங்குகூட்டி
சுகமாகக் குகையிலிட்டுத் தாக்கியூது
அடுத்துயிதை யுருக்கிப்பார் சவடோயில்லை
அப்பனே பூச்சிதறும் அறிந்துகொள்ளே. (508)

அறிந்துகுகை பார்த்திந்த யிடைக்கித்தங்கம்
அப்பனே கூட்டியொன்றா யுருக்கும்போது
மறிந்துயிந்த யிடைக்கொக்க நாகம்போடு
மருவியிந்த நாகத்திற் காரமிட்டுஆட்டு
செறிந்துநின்று வுருகுமந் திடைக்குலிங்கம்
சீராகக் காரமிட்டுத் தாக்குதாக்கு
நெறிந்துநின்ற களங்காகும் ரவிமதியாம்ரெண்டில்
நேராக ஐம்பதுக்கு வொன்றுபோடே. (509)

மும்மூலம்.

போடப்பா மாத்தெட்டு புடத்துக்கேகா
புகழ்பெரிய தொழிலையெல்லாம் பிறகுபாரு
நீடப்பா சுண்ணும்பின் கருவையெல்லாம்பாரு
நேராகக் கட்டினதோர் துருசோகோடி
ஊடப்பா குருவாகுஞ் செந்தூரமாகும்
உத்தமனே சுண்ணும்பா பூதிப்பாரு
நாடப்பா முன்கட்டுங் காரத்தின்மேல்
நலமாகத் திரிகுணசத் தைலமூட்டே. (510)

ஊட்டியதோர் தைலமெல்லாங் காரமுண்ணும்
உத்தமனே அதின்பிறகு வீரம்பூசி
காட்டியதோர் சீனச்சுண் ணும்பில்வைத்து
கலந்தெதறிக்கச் செந்தூர மாகும்பாரு
மாட்டியதோர் செந்தூரம் நவலோகத்துள்ளே
அப்பனே யன்பதுக்கொன் றிடவேதங்கம்
கூட்டியதோ ரிந்தமுறை முன்னேபார்த்து
கொள்கிமக்காள் மனந்தேறிக் குறியைப்பாரே. (511)

குறியான லெட்சயந்தான் மும்மூலத்துள்
கொள்கியந்தக் கேசரியால் கூடிப்பாரு
நெறியான கீழ்மூலம் பனீரென்றுக்கால்
நெட்டிட்ட ரெண்டும்போ லாறுங்காணும்
பிறியான நடுமூலம் கண்டம்நின்றால்
பிறிகிறதோர் பனிரெண்டில் நாலுங்காணு
மறியான மேல்மூலம் புருவநடுவானால்
மக்களே துவாதசத்தின் வழியோடேறே. (512)

வழியோடே யேறப்பா வாசிகொண்டு
மனஞ்செவ்வையாய் நெட்டிட்டு கலந்துயேறும்
வெளியோடே யேறுமட்டு மனந்தானுசான்
வெளியிலே மனம்புக்கில் வெட்டவெளியுலொண்டு
ஒளியோடே வெளிகூடும் வெளியொளியாய்க்காணும்
ஓகோகோ மூன்றுவகை கடந்துசென்றால்
தளியோடே யுன்மனத்தா யங்கேநிற்பாள்
சதகோடி ரவிமதியாங் காந்திதானே. (513)

பிரபஞ்சம்.

காந்தியிலே மயங்காதே தாயைப்போற்று
காட்டுவாள் தமரோடே சென்றுயேறு
சாந்தியிலே அந்தஅகண் டத்தைப்பாரு
தானுமில்லை நீயுமில்லை பொய்யேபொய்யே
ஏந்தியிலே நிர்மலத்தி லடங்கிப்போனூர்
யேகமாய் நின்றதொன்று பின்னொன்றில்லை
வாந்தியிலே விழுந்தவன்னம் பேலேயப்பா
மாயப்பிர பஞ்சத்தை விட்டுயேறே. (514)

ஏறப்பா யோகமுதல் ஞானஞ்சொன்னேன்
யேற்காமற் பார்ப்பதற்கு வாதஞ்சொன்னேன்
தேறப்பா வென்றதிலே வழக்காஞ்சொன்னேன்
சேர்ந்துணர்ந்த பெரியோர்க்குச் சித்திமுத்தி
பேறப்பா பெறுங்களென்று வெளியாய்ச்சொன்னேன்
பேய்ப்பிள்ளை யானாலுந் தள்ளமனதற்று
வீரப்பா யென்னைப்போலே யார்தான்சொல்வார்
வேதாந்த சாரத்தை மேவிப்பாரே. (515)

மேவியதோர் பராபரமாம் மூலனுயன்
விளங்கியதோர் பதமலரே விரைந்துபோற்றி
ஏவியதோர் கமலமுனி பாதம்போற்றி
யெண்யாண்டு ரட்சித்த போகர்பாதம்போற்றி
காவியதோர் காவியந்தான் முக்காண்டஞ்சொன்னேன்
கடைந்ததிலே யெடுத்தபிர்த அஞ்ஞூறுஞ்சொன்னேன்
தாவியதோர் பூரணத்தைக் கைக்குட்காட்டுஞ்
சமுசயங்க ளொன்றுமில்லை சார்ந்துபாரே. (516)

பதினேண் அங்கம்.

பாரப்பா யங்கமிதிற் பதினெட்டுஞ்சொன்னேன்
பார்க்கிறதோர் பெரியோர்க்கு அஞ்ஞூறுநன்று
நேரப்பா அஞ்ஞூற்றை மலைதோறுஞ்சித்தர்
நேர்ந்துயிதை யொளித்துவிட்டார் வெளிகாட்டாமல்
சேரப்பா மலைகளிலே நம்முடையவர்க்கம்
செப்பறிய கோடான கோடிபந்து
ஊரப்பா யிருந்தாலே மாயமூடும்
உத்தமனே மலையேற ஞானமாமே. (517)

ஆமப்பா அஞ்ஞூற்றைப் பார்த்தோர்க்கெல்லா
மருளோடு பொருளாகும் அதீதங்காணும்
ஓமப்பா வென்றுநின்ற குண்டலிதானோங்கும்
ஒடுங்கியிந்தக் ககனமூல கத்தைச்சுற்றும்
வேமப்பா நல்வினையுந் தீவினையுங்கெட்டு
வேதாந்த சாரத்தை விரைந்துயேற்றும்
நாமப்பா கண்டதிரு மூலர்பதம்போற்றி
நலமாகச் சொல்லிவிட்டேன் அஞ்ஞூறுமுற்றே. (518)

கொங்கணர் நடுக்காண்டம் 500.

முற்றிற்று.

இல்லையேட்டுப் பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்டது
காகபுசண்டர் பெருநூல் காவியம் 1000. 1-8-0
இராமதேவர் வைத்திய காவியம் 1000. 1-0-0

உ

குருவே துணை.

# பொருள் அட்டவணை.


| | பக்க நிர் |
|---|---|
| **அ.** | |
| அறியாமூடர் | 31 |
| அண்டச் செந்தூரம் | 38 |
| அறியாமூடர் | 48 |
| **ஆ.** | |
| ஆதிக்குரு | 47 |
| ஆறுதலங்காண | 73 |
| **இ.** | |
| இந்தொன்று ரவியொன்று | 12 |
| **உ.** | |
| உப்புக்கட்டு | 5 |
| உப்புக்கட்டு | 43 |
| உப்பின் போக்கு | 44 |
| உலகஞானி | 82 |
| ஷை | 103 |
| **ஏ.** | |
| ஏமவித்தை | 114 |
| **ஒ.** | |
| ஒடுக்க விபரம் | 80 |
| **க.** | |
| கற்பூரக்கட்டு | 59 |
| கற்பூரச் சுண்ணம் | 59 |
| கட்டுவகை | 61 |
| களங்குச்செந்தூரம் | 85 |
| கல்லுப்புச்சுண்ணம் | 109 |
| ஷை | 117 |
| கற்பூரச்சுண்ணம் | 117 |
| ககனகுளிகை | 125 |
| **கா.** | |
| காப்பு | 3 |
| காயசித்தி | 115 |
| **கி.** | |
| கிட்டிடினங்கூறல் | 39 |

| | பக்க நிர் |
|---|---|
| **கு.** | |
| குண்டலியோகம் | 26 |
| குளிகையின்போக்கு | 27 |
| குருஉபதேசம் | 65 |
| குருபாதம் | 71 |
| குளிகை | 76 |
| **கெ.** | |
| கெந்தகக் கட்டு | 88 |
| **ச** | |
| சடத்தின்கூறு | 40 |
| சத்திநிலை | 42 |
| சடம்விழுந்தால் | 78 |
| சத்தி சொரூபம் | 55 |
| சரக்குகள் மடிதல் | 57 |
| சட்டைமுனி நூல்பார்க்க | 113 |
| சாரவித்தை | 37 |
| சாரப்பெருமை | 51 |
| சாரச்சுண்ணம் | 110 |
| ஷை | 116 |
| சாரச்சுண்ணம் | 124 |
| சாரணை | 125 |
| **சி.** | |
| சிங்கி | 68 |
| சீனச்சுண்ணம் | 35 |
| சீனச்சுண்ணம் | 1[illegible]3 |
| **சு.** | |
| சுண்ணப்போக்கு | 29 |
| ஷை | 36 |
| சுண்ணஆதி | 62 |
| சுண்ணக்கரு | 63 |
| சுரபிக்குளிகை | 60 |
| **சூ.** | |
| சூதக்கட்டு | 70 |
| சூதச்சுண்ணம் | 111 |

# அட்டவணை.


| | பக்க நிர் |
|---|---|
| சூதம்சுட்ட தோஷம் | 121 |
| சூடச்சுண்ணம் | 12.; |
| சூதக்கட்டு | 125 |
| சூதத்தின்வேதை | 46 |
| சூதமணி 53 ஷை சுண்ணம் | 53 |
| சூடன் | 58 |
| சூதக்குளிகை | 69 |
| செயநீர் | 52 |
| செனனமார்க்கம் | 33 |
| செயகெந்தி | 120 |
| சொரூபமணி | 126 |
| **ஞா.** | |
| ஞானம் | 41 |
| **த.** | |
| தங்கச்சுண்ணம் | 99 |
| தாளகச்சுண்ணம் | 108 |
| தாளகச்சுத்தி | 108 |
| தாளகச் சுண்ணத்தால் வங்கச்சுண்ணம் | 10 |
| தாளகச்சுண்ணம் | 96 |
| தாளகச்சுண்ணம் | 99 |
| தீயோர்செய்கை | 25 |
| **து.** | |
| துருசுக்கட்டு | 66 |
| துருசுவைப்பு | 66 |
| துருசுச்சுண்ணம் 110, ஷை | 118 |
| துருசுச்சுண்ணம் | 123 |
| துருசுச்சுண்ணம் | 124 |
| **நா.** | |
| நாகசுத்தி | 99 |
| நிமிளைச்சுண்ணம் | 100 |
| நிமிளைச்சுண்ணம் 109, ஷை | 117 |
| நிமிளை 4-க்கு விபரம் | 119 |
| நிமிளைச்சுண்ணம் | 123 |
| **ப.** | |
| பதினாறுவேதை | 77 |
| பதினெண் அங்கம் | 132 |
| பிறப்பிறப்பு | 101 |

| | பக்க நிர் |
|---|---|
| பின்சென்மம் | 119 |
| பிரபஞ்சம் | 131 |
| புத்திகூறல் | 32 |
| பூரணப்பெருமை | 25 |
| பூரணம் | 34 |
| பூரச்சுண்ணம் | 95 |
| பொற்குருவேதை | 32 |
| பொய்ஞானி | 50 |
| **ம.** | |
| மயக்கம் | 114 |
| மாற்றுக்காணும்வகை | 98 |
| மால்தேவிச்சுண்ணம் | 124 |
| மும்மூலம் | 130 |
| மேல்மூலம்நடுமூலம்,கீழ்மூலம் | 98 |
| **யோ.** | |
| யோகியின் தன்மை | 26 |
| **ர.** | |
| ரசத்தின் பெருமை | 91 |
| **வ.** | |
| வங்கச்சுண்ணம் | 100 |
| வங்கச்சுண்ணம் | 109 |
| வங்கத்தின் பெருமை | 112 |
| வழலைச்சுண்ணம் | 5 |
| ஷை | 52 |
| வங்கச்சுண்ணம் | 117 |
| ஷை | 124 |
| வாதஆதிவீரம் | 73 |
| விட்டகுறை | 79 |
| வீரஉற்பத்தி | 74 |
| வீரமணி | 31 |
| **வெ.** | |
| வெங்காரக்கட்டு | 27 |
| வெடியுப்புக்கட்டி | 43 |
| வெட்டுமார்க்கம் | 64 |
| வெடியுப்புவேதை | 75 |
| வெடியுப்புச் செயநீர் | 128 |
| வெங்காரக்கட்டு | 129 |
| வேதைப்போக்கு | 129 |

உ

பரமபதி துணை.

## இ. ராம. குருசாமிக்கோனர்: ஸன்,

புத்தகஷாப், புதுமண்டபம், மதுரை.

---

பதினெண் சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய

### வைத்திய வாதயோக

# ஞானசாஸ்திரத் திரட்டு.

வெகுகாலமாக அச்சுக்கு வராமல் இருந்ததும், அநேக ஏட்டுப் பிரதிகளில் புதைபொருளாய்க் கிடந்த பதினெண் சித்தர்களால் பாடிய அநேக நூல்களை ஆங்காங்குபோய்ச் சேகரித்துக் கொண்டுவந்து பாகம் 1-க்கு சுமார் 270-பக்கங்களாக 10-பாகங்கள் அச்சிட்டிருக்கிறது இதில் வைத்தியமும்; வாதமும்; யோக ஞான மார்க்கம் அடைவதற்கு முக்கிய சாதனங்களும்; யோகஅப்பியாச முறைகளும்; கற்பமுறைகளும்; தீட்சை விதிகளும் தெளிவாகச்சொல்லியிருக்கிறது. நயம்பதிப்பு கலிக்கோ பயிண்டு பாகம் 1-க்கு விலை ரூ. 1—8—0

---

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகக் கற்றுக்கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துரு விபரங்கள் சொல்லியுள்ள புதிய சாஸ்திரம் கலிக்கோ பயிண்டு விலை ரூ 1—12—0

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி'

இதில் பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்களையும், கடைச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், இருபத்தைந்து உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம்செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், உபரசச் சரக்குகள் 120க்கும் பரிபாஷைப் பெயர்களையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், பஞ்சபூதச் சரக்குகளின் பரிபாஷைப் பெயர்களையும், நிகண்டுகளின் பரிபாஷைபெயர்களையும்விபரமாய்க் கூறியுள்ளது ஷை புஸ்தகத்தை சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும், முக்கியமாய் இதை வாங்கிப்பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்பார்த்துப் படித்து இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன். 280-பக்கங்கொண்ட கலிக்கோபயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ 1-12-0

---

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

# இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கரு விபரங்களும், பஞ்சபூதங்களின் விபரமும், பற்பசெந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோகமுறைகளும், ஞானங்களும் விரிவாய்க் கூறியுள்ளது. விலை ரூ 1—0—0

உ

பரமபதி துணை.

# புதிய புத்தக கேட்லாக்

## இ. ராம. குருசாமிக்கோனார் சன்

புத்தகஷாப், புதுமண்ட்டபம், மதுரை.

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி.

( இது ஓர் பெரிய வைத்திய அகராதி. )

பச்சிலைகளின் பரிபாஷைப் பெயர்கள், பஞ்சபூதச் சரக்குகள், உபரசச் சரக்குகள், 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகைகள் உப்பாகுஞ்சரக்குகளின் விபரமும், மருந்துகள் செய்யச் சரக்குகளின் சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரமும், 64 பாஷாணங்களின் பெயர்களும், அதற்கு சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும், 4448வியாதிகளின் விபரங்களையும் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தைப் பார்க்க வேண்டியதவசியம். 280 பக்கங்கள் கொண்டது. புத்தகம் 1க்கு ரூ 2...0...0

## அகத்தியர் பரிபாஷை 300.

ஓலைச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் அச்சிட்டு வெளிவந்தது (பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் முன்னம் இருந்து வருவதில் இது பின்பாகம் மூன்று காண்டங்கள் புதிதாக இப்பொழுது அச்சிட்டது புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் கற்ப மூப்புக் குருநூல்

இதில் கற்பம், கற்ப தீட்சை, முப்பூ முடிக்கும் விபரம், பற்பம் செந்தூர முறைகள், சுண்ணம், மெழுகு, தைலம், வாலை பூஜா விதிகளும் தெளிவாகச் சொல்லியது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் இதுவரையும் வெளி வராதது இதில் ஞானம், யோகம், இன்னதென அவ்ரவர்களே எளிதில் தெரிந்து கொள்வதுடன் தன்னைத் தானறிந்து ஞான யோக சாதனை யடைந்து கற்ப தேகி யாகும் விபரங்களும் சொல்லி யுள்ளது. புத்தகம் 1க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம். வைத்திய காண்டம், வாத காண்டம், சுண்ணக் காண்டம், செந்தூரக் காண்டம், பற்ப காண்டம், தைலக் காண்டம், கற்ப காண்டம், யோக ஞான காண்டம், தீட்சா விதிகாண்டம், சாபநிவர்த்தி காண்டம், ஜால காண்டம், மந்திர காண்டம், ஆக 12 காண்டங்கள் புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக் கோலம் 200, கனக மணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிறுக்கு நூல் என்னும் கிரிகை சாஸ்திரம் ஆக 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாசாணங்க ளில்லாது கடைச் சரக்குகளைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்களையும் தீர்க்கும் முறைகளைச்சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களும், தெளிவாகக் கூறியுள்ள அரிய சாஸ்திரம். இதுவரை வெளிவராத நூல், புத்தகம் 1க்கு அணா 0...12...0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

## பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.
புத்தகம் 1-க்கு விலை அணா 0—3—0

# அகத்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் ஏட்டுப் பிரதியாக அனுபவத்தில் யிருந்து வந்தது இம் முறைகளை யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம், மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க பாகங்களாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

## அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இதில் பதினெண் சித்தர்களால் பாடிய நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அதிலுள்ள மர்மமான பதங்களை புலத்தியர் கேட்க அகத்தியர் அதன் தாத்பரியங்களை தெளிவாகச் சொல்லியது.

புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

## அகத்தியர் பூஜா விதி 200.

## ஞான சைதன்யம் 51ம் சேர்ந்தது.

இதில் சிதம்பரச் சக்கரமும் ஷை பூசையும் அட்ட கன்ம பூசா விபரங்களும், தேவி பூசா மார்க்கமும், மவுன யோக ஞான சாதனம் விபரமாய்க் கூறியுள்ளது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## அகத்தியர் வகார சூத்திரம் 200.

ஷை சுருக்கம் 100ம் சேர்ந்தது.

இதில் வகார முறைகளும், யேக மூலிகை யின்ன தென்ற விபரமும் குரு முடிக்கும் விபரமும் தெளிவாய் யாவருக்கும் நன்கு புலப்படு வண்ணம் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் மூலிகை என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வகாரம் முடியுமென்றும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும், இன்னு மநேக பரிபாஷைப் பெயர்களையும் விபரமாகச் யிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

குரு. இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

# போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடு விதமும், அக்காலத்தில் ஏற்படும் சூடு சோபதாபங்களுக்கு வேண்டிய கிஷாயங்களும், ஸ்நானம் செய்யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங்களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் செய்ய வேண்டிய முறையும், வாத முறைகளும், சுத்தி முறைகளும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம். புத்தகம் 1க்கு விலை அணா 0...10...0

# உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது. இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 மட்டுந்தான் முன் அச்சிட்டிருக்கிறது இப்பொழுது இந்தப் பரிபாஷை 300 அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

# கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 மாத்திரம் முன் அச்சிட்டிருக்கிறது முதல் காண்டமும், நடுக்காண்டமும் இதுவரை கிடைக்காமலிருந்து இப்பொழுது நடுக்காண்டம் 500 மாத்திரம் ஒரு ஏட்டுப் பிரதி கிடைத்து அச்சிட்டிருக்கிறது.

புத்தகம். 1-க்கு விலை அணா 0—10—0

# தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

ஞானவெட்டி 1500-க்கு சூஸ்திரமான

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் பூநீர் முப்பூ வழலை விபரங்களும், தெளிவாகக் கூறியுள்ளது புத்தகம் 1க்கு விலை அணா 0—14—0

# யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகம் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள் மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும், யோக ஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது புதிதாக அச்சிட்டது. புத்தகம் 1க்கு விலை அணா 0—8—0

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இதில் ரசவாதத்துக் குறிய செம்பு வேதை, செம்புச் செந்தூர வேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தகத் தைலம், நாகரச கெந்தி, 'தைலத்தின் பெருமை, தங்க உரம், வெள்ளி உரம், செய்யும் முறைகளும். சரக்கு கட்டு வகைகளும், செந்தூரம், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாக ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை அணா 0...8...0

## காக புசண்டர் 1000.

இவர் பிரளைய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளைய காலத்தையும் பார்த்துவந்தவர். ஷை யாரால்பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இதுவரை ஏட்டுப் பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரமும் இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250 - பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

## யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவராக இருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசியதில் அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோக முறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புத்தகங்களாகப் பயிண்டு செய்திருப்பதால் தனித்தனியாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோக முதலிய விபரங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானையாகவும், பல சந்தங்களாக இக்கலியுக தருமம் எவ்விதம் நடைபெறு மென்பதை விபரமாயும் சூட்சம மாயும் சொல்லியிருக்கிறது.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

# இராமதேவர் சிவயோகம்

இதில் யோகம், நிஷ்டை மார்க்கம், வகாரம், மருந்து, பஞ்ச பூதங்களின் விபரம், முதலிய வகைகளை விபரமாகக் கூறியிருக்கிறது. 200 பாடல்கள் அடங்கியது. புத்தகம் 1க்கு விலை அணு 0...6...0

# இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகள், சத்துரு மித்துருச் சரக்குகள், தைலமுறைகள், வைத்திய முறைகள், அஷ்டகர்ம விபரங்கள், கருமான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரம், பற்பம், செந்தூரம், சுண்ணம், செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது. புத்தகம் 1க்கு விலை ரூ 1—0—0

## விஷ வைத்திய மென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பது ஆரூட சாஸ்திரங்கள் ஒரேபுத்தகமாகச் சேர்ந்துள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காலி, பூரான், செய்யான், வண்டு, முதலானவைகளால் விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச் சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்கு எளிய முறைகளாய்ச் சமயோசிதம் போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது. 392-பக்கங்கள் கொண்ட புத்தகம் 1க்கு விலை ரூ 2—0—0

## உலகரகசிய வெளிப்படை யென்னும்பஞ் சலட்சணத்

# திருமுக விலாசம்.

சோதிடர், வைத்யர், சாமியார், கோடாங்கி, தட்டார், தாசி, காசுக்கடைக்காரர், ஜவுளிக்கடைக்காரர், லேவாதேவி செய்வோர், முதலான வர்கள், தங்கள் சாமர்த்தியத்தால் ,பிறர்கள் தெரிந்துகொள்ளா வண்ணம், செய்யும் ஏமாற்றங்களையும், சாமர்த்தியங்களையும், வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிறது இதை வாசிப்போர் கேட்போர் பிறர்களிடம் எவ்வகையிலும் ஏமாந்துவிடாது இருந்துகொள்ளலாம் படிக்கப்படிக்க விடாநகைப்பை உண்டு பண்ணும். ரூ 1—0—0

## கோரக்கர் மலைவள சாஸ்திர மென்னும்

# மலை வாகடம்.

இந்நூலில் திருவனந்தபுரம் மென்னும் மலையாள எல்லையி லிருந்து நீலகிரி மலை வரையிலு முள்ள எல்லா மலைகளையும், அம் மலைகளில் ஆங்காங்கு கிடைத்தற் கரிதாகிய பொருள்களையும், சித்தர்கள் குகை வாசஞ்செய்து வந்த இடங்களையும், முப்பூவின் மர்மங்களையும், உதகங்களின் விபரங்களையும், மூலிகை, கற்பம், இவைகளிருக்கு மிடங்களையும், அவைகளை எடுத்து உபயோகிக்கு மார்க்கங்களையும் யாவரும் எளிதில் தெரிந்து கொள்ளு வண்ணம் வசன ரூபமாகக் கூறியிருக்கிறது. கிளேஸ் கடிதம் புத்தகம் 1க்கு விலை ரூ 1...8...0

## சோலைமலை பெரிய அழகர் வர்ணிப்பு

இதில் சோலைமலையி லெழுந்தருளியிருக்கும் அழகமலையாண்டாரின் அலங்காரச் சிறப்பும், குதிரையின் அலங்காரச் சிறப்பும், மலை விசேடமும், தீர்த்த விசேடமும், பதினெட்டாம்படி விசேடமும், மதுரைக்கு வந்து வண்டியூர் சென்று திரும்பவும் அழகமலை போகும் வரை பூராவும் வர்ணிப்பாகப் பாடியிருக்கிறது. விலை அணா 0—2—0

## கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடித்துக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமியாடிகளுக்கும், ஆருடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் மிகவும் முக்கியமானது. புத்தகம் பாகம் 1-க்கு விலை அணா 0—3—0

## அருணகிரி நாதர் திருப்புகழ்

அரும்பதவுரையுடன்

சிவசுப்பிரமணியக்கடவுள் அருட்பிரசாதத்தால் அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ள சில முக்கிய திருப்புகழ் பாடல்களுக்கு தமிழ் சங்கத்தாரால் அரும்பதவுரை யெழுதியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

இருபத்தோர் நூல்களடங்கிய

## அகஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# புதிய சாஸ்திர கோர்வை.

அகத்தியர் பாடிய லெட்சக்கணக்கான நூல்களில் சில நூல்கள் மட்டும் அச்சிட்டு வெளி வந்திருக்கிறது. என் கைவசமுள்ள ஓலையேட்டுச் சுவடிகளில் அகத்திய முனிவரால் பாடியுள்ள சுவடிகளை அச்சிட்டுக் கோர்வையாய்ச் செய்து வெளியிட வேண்டுமென்ற எண்ணத் துடன் இப்பொழுது புதிதாயச்சிட்டுக் கோர்வையாக வெளியாக்கி யுள்ளேன். இந்நூற்களில் மானிட சென்மம் யெடுத்த நாம் இச்சென்மம் கடைத்தேரும் பொருட்டு ஞானம் அடையவும் அதற்கு முதன்மையாகத் தெரிந்து கொள்ள வேண்டிய தீட்சை முறைகள், யோக அப்பியாச முறைகள், கற்ப சாதனை முறைகள், பத்திய பாக முறைகள் அதற்குறிய வைத்திய சிகிட்சை முறைகள், இன்னுமநேக விஷயங்களை எழிதாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விபரங்கள் பூராவுமடங்கியது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 9—0—0

எப்பொழுது அச்சிட்டு வருமென எதிர்பார்த்திருந்த அ. சங்கரமூர்த்திக் கோனாரவர்களால் பாடிய ஸ்ரீமத்

# பாகவத அம்மானை.

ஆப்டோன் சித்திரப் படங்களுடன்

எண்ணுதற் கரிதான ஸ்ரீகண்ணன் லீலை யெனும் ஸ்ரீமத் பாகவதத்தை அ: சந்த்ரமூர்த்திக் கோனாரவர்களால் அம்மானைப் பாவாக விசித்திர விநோதமாகவும் சொன்னயம் பொருணயம் முதலிய 10 வித அழகும் பொருந்தக் கடல் மடை திறந்த வெள்ளம் போல் பாடியுள்ளது கதைபாடும் மற்ற அம்மானைகளைப் போல் நினைக்கவேண்டாம் இப் பாடல்கள் இலக்கணம் இலக்கியத்துடன் வெண்பாச் சீர்களாக உவமானம் உவமயத்துடன் ஆழ்ந்த கருத்துகளமைத்துக் கூறியிருப்பதால் இது கவிவாணர்களும் மற்றுள்ளோர் யாவர்களும் வாங்கிப் படித்து ஆனந்திக்க வேண்டிய் தவசியம் ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த அத்தியாயமான 10, 11. 12, ஸ்கந்தங்கள் முடிய திக்கு கடிதத்தில் சுத்தப் பதிப்பாக அச்சிட்டு 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமாக கலிக்கோ பயிண்டு செய்த புத்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

### வைத்திய வாத யோக

# ஞான சாஸ்திரத் திரட்டு.

பதினெண் சித்தர்களால் கூறிய லட்சக்கணக்கான சாஸ்திரங்களில் சில கிடைத்ததை மட்டும் அச்சிட்டு 18 சித்தர்கள் ஞானக்கோர்வை யென விற்பனை செய்து வருகிறது. இன்னுமநேக சாஸ்திரங்கள் ஏட்டுச்சுவடியிலிருந்ததை ஆங்காங்கு சென்று ஏராளமான பொருள் கொடுத்து வாங்கி வந்து 10 பாகங்களாக அச்சிட்டு பாகம் 1-க்கு 30 முதல் 40 வரை சேர்த்து அச்சிட்டிருக்கிறது இது யோக ஞான சாதனமடைய விரும்பும் ஒவ்வொருவரும் வாங்கி தமக்கு இப்பிறவியில் கிடைத்திருக்கிற அரிய மானிடஜென்மத்தைக் கற்பயோக ஞான சாதனைகளால் அழியாது வெகு கால மிருந்து சாயுட்சிய பத மடைவதற்குள்ள மார்க்கத்தை யறிவிக்கும் சாஸ்திரமிதுவே யாகும்

10-பாகங்கள் பாகம் 1-க்கு விலை ரூ 1—4—0

# அகத்தியர் தத்துவம் 300.

### இது சித்தர் பதினெண்பேர் கூறிய நூல்களுக்கும் திறவுகோலாகும்.

இந்த சாஸ்திரத்தில் ஞானத்தின் பெருமையையும், ஞானிகளின் மகத்துவத்தையும், பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய நூல்களிலுள்ள சில முக்கிய மருந்து பாகங்கள் முடிவுக்கு வராதிருப்பதின் காரணமும் அந்தந்த நூல்களில் மறைத்து வைத்த பொருள் இன்னதென விளக்கிக் காட்டியும், அதைச் செய்து முடிக்கக்கூடிய பக்குவத்தையும் கூறியிருக்கிறது அன்றியும் லோகச் சரக்குகளைக் கட்டு முறைகளும் ஆத்மதத்துவம், வடணை, தத்துவ தெரிசனம், பஞ்ச பூதத்தின் கூறு வகையையும், மௌனத்தின் விபரம் இன்னதென்பதையும் கற்பத்தின் பெருமையையும், அவைகளைச் சாப்பிடவேண்டிய பக்குவத்தையும் மற்றுமநேக இரசியங்களையும் வாதகாண்டம், வயித்தகாண்டம், ஞானகாண்டம் யென மூன்று காண்டங்களாகக் கூறியிருக்கிறது சித்தர் நூல்கள் பார்க்கும் ஒவ்வொருவரும் இந்த சாஸ்திரத்தையும் பார்க்க வேண்டியதவசியம். புத்தகம் 1-க்கு விலை ரூ 0—12—0

குரு இராமசாமிக்கோன் புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.